janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூன் 12 - ஜூன் 18 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 10






**வெட்கக் கேடு, பிரதமரே**

அன்புள்ள பிரதமர் மோடிஜி, வெட்கமில்லாமல் இருப்பது காற்றில் கோட்டை கட்டும் வார்த்தை >>> ப 16



**ஜனசக்தி ராதாவுக்கு வயது 101**

நூறு ஆண்டுகள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை கம்யூனிஸ்டுகளிடம் தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் >>> ப 08



**எதற்கு இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்?**

ஒன்றிய அரசு, தான் வெளியிட்டுள்ள நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் கூடிய விரைவில் >>> ப 03

## புதிய தலைமையின் கொடூர செயல்களைத் தடுத்திடுக!

# உள்ளாட்சி தொழிலாளர் குறை தீர் ஆணையம் அமைத்திடுக!

தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனப் (ஏஐடியூசி) பொதுக்குழு கூட்டம் 30.05.2022 அன்று நீலகிரி மாவட்டம், வெல்லிங்டன் ஜஎம்ஏ அரங்கில் சம்மேளனத் தலைவர் ஆர். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி இன்றைய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து பேசினார். சம்மேளனப் பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் அறிக்கை வைத்துப் பேசினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்கள் வாழ்க்கையின் நிர்பந்தம் காரணமாக அற்ப ஊதியம் பெற்று பல ஆண்டுகளாக, பல பெயர்களில் பணிபுரிந்து வருகின்றனர். பணிப் பாதுகாப்பு, பணி நிரந்தரம், சட்டப்படியான ஊதியம், சமூகப்பாதுகாப்பு உள்ளிட்ட தொழிலாளர்களின் நீண்ட நாளைய நியாயமான கோரிக்கைகள் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தனர். “60 நாள் பொறுங்கள் நல்ல காலம் பிறக்கும்” என்று மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பரப்புரையின் போது கூறிய வாக்குறுதியின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆட்சி மாறியது ஆனால் நல்ல காலம் பிறக்க வில்லை. மாறாக உள்ளதும் போச்சு என்னும் நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று புதிய நிர்வாகிகளும், உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தமிழக அரசின் சமூக நீதி கோட்பாட்டு அடிப்படையில் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அணுகுவதற்கு மாறாக; ஏற்கனவே பணிப் பாதுகாப்பு கேள்விக்குறியாக பணிபுரிந்து வரும் பணியாளர்களை தங்கள் விருப்பம் போல் வேலையை விட்டு வெளியேற்றுவது, தங்களுக்கு வேண்டிய அல்லது தர வேண்டியதை தருகின்ற தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவது போன்ற தன்னிச்சையான நடவடிக்கைகளில் பரவலாக ஈடுபட்டு வருகின்றனர். அலுவலர்களின் தன்னிச்சையான செயல்பாடுகளில் சிக்கித் திணறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் இப்போது மக்கள் பிரதிநிதிகளின் ஆதிக்கச் செயல்பாட்டிற்கும் அடிபணிந்து போக வேண்டிய நிர்பந்தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கிராம ஊராட்சிகளிலும் தலைவர்,செயலாளர்கள் பலர் இதே நிலை செயல்பாட்டைக் கொண்டுள்ளனர்.




உள்ளாட்சி துறை பணியாளர்கள் ஜூன்-21 ல் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம்

அதுமட்டுமல்லாமல் தொழிலாளர்களின் பணி பாதுகாப்பற்ற சூழ்நிலையை பயன்படுத்தி மக்கள் பிரதிநிதிகளும், அலுவலர்களும் தங்களுடைய வீடுகளிலும், சொந்த தேவைக்கான வேலைகளையும் செய்வதற்கு நிர்ப்பந்திக்கும் கொடிய முறையும் பரவி வருவதை காண முடிகிறது.

மாநகராட்சி, நகராட்சிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நீட்டித்து புதிதாக ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு உரிய வழிமுறைகளை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்கள் கடந்த 2, அக்டோபர்2021 அன்று வெளியிட்ட சுற்றறிக்கை தெரிவிக்கிறது. ஏற்கனவே தமிழகம் முழுவதும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சியின் பணியாளர்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

இச்சூழ்நிலையில் தேவைக்கேற்ப கூடுதலாக பணியாளர்களை நியமிக்க வேண்டும். ஆனால் நகராட்சிகளின் நிர்வாக இயக்குனரின் சுற்றறிக்கையானது தற்போது பணியில் உள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கையை வெகுவாக குறைத்து, அவர்களை வேலையில் இருந்து வெளியேற்றி, வேலைக்கு எடுக்கப்படவுள்ள தொழிலாளிகளுக்கு நடைமுறை சாத்தியமற்ற வேலைப்பளுவை திணித்து, தற்போதைய ஊதியத்தை பாதியாக வெட்டி குறைத்து, தமிழகத்தின் பொது சுகாதார பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி உள்ளது. சமூகநீதிக் கோட்பாட்டை நீர்த்துப் போகச் செய்கிறது.

இக்காரணங்களால் இச்சுற்றறிக்கையை ரத்து செய்ய வேண்டும். கொடூர சுரண்டலுக்கும் முறைகேடுகளுக்கும் வழிவகுக்கும் ஒப்பந்த முறையை முற்றாக கைவிட வேண்டும் என்று ஏஐடியுசியின் தலைவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் கடந்த நவம்பர் 25 அன்று நேரில் முறையிட்டனர். எனினும் புதிதாக ஒப்பந்தம் விடுவதற்கு உரிய நடவடிக்கையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன என்று அறிகிறோம். அதில் தற்போது பணிபுரியும் தொழிலாளர்கள் எண்ணிக்கையை வெகுவாகக் குறைப்பதற்குரிய விவரங்கள் பரவலாக சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும் அறியமுடிகிறது.

2000ம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளில் ஒப்பந்த தொழிலாளர் முறை திணிக்கப்பட்டது. அன்று முதல் தொழிலாளர்களின் சட்ட பூர்வமான உரிமைகளை மறுப்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நிரந்தரமற்ற சகல வித பெயர்களில் உள்ள தொழிலாளர்கள் மீதும் கொடூரமான சுரண்டலும் முறைகேடுகளும் தலைவிரித்தாடுகின்றன. நிரந்தரத் தொழிலாளர்களுக்கும் கூட பல்வேறு உரிமைகள் மறுக்கப்படுகின்றன; அல்லது தொழிலாளர்கள் ஆண்டுக்கணக்கில் அலைந்து திரியும் வகையில் கால தாமதம் செய்யப்படுகின்றன.

சமூக நீதிக் கொள்கையால், கைதூக்கி விடுவதற்கான முன்னுரிமை பெற்ற ஒடுக்கப்பட்ட மக்களான துப்புரவுப் தொழிலாளர்கள் மற்றும் உள்ளாட்சி தொழிலாளர்களின் ஊதியம், பணிப் பாதுகாப்பு, வேலைப்பளு, சுயமரியாதை உள்ளிட்டவை இன்னும் கீழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இந்நிலையையும், அதற்கான காரணங்களையும், மாற்றுவதற்கான வழிவகைகளையும் முறையிட்டால், அதனை உளமாறக் கேட்பதற்குப் பொறுமையுமில்லை; அதில் கவனம் செலுத்தி தீர்க்க வேண்டும் என்ற அக்கறையும் உரியவர்களுக்கு இல்லை.

எனவே உள்ளாட்சி தூய்மைப் பணியாளர் உள்ளிட்ட தொழிலாளர்களின் முறையீடுகளைக் கேட்டு, உண்மை நிலையைக் கண்டறிந்து, மறுக்கப்பட்ட சட்டபூர்வ உரிமைகளை பெற்றுத்தர, தக்க தலையீடு செய்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற, தொழிலாளர்கள் பிரதிநிதிகளோடு தேசி தீர்வு கண்டு அமலாக்கத் தக்க உத்தரவிடும் அதிகாரமும், அதனை அமுலாக்காத உள்ளாட்சி அமைப்புகள், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை மற்றும் தண்டனை அளிக்கும் அதிகாரமும் உள்ளடக்கிய தன்னாட்சி கொண்ட “உள்ளாட்சி தொழிலாளர் குறைதீர் ஆணையம்” அமைக்க தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

மேலும், உள்ளாட்சிகளில் புதிய தலைமை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, பல்லாண்டுகள் பணிபுரிந்த தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தல், தொழிலாளர்களை தலைவர்களின், அலுவலர்களின் சொந்த வீட்டு/விவசாய வேலைகளைச் செய்யவைத்தல் உள்ளிட்ட வாழ்க்கையையும், சுயமரியாதை யையும் பறிக்கும் கொடூர செயல்களைத் தடுக்க தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். மேலும் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூன் 21 அன்று மாவட்ட தலைநகர்களிலும், தொழிலாளர்கள் கூடுமிடங்களிலும் பெருமளவில் தொழிலாளர்களைத் திரட்டி பெருந்திரள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி அரசின் கவனத்தை ஈர்க்கவும் தீர்மானிக்கிறோம்.

கூட்டத்தில் சிபிஐ மாவட்ட செயலாளர் பி. போஜராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தோழர் கே. மூர்த்தி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நீலகிரி மாவட்ட உள்ளாட்சி பணியாளர் சங்க செயலாளர் என்.துரை வரவேற்றுப் பேசினார். போக்குவரத்து சங்க மண்டலத் தலைவர் மோகனன், சம்மேளனத் துணைத்தலைவர் மீனாள் சேதுராமன், செயலாளர் ஆர்.மணியன், பொருளாளர் எம்.சங்கையா, உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட நிர்வாகிகள் ஆர்.ரகுநாதன் (நீலகிரி), பி.என்.பெரியசாமி (சேலம்) எம்.எஸ்.பி.ராஜ்குமார் (தேனி), என்.மனோகரன் (தர்மபுரி) பி.சாந்தகுமார் (திருவாரூர்) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## எதிரும் புதிரும்




எல்லோரும் உரக்கச் சொல்லுங்கள்

**பி.ஜே.பிக்கும் மோடிக்கும் ஊழல் பிடிக்காது !**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்கமிட்டி மாநாடுகள்



**தொப்பம்பட்டி :** திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றிய நான்காவது மாநாடு வயலூர் எஸ்.ஆர்.எம். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாவட்டச் செயலாளர் ஏ.பி. மணிகண்டன், மாநிலக்குழு உறுப்பினர் ஏ.எம்.மணி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். மாவட்டக்குழு உறுப்பினர் அ.கௌசல்யா, வி.தொ.ச. மாவட்ட செயலாளர் எஸ். மீனாட்சிசுந்தரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒன்றியச் செயலாளராக ஆர்.சிவராஜ், துணை செயலாளர்களாக அ.வெள்ளைச்சாமி, எஸ்.குமரேசன், பொருளாளராக என். சின்னசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.




**தேன்கனிக்கோட்டை:** தளி சட்டமன்றத் தொகுதி தேன்கனிக்கோட்டை ஒன்றிய மாநாடு, தேன்கனிக்கோட்டை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. மாநாட்டின் துவக்கமாக மாநில குழு உறுப்பினரும் விவசாயிகள் சங்க மாநில துணை தலைவருமான இலகுமையா கட்சி அலுவலகம் முன்பு செங்கொடி ஏற்றினார். தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன் மாநாட்டின் துவக்க உரையாற்றினார். ஒன்றிய செயலாளர் பூதட்டியப்பா வேலை அறிக்கையை தாக்கல் செய்தார். ஒன்றிய செயலாளராக மாரப்பா, துணை செயலாளர்களாக வீரப்பா, மாதேஷ் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியாக தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் நிறையுரையாற்றினார்.




**கொண்டலாம்பட்டி :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கொண்டலாம்பட்டி மண்டல 3வது மாநாடு பெருமாள் கோயில் மேடு சிவசக்தி முருகன் திருக்கோவில் மண்டபத்தில் தா.பாண்டியன் நினைவரங்கத்தில் ஏ.லோகநாதன், பி.அறிவழகன், எஸ்.எல்.தங்கமணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாநில குழு உறுப்பினர் ப.பரமசிவம் கொடியேற்றி வைத்தார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட செயலாளர் அ.மோகன், மாநில குழு உறுப்பினர் க.பாரதி, மாவட்ட நிர்வாகக்குழு எம்.முனுசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மண்டல செயலாளராக ஏ.கந்தன், துணைச்செயலாளர்களாக எஸ்.எல்.தங்கமணி, டி.ராமு, பொருளாளராக என்.தங்கராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

சீலநாயக்கன்பட்டி மேம்பாலத்தை ஒரு வழி சாலையாக இருப்பதை இரு வழி சாலையாக மாற்ற வேண்டும்.

கொண்டலாம்பட்டியில் இருக்கும் சௌடேஸ்வரி கல்லூரி தற்போது இருபாலர் கல்லூரியாக செயல்படுகிறது. அதை பெண்கள் கல்லூரியாக மாற்றுவதை கைவிட வேண்டும்.

சேலம் மாநகரம் சீர்மிகு சிட்டி செயல் திட்டத்தை துரிதமாக செயல்படுத்தி மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை போக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவாரூர் நகரம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருவாரூர் நகர 10ஆவது மாநாடு தா.பா நினைவரங்கில் மாவட்ட கட்சி அலுவலகம் திருவாரூரில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான வை.சிவபுண்ணியம் எக்ஸ் எம்எல்ஏ., மாநில நிர்வாக குழு உறுப்பினரும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளருமான பி.எஸ்.மாசிலாமணி, மாநில குழு உறுப்பினர் கே.உலகநாதன் முன்னாள் எம்எல்ஏ., மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சி.பி.முருகானந்தம், ஒன்றிய செயலாளர் கே.புலிகேசி, நகர செயலாளர் எம்.ஏ.மாரியப்பன் ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி பேசினர். பழக்கடை எஸ்.செல்வம் நகர செயலாளராகவும், வீ.தர்மதாஸ் நகர துணை செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.




திருவாரூர் நகரில் அரசு மேல்நிலைப்பள்ளி தொடங்கிட வேண்டும். தண்டலையிலிருந்து கடாரம் கொண்டான் வரை உள்ள மாநில நெடுஞ்சாலையை இருவழி சாலையாக மாற்றி தரம் உயர்த்திட வேண்டும். கோவில் மடம் அரசு புறம்போக்கு இடங்களில் குடியிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு பட்டா வழங்கிட வேண்டும். திருவாரூரில் வேளாண் கல்லூரி அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மதுரை புறநகர் மேலூர் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்டம் மேலூர் தாலுகா 24 வது மாநாடு அன்னம் மஹாலில் சி.பெரியவர், இராதா, சேதுபாண்டி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டு கொடியை மூத்த தோழர் மா.முனியாண்டி ஏற்றினார்.




மாநில நிர்வாகக் குழு உறுப்பினரும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவருமான எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ. துவக்கவுரை ஆற்றினார். மேலூர் தாலுகா செயலாளர் க.மெய்யர் வேலையறிக்கையினை முன் மொழிந்தார். மாவட்ட பொருளாளர் ஏ.எம்.ஜெயக்கொடி, மாவட்ட நிர்வாக குழு பி.முத்துவேல், ஏ.ஐ.டி.யூ.சி. புறநகர் துணை செயலாளர் பாலகிருஷ்ணன் மற்றும் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ.மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஒன்றிய செயலாளராக வழக்கறிஞர் சுரேஷ்குமார், துணைச் செயலாளர்களாக சந்திவீரன், நாகராஜன், பொருளாளராக இரவி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ் நிறைவுரையாற்றினார்.

1996 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற, ரூபாய் ஒரு இலட்சம் கோடி கிரானைட் முறைகேட்டினை கண்டறிந்த ஐ.ஏ.எஸ் உ.சகாயம் அறிக்கையினை வெளியிடு, மேலூரில் அரசு பெண்கள் கல்லூரி அமைத்திடு, பத்திரப்பதிவு அலுவலகத்தை மாற்றிடு, இளைஞர்களுக்கு வேலை வழங்கிடு, கிராம ஆரம்ப சுகாதாரங்களில் 24 மணி நேரமும் மருத்துவர்கள் பணி செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சூரமங்கலம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சூரமங்கலம் 3வது மண்டல மாநாடு சிவதாபுரம் விநாயகா மினி மஹாலில் எம்.மாரிமுத்து தா.செல்வம் எம்.ஆறுமுகம் ஏ.வெங்கடேஸ்வரன் நினைவு அரங்கத்தில் நடைபெற்றது. மண்டல செயலாளர் எம்.ராஜமாணிக்கம் முன்னிலை வகித்தார். முன்னாள் மாநகர செயலாளர் பி.ராதாகிருஷ்ணன் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். மாவட்ட பொருளாளர் எம்.ராமன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஆர்.ரமேஷ், மூத்த தோழர் கு.சிதம்பரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் த.லெனின், மாநில குழு உறுப்பினர்கள் கே.வி.ராஜேந்திரன், பழ.ஜீவானந்தம் ஆகியார் சிறப்புரையாற்றினர்.

மண்டல செயலாளராக பி.அசோக்குமார், துணைச் செயலாளர்களாக கே.ராஜா, ஆர்.மாணிக்கம், பொருளாளராக பி.விஜயபாஸ்கர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

ஜாகீர் அம்மாபாளையம்இரும்பாலை ரோட்டில் பேரிகாடு அமைத்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். சேலம் – பெங்களுர் சாலையில் மாமாங்கம் பஸ் நிறுத்தத்தில் மேம்பாலம் அமைக்க வேண்டும். இரும்பாலைமுத்துநாயக்கன்பட்டி சூரமங்கலம் பிரிவு பாதையில் ரவுண்டானா அமைக்க வேண்டும். ஆண்டிப்பட்டி மயானத்தில் தகன மேடை, சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவேங்கடம்:** தென்காசி மாவட்டம், திருவேங்கடம் தாலுகா மாநாடு குருவிகுளத்தில் அழகு முத்து பாண்டியன் நினைவகத்தில் ஜெ.எல்.பி.முத்துப்பாண்டியன், எம்.ஆவடைஈஸ்வரி, கே.முருகன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. தாலுகா குழு உறுப்பினர் ஏ.குருசாமி மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். தாலுகா செயலாளர் அந்தோணி வேலை அறிக்கையை வாசித்தார். மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை அரசியல் விளக்க உரையாற்றினார்.

தாலுகா செயலாளராக ஜெ.அந்தோணிராஜ், துணை செயலாளர்களாக ஜான்பவுன்ராஜ், கிருஷ்ணசாமி, கணேசன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட பொருளாளர் தி.சுப்பையா மாநாட்டை வாழ்த்தி பேசினார்.

**திருமங்கலம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை



திருமங்கலம் தாலுகா குழு 25 வது மாநாடு புறநகர் வி.எஸ்.ஆர் மஹாலில், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஜி.சந்தனம், தாலுகா குழு ஏ.வி.பாண்டி, அம்சவள்ளி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் மொக்கராஜ் கட்சி கொடியினை ஏற்றி வைத்தார். அஞ்சலி தீர்மானங்களை சுப்பிரமணி முன்மொழிந்தார்.

மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ் துவக்கவுரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் சுப்புக்காளை வேலையறிக்கையினை முன் மொழிந்தார். மருத்துவ துறை ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஏ.ராமலிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.

ஒன்றிய செயலாளராக தாலுகா குழு செயலாளர் நல்லகுரும்பன், துணைச் செயலாளராக ஏ.இராஜலிங்கம், பொருளாளராக அமரேசன் ஆகியோர் மற்றும் தாலுகா குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் தாலுகா குழு பாலு தீர்மானங்களை முன் மொழிந்தார்.



டி.எம்.மூர்த்தி

# நான்கு சட்டங்களுக்கான மாநில விதிகள்:
# எதற்கு இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்?

**ஒன்றிய அரசு, தான் வெளியிட்டுள்ள நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் கூடிய விரைவில் அமல்படுத்திட துடியாய்த் துடிக்கிறார்கள். இந்தியாவின் எல்லா மாநிலங்களும், தமக்கான மாநில விதிகளையும் நிறைவேற்றினால்தான் சட்டத்தை அமலாக்க முடியும். 24 மாநிலங்கள் மட்டுமே சட்டங்களுக்கான விதிகளை நிறைவேற்றியுள்ளன.**

2022 ஜூலை 1 ஆம் தேதி முதல் இந்தச் சட்டங்களை அமுலாக்க வேண்டும் என்று முதலாளிகள் கடும் நெருக்கடி கொடுக்கிறார்கள். அதற்கேற்ப ஒன்றிய அரசு, மாநில அரசுகளுக்கு தனது ஐஏஎஸ் அதிகாரிகள் வழியாக நெருக்கடி தந்து அவசரப் படுத்துகிறது.

**அமைச்சர் நடத்திய கூட்டம்:**

தமிழ்நாடு விதிகளை நிறைவேற்றுவதைப் பற்றி 18.3.2022 அன்று மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் தலைமையில் தொழிற்சங்க ஆலோசனை கூட்டத்தை நடத்தினர். ஆனால் விதிகளின் வரைவு நகல் எதுவும் தரவில்லை. விதிகளைப் பற்றிப் பேசாமலேயே, பழைய, புதிய சட்டங்களை ஒப்பீடு செய்யப் புகுந்தனர். வரைவு விதி நகல்களை தொழிற்சங்கங்களுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறிக் கூட்டத்தை முடித்தனர்.

**வார்த்தை தவறி விட்டாய்...**

ஆனால் அதற்கு மாறாக 11.04.2022 அன்று தமிழ்நாடு அரசு, நான்கு சட்டத் தொகுப்புகளில் சமூகப் பாதுகாப்பு சட்டத்தை தவிர மீதி மூன்று தொகுப்புகளுக்கும், மாநில விதிகளை அரசிதழில் வெளியிட்டது. அதாவது விதிகளைத் தயாராக வைத்துக் கொண்டே, அதைத் தராமல், தொழிற்சங்கங்களுடன் கலந்து பேசித் தான் வெளியிடுவது போன்ற ஒரு பொய்யான தோற்றத்தை உருவாக்க தொழிலாளர் துறை முயற்சி எடுத்தது.

**ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்:**

இந்த தந்திர உத்திகளைக் கைவிட வேண்டும், தொழிற்சங் கங்களுடன் பேசி, ஒன்றிய அரசின் பாதகமான கொள்கைகளை முடிந்தவரை மாநில அரசு விதிகளின் மூலம் சீர் செய்ய வேண்டும் எனக் கோரி 22.04.2022 அன்று தமிழ்நாடு முழுமையிலும் ஏஐடியுசி ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

முன்னர் சொன்னவாறு 11.04.2022 தேதியிட்ட தமிழ்நாடு விதிகள் குறித்த அரசாணைகளில், ஆட்சேபனை ஏதும் இருந்தால் 45 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கூறப்பட்டிருந்தது. அந்த 45 நாள் காலக்கெடு 26.05.2022ம் தேதியுடன் முடிந்துவிட்டது.

**DISH.. கருத்துத் திணிப்பு:**

இதனிடையே 17.05.2022ம் தேதியன்று தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனர் (DISH), கிண்டியில் உள்ள அவரது தலைமை அலுவலகத்திற்கு தொழிற்சங்கங்களை அழைத்தார். தொழிலகப் பாதுகாப்பு சுகாதாரம் மற்றும் வேலை சூழல் சட்டத்தொகுப்பு விதிகள் பற்றி கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறினார். தொழிற்சாலை சட்ட விதிகளை விளக்குவதற்கு ஒருவர், தோட்டத் தொழிலாளர் விதிகளை விளக்குவதற்கு ஒருவர் என மாறி மாறி அதிகாரிகள் விளக்கினார்கள்.



அனைத்து தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசும் போது ஆங்கிலத்தில் மட்டுமே விதிகள் இருந்தால் தொழிலாளியால் எவ்வாறு படித்துப் புரிந்து கொண்டு பேச முடியும் என்ற வினா முன்வைக்கப்பட்டது.

பங்கேற்ற தொழிற்சங்கத் தலைவர்கள் தமது புத்தகங்களை வைப்பதற்கும், குறிப்புகளை எடுப்பதற்கும் வசதியாக மேசை கூட கிடையாது. தொழிற்சங்கத் தலைவர்கள் பேசியது எதையும் நடவடிக்கை குறிப்பேட்டில் எழுதிப் பதியவும் இல்லை. மீண்டும் தொழிற்சங்கங்களுடன் பேசியது போன்ற ஒரு பொய்த் தோற்றம் ஜோடிக்கப்பட்டது.

பல்வேறு தொழிற்சங்கங்களை சேர்ந்த மாநில தலைவர்கள் விரிவாக விளக்கிப் பேசிய பின்னரும், மதுரை, கோவை, திருச்சி உள்ளிட்ட இடங்களில் எல்லாம் இதேபோன்ற கூட்டங்களை நடத்தி அங்கிருந்த தொழிலாளர்களிடம் அதிகாரிகள் வாங்கிக் கட்டிக் கொண்டார்கள்.

**ஏஐடியுசி ஆட்சேபணைப் பட்டியல்!**

தமிழ்நாடு அரசு விதிகளுக்கான நமது ஆலோசனைகளையும், ஆட்சேபனைகளையும் கொண்ட விரிவான பட்டியலைத், தமிழ்நாடு ஏஐடியுசி நிர்வாகிகளும், வழக்கறிஞர்களும் மூன்று நாட்கள் அமர்ந்து விவாதித்து தயாரித்தனர். தற்போதைய சட்டத் தொகுப்புகள், மாநில விதிகள், மத்திய விதிகள், கேரள அரசு முன் வைத்துள்ள விதிகள், இந்தச் சட்டத் தொகுப்புக்கு முன்னுள்ள சட்டங்கள், அந்த சட்டங்களுக்கு ஏற்கனவே இருந்த விதிகள் ஆகியவற்றை ஒப்பிட்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

23.5.2022 அன்று ஏஐடியுசி மாநில செயற்குழு கூட்டத்தில் இந்தத் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. சிறுசிறு திருத்தங்களைத் தவிர்த்து, தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய மிக முக்கியமான, அழுத்தம் தரவேண்டிய திருத்தங்களை மட்டும் அரசுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அதன்படி முதல்கட்டமாக 39 முக்கிய திருத்தங்களைக் கொண்ட பட்டியல் அரசுக்கு 25.5.2022 அன்று தரப்பட்டது. விதிகளைத் தமிழில் வழங்குமாறும், கூடுதல் திருத்தங்களை கொடுக்க அவகாசம் தருமாறும் ஏஐடியூசி கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

**ஆணையரின் அர்த்தமுள்ள கூட்டம்:**

27.5.2022 அன்று மாலை 3 மணிக்கு ஊதிய சட்டத் தொகுப்பு, தொழிலுறவு சட்டத் தொகுப்பு ஆகியவற்றுக்கான தமிழ்நாடு விதிகள் குறித்து, தொழிற்சங்கக் கருத்தை கேட்பதற்கான கூட்டம் சென்னையில் நடைபெற்றது. தொழிலாளர் ஆணையர், கூடுதல் ஆணையர் சமரசம், இணை ஆணையர் சென்னை, குறைந்தபட்ச ஊதிய இணை ஆணையர் உள்ளிட்டோர் அரசு சார்பில் இதில் பங்கு பெற்றனர்.

தொழிலாளர் தரப்பில் மு.சண்முகம், M.P.(LPF) டி.எம்.மூர்த்தி (AITUC), அ.சவுந்தரராசன் (CITU) ஆர்பிகே முருகேசன் (INTUC) மு.சுப்பிரமணியன்(HMS) உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்க தலைவர்கள் தமது கருத்துக்களை எடுத்துக் கூறினர். தொழிற்சங்கங்கள் கூறிய கருத்துக்களை குறிப்பெடுத்துக் கொண்டார்கள். அதில் திருத்தங்கள் மற்றும் ஆட்சேபனைகள் முன்மொழியப்பட்ட போது, அதற்கான காரணங்களையும் சேர்த்து தொழிற்சங்கங்கள் கூறின. அதிலும் ஐயங்களைக் கேட்டு அதிகாரிகள் பதிவு செய்து கொண்டது பாராட்டுக்குரியது.

தமிழில் விதிகளைத் தரவேண்டும் என்பது எல்லாச் சங்கங்களின் கோரிக்கையாக இருந்தது. மாலை 5:40 வரை கூட்டம் நடைபெற்றும், ஊதிய சட்ட விதிகள் மட்டுமே பேச முடிந்தது. தொழிலுறவு விதிகளை இன்னொருநாள் விவாதிக்கலாம் என்றார்கள். 10 நாட்களுக்குள் தமிழில் விதிகள் தயாராகி விடும் என்பதால், தமிழ் மொழிபெயர்ப்பு வந்த பிறகு அந்தக் கூட்டத்தை நடத்தலாம் என்ற ஆலோசனை ஏற்கப்பட்டது.

**தொழிற்சங்கங்களின் திருத்தங்களை ஏற்று, இந்தியாவின் முற்போக்கான மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்ற பாரம்பரியத்தை நிலைநாட்டும் வகையில் தொழிலாளர் துறைக்கு தக்க அரசியல் வழிகாட்டலை மாநில அரசு தரும் என நம்புகிறோம்.**

**பிஎம்எஸ்–ஏடிபி அடித்த கூத்து:**

கூட்டத்தில் முதலில் பேச அழைக்கப்பட்ட பிஎம்எஸ் சங்கப் பிரதிநிதி, கடைசியில் பேசுவதாக கூறி விட்டார். பிறகு கடைசியில் கருத்து கேட்கப்பட்ட போது, சட்டத் தொகுப்புகளில் பல நல்ல அம்சங்கள் இருப்பதாகவும் அவற்றை தமது சங்கம் ஆதரிப்பதாகவும் சொன்னார். தமிழில் விதிகள் தரப்படாததால் தன்னால் கருத்துக்களை முன்வைக்க முடியவில்லை என்று முடித்தார். அதேபோல அண்ணா தொழிற்சங்கத்தின் சார்பில் 2 பிரதிநிதிகள் வந்து இருந்தார்கள். அவர்கள் தமிழில் விதிகளைத் தரவில்லை என்று கண்டித்தார்கள். ஒட்டுமொத்தமாக இந்தச் சட்டத் தொகுப்புகளும் விதிகளும் தொழிலாளர்களுக்கு பாதகமானவை என்று தமது எதிர்ப்பைப் பதிவு செய்தார்கள். துரதிருஷ்டம் என்னவென்றால், அஇஅதிமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநிலங்களவையில் வாக்களித்து இருக்காவிட்டால் இந்தச் சட்டத் தொகுப்பு மசோதா சட்டமாகவே நிறைவேறி இருக்காது என்பது அவர்களுக்குத் தெரியவில்லையா, அல்லது மற்றவர்களுக்கு தெரியாது என நினைக்கிறார்களா என்று நமக்குத் தெரியவில்லை.

**அண்ணா அன்று சொன்னது:**

"இங்குள்ள முதலாளிகளின் ஆதரவைப் பெறுவது எளிது. அவர்களும் மிகுந்த விருப்பத்தோடு நம்மை ஏற்பார்கள். ஆனால் நாம் முதலாளித்துவத்தின் எந்த வடிவத்துக்கும் அது வட இந்திய முதலாளிகளோ அல்லது திராவிட முதலாளிகளோ உதவுவதற்காக இங்கில்லை" என்றார் அறிஞர் அண்ணா. தமிழ்நாடு அரசு அதை உள்வாங்குவது நல்லது.

---

## பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி
# ஏஐடியூசி ஆஷா பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்




தருமபுரி மாவட்ட ஏஐடியூசி ஆஷா பணியாளர்கள்(செவிலியர் உதவியாளர்கள்) சங்க சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தருமபுரி ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு இச்சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ்.மேனகா தலைமை வகித்தார்.மாவட்டச் செயலாளர் பி.தீபா வரவேற்றார்.நிர்வாகிகள் ராதா,நிலா,சங்கீதா முன்னிலை வகித்தனர்.இச்சங்கத்தின் மாநில செயலாளர் பி.வசந்தகுமாரி ஆர்பாட்டத்தை தொடங்கி வைத்து பேசினார்.

ஏஐடியூசி தருமபுரி மாவட்டத் தலைவர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட பொது செயலாளர் கே.மணி,உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் என்.மனோகரன்,மாவட்ட பொருப்பாளர் மகேஸ்வரி,கட்டுமான சங்க முன்னாள் பொறுப்பாளர் முருகேசன் மற்றும் கிருஷ்ணம்மாள் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் ஆஷா பணியாளர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தில் பணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.சுகாதாரத்துறையில் 15 ஆண்டுகளுக்கு மேலாக கிராமப்புற செவிலியர்களுக்கு இணையாக பணிபுரியும் ஆஷா பணியாளர்களை சுகாதாரத்துறையில் பணி வழங்கி நிரந்தரப்படுத்த வேண்டும்.தொகுப்பூதியம் மாதம் ரூ18000 வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மாவட்ட பொருளாளர் ருக்மணி நன்றி கூறினார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 10

# நஞ்சில் தோய்த்த நாக்குகள்

இந்தியா விடுதலை அடைந்ததில் இருந்து, இதுவரை அனுபவித்திராத தலைகுனிவை இப்போது சந்திக்கிறது. இந்திய அரசு மன்னிப்பு கேட்க வேண்டும் என சர்வதேசக் குரல்கள் எழுகின்றன.

எந்த மொழித் தொலைக்காட்சி விவாதமானாலும், மற்றவர்களை பேசவிடாமல் குறுக்கிடுவது, ஓங்கி அடித்து மற்றவர் குரல் காதிலேயே விழாமலேயே தடுப்பது என எந்தக் கூச்சமும் இல்லாமல் ஆர்எஸ்எஸ் பாஜக பிரதிநிதிகள் அடாவடி செய்வதை எல்லோரும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

பிஜேபியின் அதிகாரப்பூர்வ தேசிய செய்தி தொடர்பாளர் நுபுர் ஷர்மா, டெல்லி தகவல்தொழில்நுட்ப பிரிவு செயலாளர் நவீன் குமார்ஜிந்தால் ஆகியோர் ஒரு தொலைக்காட்சி விவாதத்தில், இறைத்தூதர் முஹம்மது நபியை பற்றி அவமதிக்கும் வார்த்தைகளைச் சொன்னார்கள்.

ஞானவாபி மசூதியில் கண்டெடுக்கப்பட்டது லிங்கம் என்று தாம் சொன்னதாகவும், அதை நீரூற்று என முஸ்லிம்கள் சொல்லி லிங்கத்தை அவமதித்து விட்டதாகவும், எமது தெய்வத்தை நீ அவமதித்தால், நான் உன் தெய்வத்தை அவமதிப்பேன் என்று அப்படி பேசியதாகவும் அந்த நுபுர் கூறியிருக்கிறார்.

எப்பேற்பட்ட அநியாயமான வாதம் இது! அவர்கள் ஒன்றும் இந்து தெய்வங்களை அவமதிக்கவில்லை. மசூதி தடாகத்தில் பல்லாண்டுகளாக நீரூற்றாகப் பயன்படுத்திவரும் அடிக்கல்லை, லிங்கம் என்று சொன்னால், அல்ல அது நீரூற்று என்றுதான் கூறியிருக்கிறார்கள். இது எப்படி இந்து தெய்வங்களை அவமதிப்பதாகும்.

தம்மைத் தட்டிக்கேட்க ஆளில்லை என்ற ஆணவத்தில் இவர்கள் மொழிந்த தீச்சொல், இன்று நெருக்கடியை கொண்டு வந்திருக்கிறது. இஸ்லாமிய கூட்டுறவு கழகம் என்ற அமைப்பில் இணைந்து இருக்கிற இஸ்லாமிய நாடுகள் உடனடியாக எடுத்த பொருளாதார நடவடிக்கைகளால், அதற்குள்ளாகவே மூன்றரை லட்சம் கோடி ரூபாய் இந்தியாவுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்த நெருக்கடிக்குப் பயந்து, நுபுர் சர்மாவை இடை நீக்கம் செய்வதாகவும், ஜிந்தாலை கட்சியிலிருந்து நீக்குவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

இந்திய அரசு வெளியிட்டுள்ள செய்தியில் ''கடந்த ஆயிரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இந்திய வரலாற்றில் ஏராளமான மதங்கள் பிறந்து பூத்துக் குலுங்கி இருக்கின்றன. எந்த மத ஆளுமையின் மீதான அவமதிப்பையும் நாம் கடுமையாகக் கண்டனம் செய்கிறோம். அனைத்து மதங்களின் மீதும் எங்களுக்கு மிக உயர்ந்த மதிப்பு உள்ளது'' எனக் கூறியுள்ளது.

அடடா! பிஜேபி அரசு வாய்வழியே இதைக் கேட்கும்போது, இன்பத் தேன் வந்து காதில் பாய்கிறது. ஆனால் இதில் ஒரு வரி, ஏன் ஒரு சொல்லுக்காவது ஆர்எஸ்எஸ் பிஜேபி கும்பல் உண்மையாக இருக்குமா? உலகத்திடம் காந்தியை காட்டிக் கொண்டு, இந்தியாவுக்குள் கோட்சேவை புனிதப்படுத்தும் இரட்டை நாக்கு பேர்வழிகளிடம் எவ்வாறு அதை எதிர் நோக்க முடியும்.

''நபிகளை அவமதித்துப் பேசியது சில உதிரி நபர்கள் தான்'' என்றும் அரசு சொல்கிறது. தனது தேசிய செய்தி தொடர்பாளரையே உதிரி நபர் என்று சொன்ன ஒரே கட்சி இதுவாகத்தான் இருக்கும். இந்த உதிரி நபர்கள் பேசியது, 1925 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஆர்எஸ்எஸ் பேசிவருவது தானே! அவ்வாறாயின் ஆர்எஸ்எஸ்ஸும் உதிரி அமைப்புதானா?

இஸ்லாமிய நாடுகளுக்குச் சென்று வேலை செய்து கொண்டிருக்கும் இந்து தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய சில நாடுகள் முடிவெடுத்துள்ளன. எல்லா நாடுகளிலும் முதலாளியாக இருப்பவன் தொழிலாளியை சுரண்டுகிறான்.

ஆனால் வளைகுடாவுக்கு சென்ற சங்கி மனோபாவம் கொண்ட மிகச்சில இந்து தொழிலாளர்கள், அதை முதலாளி தொழிலாளி பிரச்சினையாகப் புரிந்து சொல்வதற்குப் பதிலாக, முஸ்லிம் இந்துவுக்கு இடையிலான பிரச்சினை என்று கருதி, அங்கிருந்து இஸ்லாமிய எதிர்ப்பு பிரச்சாரங்களை தமது வலைத்தளம் மூலம் மேற்கொள்கிறார்கள்.

இவையெல்லாம் இப்போது அம்பலத்துக்கு வந்து இருக்கின்றன. அப்பாவிகளான இந்து சகோதரர்களுக்கு வேலை மறுக்கப்படுவதை செய்வதறியாது பார்த்துப் புழுங்கி, அங்குள்ள முஸ்லிம் தொழிலாளர்கள் வெளியிடும் சமூக வலைத்தளப் பதிவுகள் நெஞ்சை உலுக்குகின்றன.

இவ்வளவுக்கும் பின்னால் ஒரு ஆர்எஸ்எஸ் தலைவர் ''அந்த ரெண்டு பேரை நீக்கி இருப்பது மற்ற செய்தித் தொடர்பாளர்கள், தொலைக்காட்சி ஊடகங்களில் பங்கேற்பவர்களுக்குச் சொல்லப்படும் செய்தி அல்ல; அவ்வாறு யாராவது நினைத்துக் கொண்டால் அது ஒரு பிரமைதான். நாங்கள் எங்களுடைய கருத்துக்களை இன்னும் வலிமையாக எப்போதும் எடுத்துரைப்போம்'' என்கிறார்.

நிலை கெட்டு போன நயவஞ்சகர்களின் நாக்குதான், உலகத்திலேயே பயங்கரமான ஆயுதம் என்ற பட்டுக்கோட்டையின் வாக்கு நிரூபிக்கப்பட்டு கொண்டிருக்கிறது.

NEWAGE WEEKLY
Central Organ of the Communist Party of India
(ஜூன். 05 - 11)

# இனத் தூய்மை [பேசுவது] இந்தியக் கலாச்சாரம் அல்ல




**ஆர்எஸ்எஸ் கட்டுப்பாட்டிலுள்ள மோடி அரசு எட்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. பிரதமரும் அவரது சகாக்களும் தங்களின் 'பிரமாதமான' சாதனைகளை அனைத்துப் பிரச்சாரக் கருவிகளையும் ஒன்றாய்க் கொட்டி முழக்குகிறார்கள். அந்தப் பிரச்சாரக் கூச்சலில் மக்கள் திரளின் துன்ப துயரங்கள் சூழ்ச்சியாய் மூழ்கடிக்கப்படுகின்றன. கடந்த எட்டு ஆண்டுகளில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்ட 'ஆத்மநிர்பார்' அரசு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதன முதலீட்டாளர்களின் பேராசைக்குத் தீனி போடுவதில் கவனமாக ஈடுபட்டு வருகிறது.**

மக்கள் தொகையின் அடிமட்டத்து 50 சதவீதத்தினர் நாட்டின் செல்வ வளத்தில் 13 சதவீதம் மட்டுமே வைத்திருக்கும்போது, உச்சத்தில் இருக்கும் 10 சதவீதத்தினர் தேசத்தின் சொத்துக்களில் 57 சதவீதத்தைக் கைப்பற்றி இருக்கிறார்கள். இதுதான் எட்டாண்டு கால மோடி ஆட்சியின் சமூகப் பொருளாதாரத்தின் சாரம். ஆனால் ஆர்எஸ்எஸ் பாஜக ஆட்சி இந்து ராஷ்ட்டிராவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தங்களின் தத்துவார்த்த நிகழ்ச்சி நிரல் திட்டத்தை அமலாக்குவதில் எப்போதும் விழிப்புடன் கவனமாக உள்ளது.

பிராமணிய மேலாதிக்கத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட நான்கு வர்ணம் (சதுர் வர்ண) சமூக அமைப்பு முறைதான் அவர்களைப் பொருத்த அளவு இந்து ராஷ்ட்டிரா எனும் அரசியல் வடிவம். அந்தச் சதுர் வர்ணத்தின் கீழ் தலித்கள், ஆதிவாசிகள் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட பிரிவுகளின் சாதியினர்கள் ஒருபோதும் வரமாட்டார்கள்.

பாஜகவைப் பொருத்தவரை அரசின் ஒவ்வொரு அமைச்சகமும் ஆர்எஸ்எஸ் கோட்பாடான இந்து ராஷ்ட்ராவை ஆதரிக்கும் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தியாவின் மதசார்பற்ற கட்டமைப்பு ஆர்எஸ்எஸ் அமைப்பின் வகுப்புவாத பாசிச சித்து விளையாட்டு திட்டங்களால் தொடர்ச்சியாக ஆபத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் கலாச்சார அமைச்சரகம் தற்போது சங் பரிவாரின் பெரும் திட்டத்தில் தனக்குரிய பணியை நிறைவேற்ற முன் வந்துள்ளது. ஆர்எஸ்எஸ் போதனைகளில் 'கலாச்சார தேசியம்' முக்கியமான ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது. அந்தப் பாடத்தின் அடிப்படையில் கலாச்சார அமைச்சரகம் இந்தியாவின் மரபணு வரலாற்றை நிர்ணயித்து நிறுவுவதற்காக ஒரு செயல் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அத்திட்டம் நாட்டு மக்களின் இனத் தூய்மையைக் கண்டறியும் நோக்கமுடையது. அந்த ஆய்வுக்குத் தேவையான கலைத்திறன் மிக்க சிறந்த கருவிகள் மற்றும் டிஎன்ஏ பட்டியலிட்டுத் தயாரிக்கும் தொகுப்புக் கருவிகள் முதலியவைகளைப் பெற அரசு ஆர்வமாக உள்ளது. 'கடந்த பத்தாயிரம் ஆண்டுகளில் நமது இந்திய மக்கள் தொகை இனங்களின் மரபணு எவ்வாறெல்லாம் மாற்றமடைந்தது என்றும் மற்ற இனக் குழுக்களின் ஜீன்களுடன் எவ்வாறு கலப்பு ஏற்பட்டது என்பதையும் கண்டறிவதற்கானது' இந்த முயற்சி என 'தூய்மை தேடும் ஆய்வுத் திட்டப் பணி'யில் தொடர்புடைய சில 'அறிவாளிகள்' கூறுகிறார்கள்.

மக்கள் இனங்களின் மரபணு மாற்றமடைவது என்பது அம்மக்கள் ஒன்றாய் ஒன்றுகூடி வாழும் நீண்ட வரலாற்றின்போது அவர்களிடையே ஏற்படும் தொடர்புகளின் தீவிரத்தைப் பொருத்து நிகழ்வது. இயல்பான நிகழ்வை இனங்களின் தூய்மையோடு தொடர்புபடுத்துவது இன மேட்டிமை புரிதல் உடைய பாசிசத்தை ஒத்த கொடூரமான வஞ்சக நடவடிக்கையாகும். அதன் முகமூடியைக் கழற்றிப் பார்த்தால், ஜெர்மானிய நாஜி அரசின் அடிச்சுவட்டை அப்படியே ஆர்எஸ்எஸ்–பாஜக அரசு பின்பற்றுவதையும் அதனை அவர்கள் தேச பக்த நடவடிக்கை என்று அழைப்பதையும் புரிந்து கொள்ளலாம்!

நவீன வரலாற்றில் ஹிட்லர்தான் இனங்களின் தூய்மையைப் புகழ்ந்து ஆராதித்தவர். அவரது பாசிசத் தாக்குதலின் ஒரு பகுதியாக இனங்களின் படிநிலையில் ஆரியர்கள் உச்சத்தில் நிற்கிறார்கள் என்ற கோட்பாட்டை அவர் பிரச்சாரம் செய்தார்; ஆரிய இனத்தைத் தலைமை இனம் என்றழைத்த ஹிட்லர் அவர்கள் உலகை வழிநடத்தி ஆளப் பிறந்தவர்கள் என்றார். மேலும் யூதர்கள், கிருஸ்துவர்கள் மற்றும் ஏனைய அனைவரும் அந்தத் தலைமை இனத்திற்குத் தூய்மையற்ற மாசினைக் கொண்டு வருகிறார்கள் என அவர் நம்பினார். எனவே அவர் களை நாட்டிற்கு உட்பகை ஆபத்து என்று அவர் அழைத்தார். அடால்ஃப் ஹிட்லர் தனது 'மெய்ன் காம்ஃப்' சுயசரிதை புத்தகத்தில் அவர்களுக்கு ஆபத்து ஒன்று, ஆபத்து இரண்டு என யூதர்களிடமிருந்து தொடங்கி கம்யூனிஸ்ட்கள் வரை வரிசை எண்கள்கூட வழங்கியிருந்தார்.

இத்தாலியில் முஸோலினியால் அமைக்கப்பட்ட நாஜி கட்சியின் அச்சு வார்ப்படத்தில், இந்தியாவில் ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங் என்ற ஆர்எஸ்எஸ் வடிவத்தில் மட்டுமல்லாமல் ஆத்மார்த்தமான உள்ளடகத்திலும் அப்படியே நிறுவப்பட்டது; அந்த அமைப்பு எப்போதும் ஜெர்மன் பாசிசம் குறித்துப் பெருமிதம் கொண்டது. பொதுவில் அவற்றினிடையே இன மேட்டிமை அடிப்படை கோட்பாடாக இருந்தது. அதன் செல்வாக்கில் இனத் தூய்மையை ஆதர்சக் கோட்பாடாக போற்றி, ஏனைய ''பிறர்கள்'' மீது வெறுப்பை வளர்த்தார்கள். தனது 'பஞ்ச் ஆப் தாட்ஸ்' நூலில் ஆர்எஸ்எஸ் தத்துவக் கருத்தியலாளர் எம் எஸ் கோல்வால்கர் ஹிட்லரின் ஜெர்மனியை முன்மாதிரியாகச் சித்தரித்தார்; காரணம், ஹிட்லர்தான் இனப் பெருமையை அதன் உச்சத்திற்கு உயர்த்தினார் என்பதே. அவருடைய பாதையைப் பின்பற்றிய கோல்வால்கர் இந்தியாவில் முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள் மற்றும் கம்யூனிஸ்ட்களைத் தேசத்தின் உட்பகை ஆபத்தாக வரையறுத்துக் குறிப்பிட்டார்.

இனத் தூய்மை கோட்பாடு அவர்களின் உலகப் பார்வையில் ஆழத்தில் படிந்திருந்தது. இனப் பெருமிதமும் மற்ற மதத்தவர்கள் மீது வெறுப்பும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் தத்துவார்த்த அடிப்படையான இந்துத்துவாவின் மைல் கற்களாகும். இந்துத்துவாவிற்கும், இந்து சமயம் என்பதற்கும் இடையில் பொதுவான ஒற்றுமை என்பது ஒத்திருக்கும் அதன் பெயரைத் தவிர வேறெதுவும் இல்லை.

**ஒன்றிய அரசு குடியுரிமை திருத்தச் சட்டம் மற்றும் தேசியக் குடிமக்கள் பதிவேடு கொண்டுவரத் தொடங்கிய முயற்சிக்கு அவர்களின் இனத் தூய்மை கோட்பாடே ஆதார உந்து விசை. அவர்களின் நோக்கமும் கருத்தும், மதத்தைக் குடியுரிமைக்கான முக்கிய நிபந்தனையாகக் கொண்டு வருவதேயாகும். அந்தக் கருத்து, வேற்றுமையில் ஒற்றுமை என்பதை மாற்ற முடியாத அடிப்படையாகக் கொண்டு நமது மதசார்பற்ற ஜனநாயக தேசம் போற்றி வளர்த்த கருத்துக்கு நேர் எதிரிடையானது; அவர்களுக்கு ஒவ்வாதது, அன்னியமானது.**

கலாச்சார அமைச்சகம் மரபணு வரலாறு மற்றும் இனங்களின் தூய்மையைக் கண்டறியும் டிஎன்ஏ கருவிகளை நிறுவுவது தேசத்தின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் பேரழிவுக்கான நடவடிக்கையாகிவிடும். பாரதம் என்கிற இந்தியா, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பல்வேறு இனங்கள் ஒன்று கலந்து சமாதான சகவாழ்வு வாழ்ந்ததன் மூலம் உருவான பல்வேறு கலாச்சாரங்கள், பண்பாடுகள் வசிக்கும் வீடு. இந்தியக் கலாச்சாரப் பாரம்பரியத்தை வலிமை குன்றச் செய்யும் எந்த நடவடிக்கையும் இந்திய ஒற்றுமையைப் பலமிழக்கச் செய்யும்.

ஒன்றிய அரசின் கலாச்சார அமைச்சகம் இந்தியக் கலாச்சாரப் பாரம்பரியத்திற்குத் தவறான விளக்கம் அளிக்கப் பிடிவாதமாக நிற்கிறது. அவர்களின் முயற்சி இனத் தூய்மை பாசிசக் கோட்பாட்டின் அடிப்படையில் நாட்டைப் பிளவுபடுத்துவதற்கான முயற்சியாகும். இதனை முளையிலேயே கிள்ளி எறிய, அனைத்து மதசார்பற்ற சக்திகளும் ஒன்றாய் எதிர்த்து இணைந்த போராட வேண்டும். பாசிசப் பிடியிலிருந்து பாரத தேசத்தைப் பாதுகாக்க வேண்டும்!

தமிழில்: **நீலகண்டன்**



# சாத்தான் வேதம் ஓதுவதா?

த. லெனின்

**இந்திய பிரதமர் மோடியைத் தேர்ந்தெடுத்த தொகுதியான உ.பி. மாநிலம் வாரணாசி அருகில் உள்ள கியான்வாபியில் இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலமான மசூதியில் சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டதாக புரளியைக் கிளப்பி விட்டு, அதற்கான அடாவடி ஆர்ப்பாட்ட மத வெறி அரசியலை பா.ஜ.க.வும் சங்கப் பரிவார் கும்பலும் கையில் எடுத்தன.**

மோடி பொறுப்பேற்ற பிறகு அவரது தேர்தல் பரப்புரைகளில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலே விஞ்சி நின்றது. ஒரு கட்டத்தில் தேர்தல் போட்டியில் வெற்றி பெறப் போவது இடுகாடா? சுடுகாடா? என்பதை முடிவெடுங்கள் என்று பேசியதும், குஜராத் கலவரத்தில் இஸ்லாமியர்கள் குறிவைத்து தாக்கப்பட்ட அனைத்து சம்பவங்களுக்கும் அன்றைய முதலமைச்சராக இருந்த மோடி எவ்வளவு அணுக்கமாக இருந்தார் என்பதும் நாடறிந்ததே!

மதச்சார்பற்ற இந்தியாவில் பாபர் மசூதி தொடங்கி காசி, மதுரா உள்ளிட்ட இரண்டாயிரம் மசூதிகளை இந்துக்களின் கோவில்களை அழித்து கட்டப்பட்டதாக ஆர்.எஸ்.எஸ்.–ன் வி.எச்.பி. பகிரங்கமான ஒரு போலி வரலாற்று நூலையே வெளியிட்டது.

கட்டடக் கலைக்கு பெயர்போன குதுப்மினாரை அகழாய்வு செய்து அது இந்துக் கோவிலை இடித்துக் கட்டியதற்கான சான்றுகள் இருக்கிறதா? என்று ஆய்வு செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கை ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர் ஒருவர் தொடர்ந்திருந்தார்.

நிலைமை இப்படியிருக்க ஆர்.எஸ்.எஸ். அகில இந்தியத் தலைவர் திரு மோகன் பகவத் கடந்த ஜூலை 4ஆம் தேதி காசியாபாத்தில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இஸ்லாமியப் பிரிவான முஸ்லிம் ராஷ்டிரிய மஞ்ச் கூட்டத்தில் நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது அவருக்கு அலோசகராக இருந்த முனைவர் க்வாஜா இஃப்திகார் அஹ்மத் எழுதிய "தி மீட்டிங் ஆப் மைன்ட்ஸ் எ பிரிட்ஜிங் இனிசியேட்டிவ்" என்ற புத்தகத்தை வெளியிட்டு பேசியபோது, "40 ஆயிரம் ஆண்டுகளாக நாம் அனைவரும் ஒரே மூதாதையரின் வழி வந்தவர்கள். இந்திய மக்கள் அனைவருக்கும் ஒரு மரபணுதான் இருக்கிறது. இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் இருவேறு குழுக்கள் அல்ல. அவர்கள் ஏற்கனவே இணைந்திருக்கிறார்கள். எனவே, அவர்களைப் புதியதாக இணைப்பதற்கு ஒன்றும் தேவையில்லை. அரசியலால் சில பணிகளை மேற்கொள்ள முடியாது. மக்களை இணைக்கவும் முடியாது. ஆனால், அது மக்களின் ஒற்றுமையை சிதைக்கும் ஆயுதமாக மாறலாம் என்பதுடன், இங்கு இஸ்லாமியர்கள் வாழக்கூடாது என்று ஒரு இந்து கூறுகிறார் என்றால், அவர் ஒரு இந்துவே அல்ல. பசு ஒரு புனித விலங்குதான். ஆனால் மற்றவர்களை அதற்காக கொலை செய்பவர்கள் கூட இந்துத்துவ தத்துவத்திற்கு எதிரானவர்களே. சட்டம் எவ்விதம் பாரபட்சமும் காட்டாது அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேசியதுடன், இந்தியாவில் இருக்கும் இஸ்லாமியர்கள் ஆபத்தில் இருக்கிறார்கள் என்ற சதி வலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள். இஸ்லாமியர்கள் எந்தவித ஆபத்திலும் இல்லை. நாட்டில் ஒற்றுமை இல்லை என்றால் வளர்ச்சி சாத்தியம் இல்லை. எனவே ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதற்கான உரையாடலை துவங்க வேண்டும்" என்று பேசியுள்ளார்.


இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கிறபோது, சாத்தான் வேதம் ஓதுவதைப் போல் தோன்றலாம். கர்நாடகாவில் பள்ளி, கல்வி நிறுவனங்களில் காலம் காலமாக இஸ்லாமிய மாணவிகளால் கடைபிடிக்கப்பட்டு வந்த ஹிஜாப் அணிவது குறித்து தேவையில்லாத விவாதங்களைக் கிளப்பி நீதிமன்றங்களுக்குச் சென்றது பாவம் பகவத்துக்குத் தெரியவில்லை!

ஏன், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்றி அதனை இஸ்லாமியர்களுக்கு எதிரான கருவியாக மாற்றியபோது, அப்போது மோகன் பகவத் இந்தியர்களின் மரபணு ஆராய்ச்சி குறித்து ஈடுபடவில்லை போலும்!

ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கும் பகவத்துக்கும் மிகவும் நெருக்கமான உ.பி.முதல்வர் சாமியார் யோகி ஆதித்யநாத் சாலைகள், தெருக்களில் இருந்த இஸ்லாமியப் பெயர்களை நீக்க நடவடிக்கை எடுத்த போதும், தேர்தல் பரப்புரையில் 80 %க்கும் 20%க்கும் என எகத்தாளம் பேசியபோதும், பசு மாமிசம் வைத்திருந்தார் என்ற வதந்தியின் பேரில், பசு வன்முறைக் குண்டர்களால் அடித்துக் கொல்லப்பட்ட இஸ்லாமியர்கள் மற்றும் தலித்துகள் குறித்து நாக்பூரின் காதுகளுக்கு எட்டவில்லை போலும்!

நாடு முழுவதும் பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு காரணமான ஒன்றிய அரசின் அதீத வரி விதிப்பை கேள்வி கேட்டால் ஔரங்கசிப் காலத்தில் இந்துக்கள் மீது போடப்பட்ட ஜிஸ்யா வரியைப் பற்றி விவாதிக்கின்றனர். வெள்ளைருக்கு எதிராக விடுதலைப் போராட்டத்தில் எங்கும் போராடாட அவர்கள் தான் உண்மையான தேச பக்தர்கள் என்பது போன்ற தோற்றத்தை உருவாக்க முகலாய எதிர்ப்பை எப்போதும் உயர்த்திப் பிடித்தே வருகிறன்றனர்.

கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள்தான் என்பதைப் போல இவர் பேசி முடித்த சில தினங்களிலேயே பாரதிய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா, கடந்த மே 26ஆம் தேதி டைம்ஸ் நவ் தொலைக்காட்சி "கியான்வாபி பைஸ்ஸ்" என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போது, முஹமது நபி குறித்தும், இஸ்லாம் குறித்தும் மிகவும் கீழ்த்தரமாகவும், அவதூறாகவும் பேசினார்.



அதுபோலவே டெல்லி மீடியா செல் தலைவரான நவீன்குமார் ஜிண்டாலும் இஸ்லாமை இழிவாகப் பழித்துப் பேசியிருந்தார். இதனையொட்டி கடந்த 3 ஆம் தேதி கான்பூரில் இஸ்லாமியர்கள் கடும் போராட்டங்களையும், பேரணிகளையும் நடத்தினர்.

துணை குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு தனது மூன்று நாடுகள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு வருகிறார். தோகாவில் தொடங்கிய அவரது பயணத்தின்போதே, மிகப்பெரும் எதிர்ப்பையும், இந்திய பொருட்களை புறக்கணிக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தோடு கூடிய ஹேஷ் டாக்குகள் கத்தாரிலும், குவைத்திலும், மற்ற வளைகுடா நாடுகளிலும் பெரும் எண்ணிக்கை அலை அலையாக எழுந்தது.

குவைத் அரசு இந்திய தூதரை தோகாவிலும், குவைத் நகரத்திலும் நேரில் அழைத்து டெல்லியிலிருந்து ஒரு பொது மன்னிப்பை அறிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது.

இந்தியாவின் நட்பு நாடான ஈரான், "இஸ்லாமியபோபியா" போன்றவற்றை பரப்பும் இந்தியா வின் ஆளும் கட்சியையும் கண்டித்ததுடன், ஈரானின் வெளியுறவு அமைச்சர் ஹுசைன் அமித் – அப் – தொலாஹியன் சில நாட்களுக்கு முன்பு தனது முதல் சுற்றுப் பயணமாக டெல்லி வந்திருந்தபோது, இங்கு நடந்த இந்த வெறுப்பு சம்பவங்கள் இந்தியாவின் கவுரவத்தை உலக அரங்கில் தலைகுனிய வைத்து விட்டது. 57 நாடுகள் அடங்கிய இஸ்லாமிய கூட்டமைப்பும் இதனை கண்டித்து ஒரு கடுமையான அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

**ஆளும் பா.ஜ.க.வினர் இஸ்லாமியர்கள் குறித்து தொடர்ந்து இழிவாகப் பேசுவதுடன் தாக்குதலையும் நடத்துகிறார்கள். அவர்கள் ஆளும் சில மாநிலங்களில் கல்வி நிறுவனங்களில் ஹிஜாப் அணிவதை தடுத்ததன் மூலம் வன்முறையைத் தூண்டி விட்டனர். சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்களும், அவர்களது சொத்துக்களை அழிப்பதும் தொடர்கிறது என்று அந்த அறிக்கை கடுமையாக கண்டித்திருந்தது.**

குவைத் மற்றும் தோகாவில் இருக்கும் இந்தியத் தூதரகம் இதற்கான ஒரு பதில் அறிக்கையை வெளியிட்டிருந்தது. அதில் வெறுப்பை வெளியிடுவோரின் கருத்து அரசின் கருத்து அல்ல என்று அது தன்னிலை விளக்கம் அளித்திருந்தது.

நமது கேள்வி பா.ஜ.க.வில் இருந்து நீக்கப்பட்டவர்கள்தான் மோசமானவர்களா? மீதம் உள்ளவர்கள் எல்லாம் நல்லவர்களா? பா.ஜ.க. இந்தியர்களை மட்டுமல்ல உலகத்தையே முட்டாளாக்குகிறது. நாள் தோறும் அதிகரித்து வரும் அவர்களது அருவருக்கத்தக்க இஸ்லாமிய வெறுப்புப் பிரச்சாரம் பெரும் கலவரங்களுக்கு காரணமாக அமைவதை உலகமே கண்டு வருகிறது.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் அரபு நாடுகளில் நிறுவனங்கள் நடத்துகிற சங் பரிவார் அமைப்புகளின் பொறுப்பாளர்களே அந்த மண்ணில் இருந்துகொண்டே உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வதைப் போல இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரங்களை மேற்கொண்டனர். அத்துடன் பாஜகவின் இளைஞரணி தலைவர் தேஜஸ்வி சூரியா எம்.பி. தனது டுவிட்டர் பதிவில் இஸ்லாமியப் பெண்களை இழிவுபடுத்தி பேசியிருந்தார். அது எப்படியோ குவைத் நாட்டின் இளவரசிக்கு தகவல் போக அவர் ராஜிய ரீதியாக இது குறித்து வினா எழுப்பியதுடன், அவர்களையெல்லாம் திருப்பி அனுப்ப வேண்டும் என்று முனைந்த போது, ஓடோடிச் சென்று மன்னிப்பு கேட்டு தப்பிப் பிழைத்த பல வீராதி வீரர்களும் அங்கு உண்டு.

நமது நாடு அரபுநாடுகளோடு வரலாற்று ரீதியாக மிகச்சிறந்த வியாபாரத்தை மேற்கொண்டு வருகிறது. 2017லிலிருந்து 2021வரை ஒட்டுமொத்த வியாபாரத்தில் உலகில் உள்ள 200 நாடுகள் பட்டியலில் ஐக்கிய அரபு அமீரகம் மட்டும் 7% வணிகத்தில் பங்கு வகிக்கிறது. சவுதி 3.8%, கத்தார் 1.4%, குவைத் 1.1%, ஈரான் 1.1%, ஓமன் 0.8% என ஆக மொத்தம் 16% பங்கினை இந்தநாடுகளோடு இந்தியா கொண்டுள்ளது.

எண்ணெய் இறக்குமதியில் 2017–2021 கால கட்டத்தில் 14.1% எண்ணெயை சவுதியிலிருந்து மட்டும் இந்தியா இறக்குமதி செய்திருக்கிறது. ஐக்கிய அமீரகம் 9.5%, கத்தார் 5.7%, குவைத் 4.3%, ஈரான் 3.6%, ஓமன் 1.6%, பக்ரைன் 0.1% என ஆக மொத்தம் ஒட்டுமொத்த எண்ணெய் தேவையில் 39% த்தை இந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்கிறது.

அத்துடன் திரைகடல் ஓடியும் திரைகடல் தேட இந்தியர்கள் இந்த நாடுகளில் குடிபெயர்ந்து பணியாற்றி வருகிறார்கள். ஐக்கிய அமீரகத்தில் 34,25,144, சவுதியில் 25,94,947, குவைத்தில் 10,29,861, ஓமனில் 7,81,341, கத்தாரில் 7,46,550, பக்ரைனில் 3,26,658, ஈரானில் 4,337 பேரும் ஆக மொத்தம் 89,08,638 பேர் மேற்சொன்ன நாடுகளில் பணியாற்றி இந்தியாவிற்கான அந்நியச் செலாவணியை ஈட்டி வருகின்றனர். உள்ளாட்டு பண வரவில் ஐக்கிய அமீரகத்தில் 13.8% (உலகிலேயே முதலிடம் பெறும் நாடாகும்), சவுதியில் 11.2%, குவைத்தில், 4.6%, கத்தாரில் 4.1%, ஓமனில் 3.3%. பக்ரைனில் 1.5% என பண வரவு வருகிறது. பா.ஜ.க.வின் மதவெறி பித்தேறிய அரசியல் தவறுகளுக்கு வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் ஏன் பாதிப்படைய வேண்டும்? உலக அரங்கில் இந்தியா ஏன் தனிமைப்பட்டு மதிப்பை இழக்க வேண்டும்? இவையெல்லாம் பாசிசத்தின் பக்க விளைவுகளின்றி வேறு என்ன?

பாசிசம் பெரும் நிறுவனங்களின் நலன்களைக் காக்க அதற்கு எதிரான திரளும் மக்களை பிளவுபடுத்தும் ஒரே சூழ்ச்சியைத்தான் அன்று முதல் இன்றுவரை தொடர்ந்து செய்து வருகிறது. மோடியின் அரசும் கார்ப்பரேட் முதலாளித்துவத்திற்கு தலையையும் இந்துத்துவ பாசிச வெறியாட்டத்திற்கு வாலையும் காட்டி தனது இரட்டை நிலையை இப்போதும் நிரூபித்தே வருகிறது.

இதையெல்லாம் வைத்து பார்க்கும்போது உலகின் மிகப்பெரும் வலதுசாரி பாசிச பயங்கரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.சின் தலைவர் மோகன் பகவத்தின் சமீபத்திய பேச்சை எந்த வகையில் வைப்பது?

வெறுப்பு பிரச்சாரத்தை பேச வைத்து அழகு பார்த்த இவர்களே இன்று பா.ஜ.க.வின் அமைப்பு விதி 10 (அ) வின் படி அவர்கள் தவறு இழைத்து விட்டதாகச் சொல்லி நீக்கியிருக்கிறது. இந்த விதி அமித்ஷாவிற்கு, மோடிக்கு, தேஜஸ்வி சூர்யாவிற்கு, உ.பி.முதல்வர் யோகிக்கு பொருந்துவதில்லையே ஏன்?

வெறுப்பு அரசியலுக்கு எதிரான நெருப்பை பற்றவைப்போம்! நடிப்பு சுதேசிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்போம்!

தொடர்புக்கு: **94444 81703**


## திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

புதுச்சேரி மாநிலம் தேங்காய் திட்டு, புதுநகரைச் சேர்ந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் டி.செல்வராஜ் – சரோஜா ஆகியோரின் மகள் வழக்கறிஞர் எஸ்.புவனேஸ்வரிக்கும் – எம்.வினாயகமூர்த்தி (எ) ஸ்டாலினுக்கும் ஜூன் 1 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக மணமக்கள் சார்பில் ரூ.1000 வழங்கப்பட்டது. மணமக்களுக்கு ஜனசக்தி சார்பாக வாழ்த்துகள்.

தத்துவார்த்தம் 32



எஸ். தோதாத்ரி



# இராமானுசரும் மத்துவரும்

**இந்தியத் தத்துவத்தின் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு சிந்தனையாளர் ராமானுசர் ஆவார். இவர் உருவாக்கிய தத்துவம் விசிஷ்டாத்வைதம் எனப்படுகிறது. இதற்கு சிறப்பான அத்வைதம் என அர்த்தம் உண்டு. ராமானுசர் தத்துவத்தையும், சமயத்தையும் ஒன்றாக இணைத்துக் கண்டவர். சங்கரரைப் போன்று ராமானுசரும், பிரம்ம சூத்திரம், கீதை ஆகியவற்றுக்கு உரை எழுதினார். ஆனால், சங்கரரது கருத்தை இராமானுசர் ஏற்றுக்கொள்ளவில்லை.**

சங்கரரது கருத்துப்படி ஒரே ஆத்மாவான பரமாத்மா அவித்தை அல்லது மாயை மீது பட்டு பல ஆன்மாக்களாக தோன்றுகிறது. உதாரணமாக சந்திரனது பிம்பம் எல்லா கிணறுகளிலும் தோன்றுகிறது. ஆனால் இந்த பிம்பம் உண்மை அல்ல. கிணறுகள் எல்லாம் மூடிவிட்டால் பிம்பங்கள் இல்லாமல் போய்விடும். இறுதியில் இருப்பது ஒரே ஒரு சந்திரன் தான். இது போன்றுதான் பரமாத்மாவும். ராமானுசர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாயை என்பதை அவர் அறியாமை என்று கூறுகிறார். பரமாத்மா அறிவே சொரூபமானது. ஆன்மாக்களிடம் மக்களிடம் அறியாமை உள்ளது. இந்த அறியாமைதான் பல ஆன்மாக்கள் தோன்றுவதற்கு காரணம். அறியாமை ஆன்மாக்களுக்கு அடித்தளமாக உள்ளது. இது இராமானுசருடைய கூற்று.

சங்கரர் இந்த உலகம் உண்மை அல்ல என்று கூறுகிறார். ஆனால் ராமானுசர் இந்த உலகமும் உண்மை; அதற்கு அடிப்படையான பரமாத்மாவும் உண்மை என்று கூறுகிறார். பரமாத்மாவானது உலகமாகப் பரிணாமம் அடைகிறது என்பது இராமானுசரின் கூற்று.

இதற்கு வேதாந்திகள் தரும் உதாரணம் பால் தயிராக மாறுவது என்பதாகும். ராமானுசர் சங்கரரது மாயவாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ராமானுசர் கருத்துப்படி உயிர்களை இயக்குபவன் இறைவன். உயிர்கள் உடலைச் சார்ந்து உள்ளன. உடலை இயக்குவது உயிர். ஆனால் உயிர், உடல் ஆகியவற்றிற்கு சுதந்திரம் கிடையாது. இது அனைத்தும் இறைவனைச் சார்ந்தே உள்ளது.

சங்கரர் உலகம் முழுவதும் தோற்றம் என்று கூறி உலகத்தை மறுத்துவிடுகிறார். அவருக்கு பிரம்மம் மட்டும்தான் உண்மை. ஆனால் இராமானுசர் அவ்வாறு அல்ல. அவரைப் பொருத்த மட்டிலும் பிரும்மம் உயிர்கள் சட உலகம் ஆகியன எல்லாமே உண்மையாகி விடுகிறது. இறைவன் உயிர்களை சரீரமாக கொண்டுள்ளான். உயிர்கள் சடப்பொருளை சரீரமாகக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையவை. இறைவன் உயிர்களிலும், சடப் பொருள்களிலும் அடங்கி விடுகிறான்.

**உயிர்களும், பொருள்களும் இறைவனுள் அடங்கியிருக்கின்றன. இறைவனும் இவற்றுள் அடங்கி விடுகிறான். இதற்கு சரீர& சரீரி பாவம் என்று பெயர். இறைவனும் உயிர் பொருள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டதன் காரணமாக ராமானுசரது தத்துவத்தில் பொருள்முதல்வாதத்தின் தாக்கம் இருப்பதைக் காண முடிகிறது.**

ராமானுசர் பக்திமார்க்கத்தின் தாக்கத்திற்கு உள்ளானவர். ஆனால், பக்தி மார்க்கத்தை அவர் மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு மட்டுமே கூறுகின்றார். மற்ற எல்லோருக்கும் பிரபத்தி என்பதை அவர் முன்வைக்கிறார். இதன்படி இறைவனிடம் தன்னைக் கொடுத்து விட்டாலே முக்தி கிடைக்கும் என்பது அவரது வாதம். இது பலதரப்பட்ட மக்களை வைணவத்திற்கு உள்ளாகக் கொண்டு வருவதற்கு செய்த ஏற்பாட்டின் பிரதிபலிப்பு என்று கூட கூறலாம். இதனை சரணாகதி தத்துவம் என்று கூட அழைப்பர்.

இராமானுசர் பரமாத்மா, ஜீவாத்மா, சடப்பொருள் ஆகிய மூன்றும் உண்மை என்று ஏற்றுக் கொண்டவர். சங்கரர் பரமாத்மா மட்டும்தான் உண்மை, மற்றவை தோற்றம் என்று கூறியவர். ஆனால், இவர்கள் இருவருக்கும் பின்னால் தோன்றிய மத்துவர் பரமாத்மா வேறு, பொருள் வேறு என்று கூறியவர். இவை இரண்டும் சேரவே முடியாது என்பது இவரது வாதம். இந்த மூன்று தத்துவவாதிகளும், உபநிடத வாக்கியங்களையே ஆதாரமாகக் கொள்கின்றனர். உபநிடதங்கள் உண்மை ஒன்று உண்டு என்றும், உண்மை பல என்றும் பொருள்தரும் வாக்கியங்கள் உள்ளன. இதன் காரணமாக இந்த கருத்து முதல்வாதிகளிடையே வேறுபாடுகள் தோன்றுகின்றன.

மத்துவர் பரமாத்மா, ஜீவாத்மா, பொருள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேற்றுமைகளை விரிவாக எடுத்துக்காட்டுகிறார். சங்கரர் எல்லா வேற்றுமைகளையும் மறுத்துவிட்டு, ஒரே ஒரு பரமாத்மா மட்டும்தான் உண்டு என்று கூறுகிறார். ராமானுசர் வேறுபடும் இம்மூன்றிற்கும் இடையே உறவு உண்டு என்று கூறுகின்றார்.

மத்துவர் இம்மூன்றையும் வேற்றுமை உள்ளவை என்றே காணுகிறார். ஆக பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு என்று கூறுவதால் இவரது கொள்கை "துவைதம்" எனப்படலாயிற்று.

மத்துவர், ராமானுசர் ஆகிய இருவரும் சங்கரரிடமிருந்து மாறுபட்டவர்கள். இருவருமே சங்கரர் பேசும் மாயவாதத்தை கண்டித்தவர்கள். இராமானுசர் இறைவன், ஜீவாத்மா, பொருள் ஆகியவற்றிற்கு இடையே உறவு உண்டு என்று கூறியவர். இம்மூன்றையும் உண்டு என்று கூறியவர்.

மத்துவர் இம்மூன்றிற்கும் இடையே உறவு கிடையாது என்று கூறியவர். ஆனால் இம் மூன்றும் உண்மை என்று கூறியவர். இதன் காரணமாக மத்துவரது கொள்கை ஒருவகையான பன்மைவாதமாக அமைகிறது. ராமானுஜர், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டவர்.

மத்துவரும் அவ்வாறு ஏற்றுக் கொண்டுள்ளார். சங்கரர் கடவுள் நம்பிக்கை உள்ளவர். ஆனால், எந்தக் கடவுளையும் முழுமுதற் கடவுளாக அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்திய கருத்துமுதல்வாத வரலாற்றில் இது போன்ற முரண்பாடுகள் நிறைய இருப்பதைக் காணமுடியும். ஏனென்றால் கருத்து முதல்வாதத்தில் இது மிக சுலபமானது. ஒரு கருத்தை மறுத்து இன்னொரு கருத்து, அதை மறுத்து மற்றொரு கருத்து என்று அடுக்கிக்கொண்டே செல்லலாம். இது கருத்து முதல்வாதத்தின் தன்மை. பொருள்முதல் வாதத்தில் இதனை இவ்வளவு சுலபமாக செய்து விட முடியாது.

தொடர்புக்கு: **98947 83657**

---




# குவாட் அமைப்பில் இந்தியா என்ன செய்யும்?

**பல்வேறு வகைப்பட்ட கொள்கை சார்ந்த உத்தி வகுப்பாளர்கள் மே 24 டோக்கியோ குவாட் உச்சி மாநாட்டின் வெளிப்பாட்டை மதிப்பிடுவதில் பிஸியாக இருக்கிறார்கள். அதன் உலக ஆதரவாளர்கள் அந்த முன்னெடுப்பை வளர்ச்சிப் பாதை போக்கின் மைல்கல் என்று சித்தரிக்க இரவு பகலாக உழைத்து வருகிறார்கள்.**

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் இந்தியாவிலிருந்து வந்த தலைவர்களின் டோக்கியோ மாநாட்டின் முக்கியத்துவத்துடன் கூடுதலாகச் சிறப்புச் சேர்க்கக் கூட்டான வளர்ச்சி, அனைவரையும் உள்ளிணைத்த மேம்பாடு, பொறுப்பான பங்காளர் உறவு, சுதந்திர உலகின் மதிப்புகள் எனச் சம்பந்தப்பட்ட அத்தனை சொற்கோவைகளையும் மேம்பூச்சாக ஒப்பனை செய்கிறார்கள்.

அதிபர் ஜோ பைடனும் பிரதமர் நரேந்திரமோடியும் டோக்கியோ பேச்சுவார்த்தை பின்னணியில் இருந்த உணர்வைப் புகழ்வதில், ஐஸ் வைப்பதை ஒத்து, ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டனர். அமெரிக்க அதிபர் தேர்தலின்போது அவர்கள் எடுத்த நிலைபாடுகளை மறந்து இரண்டு தலைவர்களும் தங்களுடைய பரஸ்பர உறவை விவரிப்பதில் உச்சபட்ச உயர்வு நவிற்சி வார்த்தைகளைப் பயன்படுத்தினர். உண்மையில் அது, அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் இராணுவ உத்தி மேலாளர்கள் மேற்கொண்ட ஓரடி முன் எடுத்து வைத்த நடவடிக்கையாகும்; ஏனெனில் அது, உலகின் மிக முக்கியமான புவிசார் பிராந்தியத்திற்கான அவர்கள் தயாரித்த நிகழ்ச்சி நிரலை முன்னே எடுத்துச் செல்வதற்கானது.

அத்தலைவர்களின் அரசியல் சொல்லாடலில் ஆசிய–பசிஃபிக் பிராந்தியத்திற்கு இந்தோ பசிஃபிக் என்று மறுநாமகரணம், நன்கு அறிந்த காரணங்களுக்காக, சூட்டினர். டோக்கியோ உச்சி மாநாட்டின் பின்னணியில் 'இந்தோபசிஃபிக் பொருளாதாரச் சட்டகம்' என்று 13 நாடுகளை உள்ளடக்கி அமைப்பிற்குப் புதிய வடிவமும் தந்துள்ளனர்.

இந்த நிலப்பரப்பின் முக்கியத்துவத்தை யாரும் புறக்கணித்துவிட முடியாது. இந்தோ பசிஃபிக், புவியில் 25% நிலத்தையும், 65 சதவீத கடற்பரப்பையும் தன்னுள் கொண்டுள்ளது. உலக மக்கள் தொகையில் செம்பாதிக்கு அதிகமாகவும் உலகில் வாழும் இளைஞர்களில் 68 சதவிதத்தினரும் இப்பகுதியில் வாழ்கின்றனர். உலக ஜிடிபியில் 60 சதவீத உற்பத்திக்கும், உலகப் பொருளாதார வளர்ச்சியில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் காரணமாக அமைந்துள்ளது. நவீன உலகில் அத்தகைய முக்கியமான பகுதி அதற்கே உரிய முக்கியத் துவத்தையும் கொண்டுள்ளது. அப்பகுதியில் அமைந்துள்ள நாடுகள் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் தங்கள் வருமானத்தைக் கோருவது இயல்பேயாகும். அந்நோக்கத்துடன் கூடிய இணைந்த முயற்சிகள், மனித குலம் எதிர்கொள்ளும் பருவநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமயமாதல் போன்ற சவால்களைச் சந்திப்பதற்குத் தனது கவனத்தைக் குவிக்குமானால், அது வரவேற்கத்தக்கது.

பாரீஸ் (பருவநிலை) உடன்பாட்டில் ஒப்புக்கொண்ட பிறகும் எப்போதையும்விட அதிகக் கடுமையாகப் பருவநிலை மாற்றம் அதிகரித்து வருகிறது. தெற்காசியாவின் பனிச் சிகரங்கள் உருகி, அப்பகுதியில் தீவுகளாக உள்ள நாடுகளின் கடல் மட்டம் வாழ்வை அச்சுறுத்தும் அளவு உயரும் ஆபத்தைச் சந்திக்கின்றன. கோவிட் 19 ஏற்படுத்திய ஆபத்து உலகை இன்னும் சூழ்ந்துள்ளது. இப்பகுதி மட்டுமல்லாது முழு உலகின் பெரும்பகுதி மக்களையும் ஏழ்மை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் வேட்டையாடுகிறது. தற்போதைய பிரச்சனைகளைத் தீர்க்கக் கைவசம் இருக்கும் நிதியாதாரங்களை முறைப்படுத்தி பயன்படுத்துவது அவசியம்.

இந்நிலையில் குவாட் மற்றும் இந்தோ பசிஃபிக் பொருளாதாரச் சட்டக அமைப்பு முன் இருக்கும் அடிப்படையான கேள்வி, அவர்களுடைய கடமைகளையும் தயார் நிலையையும் புரிந்து கொள்வதும் முன்னுரிமை அளிக்க வேண்டிய பணிகளைப் பட்டியலிடுவதுமாகும். ஆனால் கிடைக்கும் அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள், குவாட் மாநாட்டு விவாதங்களில் நமது தற்காலத்தின் மிக அச்சுறுத்தலான சவால்களைப் பற்றி போகிற போக்கில் சில குறிப்புக்களை மட்டுமே சுட்டிக் காட்டுகிறது, போதிய முக்கியத்துவம் தரப்படவில்லை என்பதையே சொல்கிறது. குவாட் தலைவர்கள் தங்கள் அரசியல் மற்றும் பொருளாதார இலக்குகளையே வற்புறுத்தி அழுத்தம் தந்தனர். இவற்றிலிருந்து, அமெரிக்கா அனைத்து வகைகளிலும் தனது புவிசார்அரசியல் திட்டங்களுக்குக் குவாட் மேடையையும் மற்றுமொரு கருவியாகப் பயன்படுத்தும் சாத்தியமே தெளிவாகத் தெரிகிறது. இந்தியா போன்ற பங்குதாரர்கள் இந்த உலகளாவிய விளையாட்டில் உடன் விளையாடும் ஆட்டக்காரர்களாக மாறக்கூடும்.

உலகின் எப்பகுதியிலும் எப்போதெல்லாம் மோதல் முரண்பாடு எழுகிறதோ, அங்கெல்லாம் அமெரிக்கா தனது ஏகாதிபத்திய அரசியல் திட்டங்களுடன் ஈடுபட முயற்சிக்கும். அவர்களுக்கு ஒவ்வொரு மோதலும் ஆயுதப் போட்டியை விரிவுபடுத்தும் ஒரு வாய்ப்பு. எனவே முரண்பாடுகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளும் உரையாடலுக்கான கதவுகள் சீர்குலைக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புகள் கடுமையாகப் பலமிழக்கச் செய்யப்படுகின்றன.

டோக்கியோ உச்சி மாநாட்டிலும்கூட பிராந்திய மோதல்கள் மேல் அமெரிக்காவின் அதே அணுகுமுறை தெளிவாகத் தெரிகிறது. இந்தியா போன்ற பங்குதாரர்கள் வேறுபட்ட நிலை எடுக்கிறார்கள். சீனா குறித்து நாடுகளின் அணுகுமுறை ஒன்றுபட்டிருக்கிறது, ஆனால் ரஷ்யா மீது அப்படி ஒன்றுபட்டு இல்லை. அமெரிக்காவின் எந்த வெளியுறவு கொள்கை முன்னெடுப்புக்கும், (அதன் இராணுவப் பாதுகாப்புத் தலைமையகமான) பெண்டகனும் இராணுவ ஆயுதத் தொழிற்சாலைகள் கூட்டமைப்பு வளாகமும் முக்கியமானவை. அவர்கள் ஐரோப்பாவில் நேட்டோ அமைப்பை விரிவாக்கும் செயல் வழியில் உள்ளனர். ஆசியாவில் முந்தைய ஷிணிகிஜிளி அமைப்பு (தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பு) ஏறத்தாழ செயலற்ற உறக்க நிலையில் உள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்ப அமெரிக்கா குவாட் கூட்டமைப்பைப் பயன்படுத்துமா? பாதுகாப்பு (வர்த்தகப்) பேச்சு வார்த்தை உடன்பாடுகளும் பசிஃபிக் பகுதியில் இணைந்த இராணுவப் பயிற்சிகளும் குவாட் கூட்டமைப்பின் இந்த அம்சத்தையே சுட்டிக்காட்டுகிறது.

அமெரிக்க அதிபரின் தேசியப் பாதுகாப்புக் குழு செயல் அலுவலகத்தின் ஆவணம் ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது: "இந்தோ பசிஃபிக் பகுதிக்குப் போதுமான வாக்குறுதியும் வரலாற்றுத் தடைகளையும் தன்னுள் கொண்டுள்ள தீர்மானகரமான பத்தாண்டில் நாம் நுழையும் தருணத்தில், இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் பங்கு பாத்திரம் மேலும் திறனுடையதாகவும் முன்பைவிட நிலைத்து நிற்பதாகவும் இருக்கும்".

இந்தியா முன்புள்ள கேள்வி நேரடியானது, எளிமையான மற்றும் முக்கியமானது. ஆத்மநிர்பார் பாரத், தற்சார்பு இந்தியாவில் உள்ள நாம், அமெரிக்காவின் சித்து விளையாட்டு அல்லது உலகப் பெரியண்ணன் மேலாண்மைக்குக் கீழ்ப்படிதலுள்ள பங்குதாரராக இருக்கப் போகிறோமா? 21ம் நூற்றாண்டில் உலகத் தலைவராக மாற எத்தனிக்கும் இந்தியாவுக்கு அது நன்மை பயப்பதாக இருக்குமா? வெள்ளை மாளிகையால் தயாரித்தளிக்கப்பட்டுள்ள இந்தோ பசிஃபிக் செயல் திட்டத்தில் முக்கியமான வார்த்தை 'பதற்றத் தணிவு' (deterrence). அதன் பொருள் (எதிர் தரப்பைத் தாக்குதல் நடத்தத் துணியாது தடுப்பதற்காக) இராணுவ வலிமையை அதிகரிப்பது அல்லது சரிந்து வரும் அமெரிக்கப் பொருளாதாரம். (அப்போதுதான் ஆயுதங்களை ஏற்றுமதி செய்து இராணுவத்தைச் சார்ந்து இருக்கும் அமெரிக்கப் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியும்). அது அவர்களின் தேவையாக இருக்கலாம். ஆனால் இந்தியா போன்றதொரு தேசத்திற்கு அது முன்னுரிமையாக இருக்க முடியாது.

குவாட் அமைப்பிலும் இந்தோ பசிஃபிக் பொருளாதாரச் சட்டக அமைப்பிலும் போரும் அமைதியும் பற்றி கேள்விகள் மேலெழுந்து வரத்தான் போகிறது. பருவநிலை மாற்றம், பெருந்தொற்று, ஏழ்மை மற்றும் வேலையின்மை அதிகரித்துவரும் இந்நாட்களின்போது இந்தியா, போர் மற்றும் மோதல்களை ஆதரித்துத் தொண்டாற்றும் ஊழியனாக முடியாது. (புத்தர், காந்தி பிறந்த பூமியான) இந்தியா, அமைதி மற்றும் வளர்ச்சிக்கான ஆதரவாளராக மட்டுமே செயல்பட முடியும், செயல்பட வேண்டும்!

நன்றி: நியூ ஏஜ், தமிழில் : **நீலகண்டன்**



# சங்கே முழங்கு!

## யாரடா மீட்டது தெலுங்கானாவை!

**– டி.எம்.மூர்த்தி**

**தெலுங்கானா மாநிலம் உருவான நாள் விழா புது டெல்லியில் நடைபெற்றது. அதில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா கலந்து கொண்டு பேசசிய போது...**

*“சர்தார் பட்டேல் மட்டும் இல்லாமல் போயிருந்தால் தெலுங்கானாவும் அதைச் சுற்றி இருக்கக் கூடிய பகுதிகளும் இந்தியாவில் இருந்திருக்காது. நிஜாம் சமஸ்தானத்துக்குள் பட்டேல் படைகளை அனுப்பாமல் போயிருந்தால், இந்தியாவின் வரைபடம் இப்போது இருப்பதுபோல இருந்திருக்காது.*

*தெலுங்கானா, ஹைதராபாத் விடுதலையை நாம் கொண்டாடி இருக்க வேண்டும். இதுவரை மாநில அரசுகள் கொண்டாடவில்லை. என்றாலும் அடுத்து அமையும் நமது அரசு அதை சிறப்பாகக் கொண்டாடும். தெலுங்கானா போராட்ட வீரர் அல்லூரி சீதாராம் ராஜுவை ஒருபோதும் மறக்க மாட்டோம்...”* என்றெல்லாம் அவர் நீளமாக பேசி யிருக்கிறார்.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான சுராவரம் சுதாகர் ரெட்டி அவர்கள் தனது முக நூலில் கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்று டெல்லியில் பேசியது எல்லாம் அபத்தம்.

1. அல்லூரி சீதாராம ராஜு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, வடக்கு ஆந்திரப் பகுதிகளில் போராடிய மிகப் பெரும் தலைவர். நிஜாமை எதிர்த்து தெலுங்கானாவில் போராடியவர் அல்லர்.
2. தெலுங்கானா போராட்ட வீரர்களாக சில காங்கிரஸ் காரர்கள் பெயர்களை ஷா குறிப்பிட்டுள்ளார். நிஜாமின் கொடூர ஆட்சியை எதிர்த்துப் போராடி, இந்தியாவோடு நிஜாம் சமஸ்தானத்தை இணைப்பதற்கு உயிரேயே இழந்த 4500 கம்யூனிஸ்டுகளைப் பற்றி அவர் ஒரு வார்த்தை பேசவில்லை.
3. தெலுங்கானா வீரச்சமரின் கதாநாயகர்களான ரவி நாராயண ரெட்டி, மக்தூம் மொகிதீன், பட்டம் யெல்ல ரெட்டி உள்ளிட்ட அற்புதமான தலைவர்களில் ஒருவர் பெயரைக் கூட சொல்லாமல் பெயர்களை அவர் வேண்டு மென்றே விட்டுவிட்டார்
4. சர்தார் வல்லபாய் படேல் ஹைதராபாத் நிஜாமோடு பேசி, அதை பாகிஸ்தானோடு இணைக்காமல், சுதந்திரமான தனி நாடாக அறிவிக்கலாம் என்று தான் ஒப்பந்தம் போட்டார்!



**ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதமேந்திப் போராடி, நான்காயிரம் கிராமங்களை நிஜாமின் ஆட்சியிலிருந்து விடுவித்த பிறகு தான்,**

**இந்திய அரசு தனது இராணுவத்தை நிஜாம் சமஸ்தானத் துக்குள் அனுப்பியது. அப்போதும் கூட, விடுதலைக்கு போராடிய 5000 பேருக்கும் அதிகமானவர்கள் கொன்று குவித்த அந்த கேடுகெட்ட நிஜாம் அரசனைத் தூக்கில் போடுவதற்குப் பதிலாக, ஒரு மாநிலத்தின் ஆளுநருக்கு நிகரான பதவி கொடுத்து கௌரவித்தார்கள்!**

5. ஆயிரம் ஆயிரம் சாமானிய மக்கள், இரத்தம் சிந்தி உயிர்ப் பலி தந்து, பெரும் தியாகங்களால் மீட்டெடுக்கப்பட்ட தெலுங்கானா தினத்தில் ஒரு தேர்தல் பரப்புரையை அமிர்ஷா மேற்கொண்டிருப்பது வெட்கமானது.



அட்ரியன் சான் வைல்ஸ்

# சோவியத் செங்கொடிக்கு பெர்லினில் ‘தடை’

## ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு!





**சோவியத் செஞ்சேனை பாசிச ஜெர்மனிக்கு எதிரான போரில், பெர்லின் நகரில் ஏப்ரல் 16 – மே 2, 1945 வரை பதினாறு நாட்கள் 3,50,000 வீரர்களைப் பலி கொடுத்து வெற்றிக்கொடி நாட்டியது.**

கிழக்கத்திய போர் முனையில்தான் பாசிச ஜெர்மனியின் இராணுவ பலம் தவிடு பொடியாக்கப்பட்டது. கடுமையான சமர்களில் பாசிசம் முறியடிக்கப்பட்டது.

ஏப்ரல் 30 ஆம் தேதி பெர்லின் நகரில் ரைஹ்ஸ்டாக் கட்டடத் தின் மீது சோவியத் வீரர்கள் செங்கொடியைப் பறக்கவிட்டனர். பெர்லின் படையைத் தனிமைப்படுத்தினர். பாசிச தலைமை மத்தியில் பீதி கிளம்பியது. தான் இழைத்த கொடும் பாதகச் செயல்களுக்காக பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஹிட்லர் ஆளானார்.

முன் நிபந்தனை எதுவும் இன்றி சரணடைவது குறித்து , 1945 ஆம் ஆண்டு மே 8 ஆம் தேதி மத்திய ஐரோப்பிய நேரப் படி இரவு 11.01 மணிக்கு போர் நடவடிக்கையை நிறுத்துவது, தளவாடங்களை ஒப்படைப்பது, செஞ்சேனை, நேசநாட்டு படை களின் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படுவது, ஐ.நா சர்வதேச நியதிகளுக்கு தடையில்லை உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கி சரணாகதி ஒப்பந்தம் கையெழுத்தானது. சோவியத் தலைமை மே 9 ஆம் நாள் பொது விழாவாக, வெற்றித் திருநாளாக அறிவித்தது.

ஜெர்மானிய எழுத்தாளர் தோமஸ் மான் “பேய் ஒன்று கொல் லப்பட்ட இந்நேரம் வெற்றி பெற்றவர்களுக்கு மட்டுமின்றி ஜெர்மனிக்கும் மகத்தானதாகும். தேசிய சோசலிசம் என்ற பயங்கரமான, அசாதாரணமான ஒரு விபரீதம் மாண்டது. ஜெர்மனியானது குறைந்த பட்சம் ஹிட்லரின் நாடு என்றழைக் கப்படும் சாபத்திலிருந்து தப்பியது” என்றெழுதினார்.

இத்தகைய நிலையில் தான் ஜெர்மானிய மக்கள் பாசிச ஹிட்ல ரிடம் இருந்து ஜெர்மனியை மீட்டுத் தந்த சோவியத் நாட்டிற்கு தங்கள் நன்றியைப் பறைசாற்றி ஒவ்வொரு ஆண்டும் மே 8, 9 தேதிகளில் சோவியத் வீரர்களின் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்; சோவியத் செங்கொடிக்கு வணக்கம் செலுத்துகின்றனர்.

ஆனால், தற்போது போர் மற்றும் பாசிசத்தில் இருந்து ஜெர்மானிய மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்த சோவியத் செங்கொடிக்கு தடை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

பொதுவான உத்தரவு ஒன்றின் மூலம், பெர்லின் நீதிமன்றங்கள் பெர்லின் காவல்துறைக்கு , செங்கொடியை (சோவியத் யூனியன் மற்றும் செம்படையின்) பொது இடங்களில், கட்டிடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களுக்கு அருகில் கட்டுவது, எடுத்துச் செல் வது அல்லது தொங்கவிடுவதைத் தடை செய்யுமாறு உத்தர விட்டுள்ளன.

குறிப்பாக, இந்த ஆண்டு 2022 மே 8 மற்றும் 9 ஆம் தேதிகளில் சோவியத் கொடி தடை செய்யப்பட்டது. இதற்கு எதிராக ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி GKU வழக்கு தொடர்ந்துள்ளது. இது தொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

இந்த முடிவானது மே 8 (விடுதலை நாள்) மற்றும் மே 9 (வெற்றி நாள்) நினைவேந்தல்களை வேண்டுமென்றே இழிவுபடுத்துகிறது. போர் மற்றும் பாசிசத்தின் முடிவுக்கு வழிவகுத்த தியாகங்களை நினைவுகூரும் சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின் மீதான இந்த வெளிப்படையான தாக்குதலுக்கு எதிராக (GKP) ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி அவசர முறையீட்டை தாக்கல் செய்தது. ஆனால் பெர்லின் நிர்வாக நீதிமன்றம் மற்றும் உயர் நிர்வாக நீதிமன்றத்தால் இந்த மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டது.

இந்த முடிவுகளுக்குக் கூறப் பட்ட காரணங்கள் முற்றிலும் தன் னிச்சையானவை மற்றும் மூர்க்கத் தனமானவை. பெர்லின் அதிகாரிகள் சோவியத் செங்கொடியையும், (சுத்தி யலும் அரிவாள்’) சோவியத் செம்படையையும் ‘பாசிச’ சின்னமாக அறிவித்தனர். இது குறித்த விவாதத்தை அனுமதிக்கவில்லை. நாஜி ஜெர்மன் மரண முகாம்களின் கொடுங்கோன்மை, அடக்குமுறை மற்றும் துன்புறுத்தலுக்கு எதிராகப் போராடி, சோவியத் செம்படை ‘விடுதலை’ பெற்றுத் தந்ததைப் பற்றி எந்த விவாதமும் அனுமதிக்கப்படவில்லை. ‘நவீன’ ரஷ்ய இராணுவம் இன்னும் இந்த செங்கொடியை சுமந்து வருவதால், பெர்லின் நீதிமன்றங்கள் இவ்வாறு தீர்ப்பளித்தன. இந்தக் கொடியை இனி ‘சட்டப்பூர்வமாக’ பொதுவில் கொண்டு செல்ல முடியாது (அல்லது காட்ட முடியாது).

பெர்லின் நீதிமன்றங்கள் மற்றும் காவல்துறையின் பொது ஆணையின் ஏற்றுக்கொள்ள முடியாத தடைகள் நீக்கப்பட வேண்டும். சட்டப் போராட்டத்திற்கு நிரிறி மக்கள் ஒற்றுமையைக் கோருகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சோவியத் யூனியன் செம்படை இருந்தால் உக்ரைனில் போர் நடந்து இருக்காது என்று சுட்டிக்காட்டி ஜிகேபி சரியான அறிக்கையை வெளியிட்டது. பெர்லின் அதிகாரிகள் இந்த அறிக்கையை ரஷ்ய ஆக்கிரமிப்புக்கான ஆதரவின் வெளிப் பாடாக, ரஷ்ய அரசியல் கட்டுப்பாட்டின் பரவலாக, இறுதியில் உக்ரைனில் “ஒரு ஆக்கிரமிப்புப் போருக்கு ஒப்புதல்” என்பதாகக் கருதுகின்றனர். GKP யைப் பொறுத்தவரை செஞ்சேனையின் நினைவு நாட்களை இழிவுபடுத்துவதையோ அல்லது ஊழல் நிறைந்த நீதிமன்றத் தீர்ப்புகளையோ ஏற்கவில்லை. ஜி.கே.பி. தொடர்ந்து சட்டரீதியாகப் போராடும் என்று அக்கட்சி திட்டவட்டமாகக் கூறியுள்ளது. போர் மற்றும் பாசிசத்தில் இருந்து உலகை விடுவிப்பதில் சோவியத் ஒன்றியமும் செம்படையும் மிகப்பெரிய (முக்கியமான) பங்கைக் ஆற்றி இருக்கின்றன. அதனால் தான் இன்றும் சொல்கிறோம், நாளையும், என்றென்றும் சொல்வோம் : “சோவியத் செம்படை வீரர்களுக்கு நன்றி!” இவ்வாறு ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி முழங்குகிறது.

*செய்திக்குறிப்பு – தோழர் அட்ரியன் சான் வைல்ஸ் (சீன கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்) பதிவைத் தழுவி ம.இராதாகிருஷ்ணன் எழுதியது.*

## செஞ்சுரி அடித்த செஞ்சூரியன்

விடுதலை போராட்ட வீரர் **ஜனசக்தி வி.ராதாகிருஷ்ணன்** 13.06.2022 அன்று 101 வது வயதில் அடியெடுத்து வைக்கிறார். இதனை சிறப்பாக கொண்டாடும் வகையில் வரும் 19.06.2022 அன்று பிறந்த நாள் விழா நடைபெறுகிறது. ஜனசக்தி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



சி.மகேந்திரன்

# ஜனசக்தி ராதா

**நூறு ஆண்டுகள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை கம்யூனிஸ்டுகளிடம் தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேணடும் என்று ஒருவர் என்னிடம் கூறினார். அவர் கூறியதிலிருந்த நியாயத்தை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இந்திய அளவில் பல கம்யூனிஸ்டுகள் நூறு வயது வரை வாழ்ந்திருக்கிறார்கள் என்ற போதிலும், தமிழ்நாட்டில் தோழர் சங்கரய்யா அவர்கள் 100 ஆண்டுகளை நிறைவு செய்து விட்டார். தோழர் இரா.நல்லகண்ணு அவர்கள் 100 ஆண்டுகளை விரைவில் நிறைவு செய்ய இருக்கிறார்.**

மனிதரின் மறக்காத ஆசைகளில் ஒன்று, நூறு ஆண்டுகள் வாழ வேண்டும் என்பது. எத்தனைதான் முயன்றாலும் விரல் விட்டு எண்ணத்தக்கவர்கள் மட்டுமே நூறு வயதை எட்டியிருக்கிறார்கள். பல்வேறு கொடிய அடக்குமுறைகள், சிறைச்சாலை, ஆயுள் தண்டனை என்று இளமைக் காலத்தில் துயரங்களை சந்தித்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் நூறு வயதை கடந்தும் வாழ்வது வியப்பை அளிக்கத்தான் செய்கிறது. இது குறித்து மனநல மருத்துவர் ஒருவரிடம் கேட்டேன். அதற்கு அவர் அளித்த பதில் எனக்கு திருப்தியை அளித்தது. தனக்கென்று வாழாமல் பிறருக்கென்று வாழும் மனமும், தனி மனித ஒழுக்கமும் நீண்ட காலம் வாழ வகை செய்கிறது என்றார் அவர்.

தோழர் வி.ராதாகிருஷ்ணன் என்னும் ஜனசக்தி ராதா அவர்கள் ஜூன் 13 ஆம் தேதி, தன்னுடைய நூறு வயதை நிறைவு செய்து, 101 வது வயதில் அடியெடுத்து வைக்கிறார். தோழர் ராதாவின் இளமைகாலம் கொங்கு மண்டலத்தில் அமைந்திருந்தது. கோவை மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்த சந்தை நகரமான பொள்ளாச்சியில் 1922 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ம் தேதி பிறந்தார். தந்தையின் பெயர் வாசுதேவன். தாயார் பெயர் செல்லம்மாள். ராதாவின் ஐந்து வயதிலேயே தாயார் இறந்து விடுகிறார். இதனைப்பற்றி தோழர் தனது வாழ்க்கைக் குறிப்பில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார். ‘‘எனது தந்தையும், சித்தப்பாவும் பொள்ளாச்சியில் மளிகை வியாபாரம் செய்து வந்தனர். கடைக்கு பின்னால் வீடு. பள்ளி நேரம், வீட்டில் படிப்பு நேரம் போக மீதி நேரம் கடையில் இருந்து வியாபாரத்தை கவனித்து வந்தேன். அப்பொழுது காலணா விலையில் ஒரு சிறு வாரப்பத்திரிக்கை எங்கள் கடைக்கு வந்து கொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியை கிண்டல் செய்யும் கார்டூன் அதன் முதல் பக்கத்தில் இருக்கும். நம் மக்களின் வறுமை, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் அலட்சியம், அடக்குமுறை, தேசபக்தர்கள் கைது செய்யப்படுவது ஆகிய விவரங்களைத் தீவிரமாக வெளியிட்டு வந்த அந்த வார இதழின் பெயர் தான் சுதந்திரச் சங்கு’’ என்கிறார் ராதா.

தோழர் பிறந்த அதே பொள்ளாச்சியில் தான், கம்யூனிஸ்ட் தலைவர் பாலதண்டாயுதமும் பிறந்தார். இளம் வயதிலேயே சுதந்திரப் போராட்டத்தில் ஆர்வம் கொண்ட பாலன், பாலர் சங்கம் ஒன்றை தொடங்கியிருந்தார். பாலர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் ஜனசக்தி முதலான இதழ்களை வாசிக்கத் தொடங்கி, முற்போக்கு அரசியலில் பயிற்சி பெற்றிருந்தனர். பின்னர் தீவிர வாலிபர் சங்கம் என்று, இது தன் பெயரை மாற்றிக் கொண்டது. இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தால் மட்டும் போதாது; சோவியத் நாட்டில் அமைந்ததைப் போல ஒரு சோசலிச சமூக மாற்றம் இங்கு ஏற்படவேண்டும் என்ற குறிக்கோளை இந்த அமைப்பு கொண்டிருந்தது. இந்த பாசறையில் அடிப்படையான அரசியல் ஞானத்தை பெற்றுக் கொண்டார் ராதா. அப்பொழுது அவருக்கு வயது 13 முதல் 15 வரை இருக்கலாம்.

இதன் பின்னர், காங்கிரஸ் கட்சியின் மீது ஈடுபாடுக் கொண்டு, இரண்டு அணா கட்டணம் செலுத்தி காங்கிரஸ் கட்சியில் தன்னை உறுப்பினராக இணைத்துக் கொள்கிறார். எட்டணா கொடுத்து ஒரு கதர் சட்டையும், நாலு முழ கதர் வேட்டியும் வாங்கி தன்னை காங்கிரஸ்காரராக அறிவித்துக் கொள்கிறார். அன்றையக் கணக்குப்படி அதன் விலை 16 அணா. அதாவது ஒரு ரூபாய். காங்கிரஸ் ஈடுபாடு இவருக்கு அதிக காலம் நீடிக்கவில்லை.

1937 ஆம் ஆண்டில் பொள்ளாச்சியில் ஜீவாவின் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. தடைசெய்யப்பட்ட கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ் சோசலிஸ்டு கட்சி என்ற பெயரில் காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்து செயல்படுகிறார்கள். ஜீவா காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர். அவரது உரையை ராதா கேட்கிறார். மேடையில் புயல் ஒன்றின் ஆவேசம் தெரிகிறது தோழர் ராதாவுக்கு. ஜீவாவின் கருத்துத் தெளிவும், தீவிரமும், அர்ப்பணிப்பும், நேர்மையும் தோழர் ராதாவை ஈர்க்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியில் இணைவது என்ற முடிவுக்கு வருகிறார். அப்பொழுதுதான் அந்த நெருக்கடி அவரை சூழ்ந்து கொள்கிறது.

கோவை சதி வழக்கில், விசாரணைக்காக தோழர் ராதாவை போலீஸார் அழைத்து செல்கிறார்கள். அவரின் அப்போதைய வயது 19. கோவை சதி வழக்கின் குற்றவாளிகளாக 11 பேர் பொள்ளாச்சி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். கம்யூனிஸ்ட்கள் மீது பல்வேறு சதி வழக்குகள் போடப்பட்டன. இதில் சென்னை சதி



வழக்கிற்கும், கோவை சதி வழக்கிற்கும் ஒரு தொடர்பு இருந்தது. சென்னை சதி வழக்கில், கட்சியின் முன்னணி தலைவர்கள் மோகன் குமாரமங்கலம், பி. இராமமூர்த்தி, சி.சுப்பிரமணியம், சுப்பிரமணிய சர்மா, கேரளீயன், அனுமந்த ராவ், உமாநாத் ஆகிய 7 பேர் கைது செய்யப்பட்டார்கள். சென்னை சதி வழக்கு சோதனையில் சிக்கிய ஆவணங்களை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது தான் கோவை சதி வழக்கு.

இதில் தோழர் ராதா சிறுவன் என்பதால் அவரது மாமாவை துணைக்கு வைத்துக் கொண்டு, அவரை அப்ரூவராக மாற்ற போலீஸ் முயற்சி செய்கிறது. இது பற்றி தோழர் ராதா கீழ்கண்டவாறு எழுதியுள்ளார். ‘‘என் மாமா என்னை அவசரமாக அழைத்திருந்தார். அவரைப் பார்க்க சென்ற போது மாமாவுக்கு பக்கத்தில் மற்றொருவர் இருந்தார். பின்னர்தான் அவர் சிஐடி போலீஸ் நாராயணன் என்பதை தெரிந்து கொண்டேன்.


# சிந்தனை சிற்பி சிங்காரவேலரும் குத்தூசி குருசாமியும்


- ப.பரமசிவம்

**1930ல் தோழர் குருசாமிக்கு ஒரு புதிய அரசியல் ஆசானும், நண்பருமாகிய மா.சிங்காரவேலரின் அறிமுகம் கிடைத்தது.**

சிங்காரவேலர் இந்தியாவின் முதல் பொதுவுடமைவாதி. மீனவர் சமுதாயத்தை சார்ந்த இவர், சென்னை நடுக்குப்பத்தை சார்ந்தவர். 1860ம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிறந்த சிங்காரவேலர் பெரியாரை விட வயதில் மூத்தவர். இவர் பி.ஏ.,பி.எல். ஆகிய பட்டங்களை பெற்ற சிறந்த வழக்கறிஞர் பழுத்த நாத்திகர்.

1902ம் ஆண்டு இலண்டனில் நடந்த அகில உலக பௌத்த மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர். மாநாட்டை முடித்துக் கொண்டு திரும்பி வரும் பொழுது இலண்டனிலிருந்து நூற்றுக்கணக்கான பொதுவுடமை நூல்களை, இந்தியாவுக்குள் பொதுவுடமையை பற்றி கூறும் நூல்கள் நுழைய தடை இருந்த பொழுது, தடையை மீறி யாருக்கும் தெரியாமல் கொண்டு வந்து சேர்த்துள்ளார்.






1907ல் சூரத் நகரில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றுள்ளது. அதில் தீவிரவாத அணியின் தலைவராக இருந்த திலகர் மற்றும் வ.உ.சி., சர்க்கரை செட்டியார் ஆகியோரை சிங்காரவேலர் ஆதரித்துள்ளார்.

1917ல் நடந்த ரஷ்யப் புரட்சியை ஆதரித்து முதன்முதலாக சென்னையில் பொதுக்கூட்டம் நடத்தியவரும் சிங்காரவேலரேயாவார். இந்தியாவிலேயே முதன்முதலாக 1918ம் ஆண்டு ஏப்ரல் 27ல் தொழிற்சங்கம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து சர்க்கரை செட்டியார், முகுந்தலால் சர்க்கார் ஆகியோருடன் சேர்ந்து பல வேலைநிறுத்த போராட்டங்களை நடத்தினார்.

1919ம் ஆண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசு நடத்திய பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து திரு.வி.க., சர்க்கரைச் செட்டியார் முதலானவர்களோடு வேலைநிறுத்தத்தை செய்தவர். காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்திற்கும் ஒத்துழைப்பு செய்தவர் சிங்காரவேலர். 1921ல் வேல்சு இளவரசர் சென்னை வந்த பொழுது மறியல் செய்தார். 1923ல் சென்னையில் விவசாயத் தொழிலாளர் இயக்கத்தை அமைத்து இந்தியாவிலேயே முதன்முறையாகச் சென்னையில் மேதின விழாவை கொண்டாடியவரும் இவரே.

லேபர் கிசான் கெஜட் என்றும், ஆங்கில மாதமிருமுறை ஏட்டையும், தொழிலாளர் என்ற தமிழ் ஏட்டையும் நடத்தியவரும் சிங்காரவேலரே.

**பாட்டாளி வர்க்கம் தொடர்ந்து துன்பங்களை அனுபவிக்கும் வர்க்கம் அல்ல. பொருளாதார வாழ்வியல் நெருக்கடி பாட்டாளி வர்க்கத்தை உந்தித் தள்ளுகிறது. இறுதி விடுலைக்கு போராடும்படி நிர்பந்திக்கிறது. – ஏங்கல்ஸ்**

1924ம் ஆண்டில் கான்பூரில் நடந்த கம்யூனிஸ்ட் சதி வழக்கையொட்டி சென்னையில் கைது செய்யப்பட்டார். உடல்நிலை சரியில்லாததால் ஜாமீனில் வெளிவந்தார். உடல்நலம் தேறியதும் தன் மீதான வழக்கை நடத்துமாறு ஆங்கில அரசுக்கு தெரிவித்தார். கான்பூர் சதி வழக்கு முன்பே முடிந்துவிட்ட படியால் அரசு வழக்கை நடத்தாமல் வாபஸ் பெற்றுக் கொண்டதாம்.

சிங்காரவேலர் 1925ம் ஆண்டு கான்பூரில் நடைபெற்ற இந்தியப் பொதுவுடமை வாதிகளின் மாநாட்டுக்கு தலைமை வகித்தார். 1928ம் ஆண்டு நடந்த தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்தை தலைமை தாங்கி நடத்தியுள்ளார். இதற்காக 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் அடைந்தார். உயர்நீதிமன்றம் அத்தண்டனையை 18 மாதங்களாக குறைத்துள்ளது. சிறையிலிருந்து விடுதலையடைந்தார். இவர் சிறையிலிருந்து விடுதலையான இந்த சமயத்தில் தான்`இவருடன் தோழர் குருசாமிக்கு தொடர்பு கிடைத்துள்ளது. இவ்வளவு அனுபவங்களை பெற்ற சிங்காரவேலரின் தோழமை குருசாமியின் கவனத்தைப் பொதுவுடமைக் கருத்துகளின் பக்கம் திருப்பியது. குருசாமியின் தோழமையின் விளைவாகவே சிங்காரவேலர் குடியரசு அரசில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரின் எழுத்துக்கள் நீராக பாய்ந்து சுயமரியாதை இயக்கத்தை வளப்படுத்தியுள்ளன.

திருவல்லிக்கேணியில் சிங்காரவேலர் இல்லம் இருந்துள்ளது. சிங்காரவேலர் இல்லத்திலிருந்த மார்க்சியலெனினிஸ்ட் நூலகம் தமிழகத்திலேயே தனிநபரால் நடத்தப்பட்ட நூலகங்களிலேயே மிகப்பெரிய நூலகமாகும். இதில் இருந்த சுமார் இருபதினாயிரம் நூல்களில் மிக அரிதான நூல்கள் பல்லாயிரக்கணக்கில் இருந்தன. இந்த நூல்களில் பொதுவுடமைத் தொடர்புடையவை மட்டும் இரண்டாயிரத்துக்கு மேல் இருந்துள்ளது.

இந்த நூலகத்தை திரு.வி.க., சர்க்கரை செட்டியார், எஸ். இராமநாதன், நாகை.முருகேசன், ஏ.எஸ்.கே., ப.ஜீவானந்தம், புதுச்சேரி வ.சுப்பய்யா போன்றவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள். முழுமையாக நூல் நிலையத்தை பயன்படுத்தியது குருசாமியும் அவர் மனைவி குஞ்சிதம்மாளும் தான். குருசாமி தம்பதிகள் மீது அளவுகடந்த அன்பு கொண்டவராக இருந்துள்ளார் சிங்காரவேலர். இவரின் 70 வயது அனுபவத்தையும் முழுமையாக பயன்படுத்தி கொண்டவர் தான் குத்தூசி குருசாமி.

வடசென்னையில் சென்னை சுயமரியாதைச் சங்கம் என்ற ஒன்றும், தென்சென்னையில் மயிலாப்பூரில் ஒன்றும் சுயமரியாதைச் சங்கம் அமைத்து அதில் சிங்காரவேலர், குருசாமி, குஞ்சிதம் குருசாமி, கே.எம்.பாலசுப்ரமணியம், மயிலை சீனி வேங்கடசாமி, முத்து தங்கராஜு, ரங்கநாதன் ஆகியோர் உறுப்பினராக இருந்து நகரத்தில் இயக்க வளர்ச்சியை மேம்படுத்தியுள்ளனர்.

தொடர்புக்கு: 94429 95040

# வுக்கு வயது 101



கோவை சதி வழக்கில் நான் சம்பந்தப்பட்டு இருக்கிறேன் என்ற சிஐடி போலீஸ் நாராயணன், என் மீது விசாரணை இருக்கிறது என்றும் அப்ரூவராக மாறினால் மட்டுமே தப்பிக்க முடியும் என்று கூறினார். நான் மௌனமாக இருந்தேன். என் மௌனம் எனது சம்பந்தமாக அவர்கள் கருதி இருக்கவேண்டும்.

**பொள்ளாச்சியிலிருந்து எனது மாமா தனது காரில் என்னை பெரியநாயக்கன்பாளையம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றார். என் முன்னால் நிறுத்தப்பட்டவர்கள் அனைவரையும் எனக்கு நன்றாக தெரியும். பல்வேறு ரகசிய பணிகளை, அவர்களுடன் இணைந்து செய்திருக்கிறேன். அந்த இரகசியங்களை நான் கூறி விடுவேனோ என்ற அச்சம் அவர்கள் முகத்தில் தெரிந்தது. நான் மனதை உறுதிப்படுத்திக் கொண்டேன். என்னை பார்த்து இவர்களை உனக்கு தெரியுமா? என்றார் மாஜிஸ்ட்ரேட். மூன்று பேரை மட்டும் எனக்கு தெரியும். அவர்களில் மூன்று பேர் என்னோடு படித்த மாணவர்கள் என்றேன். உனக்கு ரகசியமாக செயல்படும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு உண்டா? என்றார். அப்படி எதுவும் கேள்விப்பட்டதில்லை என்றேன். நீ போகலாம் என்று மாஜிஸ்ட்ரேட் கூறிவிட்டார். தலைமறைவாக இருந்த கட்சியின் வழிகாட்டுதலில் தான் நான் இதை செய்தேன் என்பது எனக்கு மட்டுமே தெரிந்த உண்மையாகும்.**

மாமாவும், போலீஸ் சிஐடியும் என்னை காரில் ஏற்றினார்கள். ஏறியவுடனேயே என் மாமா தலையில் ஓங்கி அடித்தார். இன்னொரு விசாரணைக்கு முயற்சி செய்வோம், அதிலும் அப்ரூவராக மாறி சாட்சி சரியாகச் சொல்லவில்லை என்றால் இவனையும் ஜெயிலுக்கு அனுப்ப வேண்டியதுதான் என்று சிஐடி போலீஸ் கூறினார். இடையில் போலீஸ் சிஐடி காரில் இருந்து கீழே இறங்கி கொண்டார். இதன் பின்னர் பொள்ளாச்சியில் கார் எங்கள் கடைக்கு முன்னால் வந்து நின்றது. காரிலிருந்து இறங்கி மாமா கடைக்குள் நுழையும் வரை காத்திருந்து, ஒரு சந்து வழியாக தப்பி தலைமறைவு வாழ்க்கை நடத்திய தோழர்களுடன் போய் சேர்ந்து விட்டேன். இதன் பின்னர் எனக்கு இரண்டாவது வாழ்க்கை ஆரம்பமாகியது அதுவும் தலைமறைவு கட்சி வாழ்க்கை" என்கிறார் ராதா.

தலைமறைவு வாழ்க்கையில் சந்தித்த ஒருவரைப் பற்றி ராதா குறிப்பிடுகிறார். அவர்தான் புகழ்மிக்க எழுத்தாளர் ஜெயகாந்தன் போன்றவர்களின் உருவாக்கத்தில் முக்கியமாக பங்கு வகித்த தோழர் ஆர்.கே.கண்ணன் அவர்கள். அவர் கோவை மாவட்டம், திருப்பூரில் இம்பீரியல் வங்கியில் ஒரு உயர் அதிகாரியாக பணியாற்றியவர். பட்டமேற்படிப்பு வரை படித்தவர். அந்தப் பணியிலேயே அவர் இருந்திருந்தால், இந்தியாவின் ரிசர்வ் வங்கி கவர்னராகும் வாய்ப்பு கூட, அவருக்கு கிடைத்திருக்க கூடும். ஆனால், அந்தப் பணியை விட்டுவிட்டு தலைமறைவாகி கம்யூனிஸ்டு இயக்கத்தில், கோவை மாவட்ட கம்யூனிஸ்டு கட்சிக்கு தலைமை ஏற்று செயல்பட்டதாக தோழர் ராதா குறிப்பிடுகிறார்.

1942ஆம் ஆண்டு ஜனசக்தியில் முழு நேர ஊழியராக தோழர் ராதா பணியில் சேர்ந்த போது அவருக்கு வயது 20. 1948 ஆம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்படுகிறது. இது கட்சியை மட்டுமல்ல, ஜனசக்தியையும் முடக்கியது. ராதா சென்னை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்படுகிறார். அதன் பிறகு அங்கிருந்து வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு காவல் கைதியாக அழைத்து செல்லப்படுகிறார். இதன் பின்னர் வழக்கு ஒன்று தொடரப்பட்டு அதில் ராதா விடுதலைப் பெறுகிறார்.

தோழர் ராதா சிறந்த பத்திரிகையாளர் மட்டுமல்ல. மேடைத் தமிழின் மொழி பெயர்ப்பாளரும் கூட. இந்தியத் தலைவர்கள் பலருடைய மேடை உரையை தமிழில் மொழிபெயர்த்து வழங்குவதில் இவரது பங்கு மிகவும் சிறப்பானதாகும். கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர்கள் அஜாய் கோஷ், டாங்கே போன்றவர்களின் வீர உரையை பழகு தமிழில் மொழிபெயர்த்ததை பிரமிப்புடன் மூத்தத் தலைவர்கள் கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.

தோழர் ராதாவின் சாதி மறுப்பு திருமணத்தைப் போலவே, அவரது பெண் மக்கள் மூவரின் திருமணமும் சாதி மறுப்பு திருமணமாகும். தோழர் ராதா தனது திருமணத்தை நினைவு படுத்துகிறார். "1957ஆம் ஆண்டில் முதலமைச்சர் காமராஜ் குடியாத்தம் தொகுதியில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து போட்டியிட்டவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் தோழர் ஏ.கே.கோதண்டராமன். தேர்தல் பிரச்சாரத்திற்கு நானும் சென்றிருந்தேன். அப்பொழுது பாப்பா உமாநாத் அவர்களுடன் வந்தவர் தான் என்னுடைய துணைவி மோட்சமேரி. பொன்மலையில் செயல்பட்ட இயக்கத் தோழர் அந்தோணிசாமி அவர்களுடைய மகள். எங்கள் திருமணம், ஆடம்பரம் எதுவுமில்லாமல் அனந்த நம்பியார் தலைமையில் திருச்சியில் பதிவுத் திருமணமாக நடைபெற்றது" என்று ராதா கூறுகிறார்.

அம்பத்தூர் நியூ செஞ்சுரி காலனியில் இப்பொழுது வசித்து வரும் தோழர் ராதாவின் இணையர் மோட்ச மேரி இன்று உயிருடன் இல்லை. இந்த தம்பதியினருக்கு மூன்று பெண் மக்கள். கீதா, சாந்தி, பாரதி. முதல் மகள் கீதா வணிக இயல் மற்றும் பொருளாதாரத்தை முதன்மைப் பாடமாக கொண்டு அன்றைய சோவியத் நாட்டின் தாஷ்கண்டில் உயர்கல்வி கற்று, சென்னை சாந்தோமில் அமைந்த ரஷ்ய தூதரகத்தில் பணியாற்றியவர். இரண்டாவது மகள் சாந்தி, தஞ்சை மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பட்டம் பெற்று சென்னையில் பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். மூன்றாவது மகள் பாரதி தாஷ்கண்டில் கணினி பொறியியல் பட்டம் பெற்றவர்.

தோழர் ராதா ஒரு சகாப்தம். ஜனசக்தி இதழுடன் எண்பது ஆண்டுகள் தொப்புள்கொடி உறவு கொண்டவர். அவர் ஜனசக்தி ராதா என்றே அழைக்கப்படுகிறார். தொட்டால் காகிதமாகவும், தொடர்ந்தால் ஆயுதமாகவும் வாழ்ந்து வரும் ஜனசக்தி வரலாற்றின் நிகழ்கால சாட்சியம் தான் தோழர் ராதா. அவர் உயிர்ப்புடன் இன்றும் நம்மிடம் வாழ்ந்து வருவது நாம் அனைவருக்கும் பெருமை தரும் ஒன்றாகும்.

தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

## ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் உருவான

# மலை அரசிகளுக்கு ஆபத்து

பி.எஸ்.மாசிலாமணி

தமிழ்நாடு முழுவதுமே கட்டுப்பாடற்ற முறையில் பரவலாக மலைகள் அழித்தொழிக்கப்பட்டு வருகிறது. இயற்கை வாழ்வு நிலைகள் மறந்து மேலை நாகரீக வாழ்விற்கு நாம் மாறிப் போனதால், புதிய வாழ்வின் தேவைக்கு சில மாற்றங்கள் தேவைப்படுகிறது. ஆனாலும், இயற்கை தந்த அடிப்படைகளை அழித்து மாற்றும் நிலை வரக்கூடாது. "இயற்கையை நாம் வஞ்சித்தால்... இயற்கை நம்மை வஞ்சிக்கும்" என்றார் மார்க்சிய மேதை பிரெட்ரிக் எங்கெல்ஸ்.

இயற்கையை நாம் மறுதலித்ததால் தான், உலகவெப்ப மயம் எகிறல், கடல் நீர்மட்டம் உயர்வு, பருவம் தவறிய மழை, புதிய புதிய நோய்களின் தாக்கமும் ஆகும். இவற்றில் ஒன்றுதான் இயற்கை ஈந்த மலைகளை அழிப்பது. மேற்குதொடர்ச்சி மலைகளால் தான் பருவ மழைகள் சீராக தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் கிடைக்கிறது. மலைகளில் உருவாகும் நீரூற்றுகள், ஓடைகள், ஆறுகள் தான் பலநதிகளின் தாய் மடிகளாகும். இவைகளுக்கு தொடர்ந்து ஆபத்து விளைவிக்கப்படுகிறது.

வளர்ந்துவரும் மக்கள் தேவைக்கு உகந்த முறையில் சாலைகள் கட்டுமானங்கள் அமைத்திட வேண்டாமா? அதற்கு மணலுக்கு மாற்றாக எம்.சாண்ட் மற்றும் ஜல்லிகள் தேவைதான். உரிய அளவு, உரிய நிலையில் எடுத்து பயன்படுத்திடவே வருவாய்த்துறை, கனிமவளத்துறை, சுற்றுச்சூழல் துறை, மாசுகட்டுப்பாட்டுத் துறை ஆகிய அரசுத் துறைகள் வரையறுக்கப்பட்ட அளவுகளில் அனுமதி வழங்குகிறது. ஆனால் நடைமுறை செயலாக்கத்தில் இவ்விதிகள் அப்பட்டமாக மீறப்படுகிறது என்பதுதானே உண்மை!

இதை நேரில் கண்டறியவே சேலம் மாவட்ட தோழர்களுடன் இந்த மலைகளில் ஏறி பார்வையிட்டோம். சிலமலைகள் இருந்த இடமே தெரியவில்லை. மலையை வெட்டி குடைந்து மேலும் ஒரு மலை அளவு ஆழம் வெட்டி எடுக்கப்பட்டு வருகிறது. இதில் இருந்த காடுகள் அழிக்கப்பட்டுள்ளது. அனுமதி அளிக்கப்பட்ட அளவிற்கு அப்பாலும் மலைகள் வெட்டி எடுக்கப்பட்டு வருகிறது. ஜல்லி, கிராவல் மற்றும் இதர பொருட்கள் எடுக்கலாம் என அனுமதி வழங்கியுள்ளதால் சில ஆண்டுகளாக எம்.மணலும் எடுக்கப்படுகிறது. இதற்காக பல கன்வேயர் பெல்ட்கள் மூலம் ஜல்லிக் கற்களை கொண்டு சென்று அரைக்கிற போது, இதன் துகள்கள் காற்றில் கலந்து புகைமண்டலமாகி இப்பகுதிகளில் வாழும் மக்களின் மூச்சுக்காற்றை பாதிக்கிறது. இங்கு விளைவிக்கப்படும் தக்காளி, பூ வகைகள், தென்னை பூக்கள் பிஞ்சிலேயே உதிர்கிறது. தப்பிப்பிழைப்பவை நிறம் மாறி உருமாறி போய் விடுவதால் விலை போகாது விவசாயிகள் இழப்பிற்கு உள்ளாகி வருகின்றனர்.





காற்றில் பரவி படரும் துகள்களால் தேனீக்களின் மகரந்த சேர்க்கை பாதித்து மகசூல் பெருமளவு குறைந்து விட்டது. இதன் அருகில் உள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள் தினசரி இக்காற்றை சுவாசித்து எதிர்கால ஆபத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள். மலையிலிருந்து கனரக வாகனங்களில் இவைகளைக் கொண்டு வருகிற போதும் வழிநெடுக உள்ள குடியிருப்புகளையும், சாலைகளையும் தோட்டங்களையும் பாதிக்கிறது. நீரூற்று வழிகள் தடை பட்டுபோனதால் மலைகளின் அடிவாரத்திற்கு தண்ணீர் வரத்து குறைந்து விட்டது. இதனால் ஆழ்குழாய் நீர்மட்டம் கீழ் இறங்கி வருகிறது. மலைகள் ஆழமாக வெட்டி எடுக்கப்பட்ட சில இடங்களில் தண்ணீர் குட்டையாக தேங்கி நிற்கிறது. வெடிக்கப்படும் வெடிமருந்துகள் இந்த நீரில் கலந்துள்ளதால், நீர்வாழ் உயிரினங்கள் இறந்து போகின்றன. இதனால் சுற்றுச்சூழல் கேடு, தண்ணீர் மாசுபாடு அடைகிறது. மலையின் மேலே உள்ள கோவிலுக்கு செல்லும் பாதையைக்கூட வெட்டி எடுத்து விட்டார்கள்.

நான் பார்த்தவரை 5 கம்பெனிகள் இப்படி உள்ளன. ஆடு மாடுகள் மேய்வதற்கு மேலே சென்றால் மேய்வதற்கு வாய்ப்பில்லை; இறப்பதற்கான சூழல் உள்ளது. கால்நடைகள் மலையின்மேல் போகக்கூடாது என வனத்துறை பாதுகாப்புச் சட்டம் கூறுகிறது. கட்டுப்பாடற்று மலைகளை மட்டும் அழிக்க விடலாமா! ஆடுகள், காடுகளை அழிக்கக் கூடாது என்றால், மனிதர்கள் மலைகளையே அழிக்கலாமா? அனுமதி பெற்றது ஒன்று, அதிகாரிகளுக்கு ஆராதனை செய்து வெட்டுவது வேறு!

மலைகளை அழித்து, சில நபர்களை காக்காதே; மலைகளைகாத்து, எதிர் வரும் தலைமுறையைக் காத்திடு! நடுப்பட்டி ஊராட்சி மக்களை பாதுகாத்திடு! என வலியுறுத்தி சேலம் மாவட்டம் காடையாம்பட்டி தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய குழு சார்பில் நூற்றுக்கணக்கான பாதிக்கப்பட்டோர் இரண்டு கிலோ மீட்டர் பேரணியாக வந்து வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்னால் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட செயலாளர் என்.கே. செல்வராஜ் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, சிபிஐ மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாநிலக் குழு உறுப்பினர் பி.பரமசிவம், மாவட்ட தலைவர் எம்.சின்னதம்பி ஆகியோர் கண்டன உரையாற்றினர். எஸ்.முருகன், வி.சண்முகம், பி. வசந்தி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முன்னரே வட்டாட்சியரிடம் கோரிக்கை மனு கொடுப்பதை சொல்லியிருந்தும், பேரணியை பார்த்தபின் பொறுப்பில்லாமல் சென்று விட்டார்.

சேலம் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து கட்டுப்பாடற்ற மலைகள் உடைப்பை தடுத்து, பொதுமக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்திட, இயற்கை சூழலை காத்திட கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: **94438 65101**




**உழைக்கும் வாழ்க்கைக்கும் வாழ்கின்ற வாழ்க்கைக்கும் இடையே உள்ள பரிதாபமான துன்பநிலை என்பது உழைக்கும் வர்க்கம் தனது உழைப்பு முழுவதையும் கூலிக்காக இழந்து விடுவது என்பதுதான்.**

**- மார்க்ஸ்**



# தேசிய கல்விக் கொள்கையும் அலாவுதீன் அற்புத விளக்கும்

கே.கதிரவன்




**மத்திய அரசு தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கும் தேசிய கல்வி கொள்கை 2020 மூலமாக அறிவித்திருப்பது என்னவென்றால் இந்தியா முழுவதும் பள்ளிக்கல்வியில் இருந்து உயர்கல்வி செல்லும் மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை (Gross Enrolment Ratio) வருகின்ற 2035 ஆம் ஆண்டுக்குள் 50 சதவிகிதத்திற்கு உயர்த்துவது ஆகும்.**

இந்தத் திட்டத்தின் மூலம் அனைத்து மாணவர்களும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு மத்திய அரசு எந்தவித நிதியை மாநில அரசுகளுக்கோ அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவிற்கோ வழங்கவில்லை. அதேபோல் இந்தியாவில் அமைந்துள்ள கல்வி நிறுவனங்களுக்கு எந்தவித புதிய கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு நிதி உதவி மத்திய அரசு அளிக்கவில்லை. மத்திய அரசின் பங்களிப்பு இல்லாமல் இந்திய மாணவர்கள் உயர் கல்வியை எப்படி அடைய முடியும் என்று தேசிய கல்விக் கொள்கையினை வகுத்த வல்லுனர்களின் ஆழ்ந்த சிந்தனைக்கு பிறகு அவர்களின் எண்ணத்தில் இருந்து உருவாக்கிய நவீன கல்வி முறை தான் இன்று நடைமுறை படுத்துகின்ற இணையவழி கல்வியாகும். அதாவது அலாவுதீன் அற்புத விளக்கு போன்ற அருமையான கருவிதான் இணையவழி கல்வி. இதன் மூலம் மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை (நிகூஷீஷீஉஉ ணிஸீகூஷீஷீறீனீமீஸீமீ ஸிணீமீவீஷீ) நாம் 50 சதவிகிதமாக உயர்த்துவதற்கு 2035 வரை காத்திருக்க வேண்டியதில்லை, அதே வேளையில் 2025ஆம் வருடமே இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் உயர் கல்வியை பெற்றுவிட முடியும்.

உலகிலேயே இந்தியாவில் 99 சதவிகித மக்கள் உயர் கல்வியை கற்றவர்கள் என்ற உலக கல்வியாளர்களின் வரிசையில் முதல் இடத்தை மிகவும் எளிதாக அடையலாம். ஆனால் இதிலும் ஒரு பின்னடைவு இருக்கின்றது, அதாவது பொருளாதார வசதி படைத்தவர்கள் மட்டுமே இணைய வழி கல்வியை இணைய வேகத்தில் பெற முடியும், மற்றவர்களை மத்திய அரசு எப்படி அணுகப் போகிறது என்று தெரியவில்லை. ஒருவேளை பொருளாதார வசதி படைத்தவர்கள் மட்டுமே உயர்கல்வியை பெற்றால் போதும், என்ற கொள்கையை மறைமுகமாக வகுத்துள்ளதா என்று தெரியவில்லை.

குஜராத் மாநிலத்தில் பிரிட்டிஷ் பிரதமர் வருகையின்போது சாலையோரம் உள்ள குடிசை வீடுகளை பிரிட்டிஷ் பிரதமருக்கு தெரியக்கூடாது என்பதற்காக வெள்ளை துணியால் திரையிட்டு மறைத்ததுபோல இந்தியாவில் உள்ள ஒடுக்கப்பட்ட, பட்டியலின மக்களையும் இதன்மூலம் திரையிட்டு மறைக்க போகின்றார்களோ அல்லது இவர்களை கணக்கில் எடுத்துக் கொள்வார்களா என்று தெரியவில்லை.

சென்னை ஐஐடி கல்வி நிறுவனமானது இளங்கலை தரவு அறிவியல் பட்டப் படிப்பு இணையவழியில் கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுவாக இந்தியாவில் உள்ள அனைத்து ஐஐடி கல்வி நிறுவனங்கள் மாணவர் சேர்க்கை என்று தனியாக நுழைவுத் தேர்வு நடத்தும். இந்த இணைய வழி இளங்கலை தரவு அறிவியல் பட்டப் படிப்பிற்கு ஜே இ இ என்கின்ற நுழைவுத்தேர்வினை மாணவர்கள் கட்டாயம் எழுத வேண்டும் என்பது தேவையில்லை. இந்த பாடத்தை படிப்பதற்கு வயது வரம்பு கிடையாது, அதாவது 17 வயது முதல் 75 வயது வரை உள்ள நபர்கள் படிக்கலாம். இதனால் ஜே இஇ என்ற நுழைவுத்தேர்வு இல்லாததால் இந்தியாவில் உள்ள எந்த திசையில் இருந்தும் இணைய வழி மூலமாக கல்வி பெற்று ஐ. ஐ.டி.யில் பட்டப்படிப்பை சுலபமாக பெற்றுக்கொள்ளலாம் என்று இதன் இயக்குனர் காமகோடி அவர்கள் தெரியப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக இதில் எவ்வளவு மாணவர்கள் வேண்டுமானாலும் சேர்ந்து படிக்கலாம். தமிழக அரசு, அல்லது அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை படிக்க வேண்டும் என்றால் கல்லூரிகளில் 50 அல்லது 60 மாணவர்கள் அரசு அனுமதித்த இடங்கள் தான் இருக்கும், ஏனென்றால் இதற்கு மேல் மாணவர்கள் அமர்ந்து வகுப்பறையில் படிக்க இயலாது மற்றும் போதுமான ஆசிரியர்கள் கிடையாது, இதை மனதில் கொண்டுதான் ஒவ்வொரு கல்லூரிகளிலும் ஒரு வகுப்பிற்கு 50 அல்லது 60 மாணவர்களை தமிழக அரசு ஒதுக்கீடு செய்கின்றன. ஆனால் தேசிய கல்வி கொள்கை இந்த பிரச்சனையை தீர்ப்பதற்காக அலாவுதீனின் அற்புத விளக்கு போல் இணைய வழிக் கல்வியை பயன்படுத்துகின்றனர், அதாவது இணைய வழிக் கல்வியில் நீங்கள் எவ்வளவு மாணவர்களை வேண்டுமானாலும் அனுமதிக்கலாம்.

அதாவதுதற்பொழுதுதினசரிசெய்தித்தாள்கள்இணையவழியில் இபேப்பர் என்ற வடிவில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்த இபேப்பர் செய்தித்தாள்களை உலகம் முழுவதிலும் எங்கிருந்து எப்போது வேண்டுமானாலும் அதை தரவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம், அதுபோல் தேசிய கல்விக் கொள்கையின்படி மாணவர்கள் இளங்கலை பட்டப்படிப்பை உலகின் எந்த மூலையில் இருந்தும் இணைய வழிக் மூலம் நேர வரம்புயின்றி படிக்கலாம் என்ற ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளனர்.

சென்னை ஐஐடி கடந்தவருடத்தில் இளங்கலை தரவு அறிவியல் பட்டப்படிப்பில் மட்டும் 12500 பனிரெண்டாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்களை இப்பாடத்திட்டத்தில் இணைத்து இணையவழி வகுப்புகளை நடத்தி வருகின்றனர். அதாவது, 208 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நேரடியாக வகுப்பில் படிக்க வேண்டிய மாணவர்களை தற்பொழுது சென்னை ஐஐடி நிறுவனத்தை நோக்கி சென்றுள்ளனர். இது ஒரே ஒரு பாடத்திட்டத்திற்கான மாணவர்களின் எண்ணிக்கை இதுபோன்று, சென்னை ஐஐடி வருகின்ற காலங்களில் இணையவழியில் பல்வேறுபட்ட படிப்புகளை அறிமுகப்படுத்தினால் தமிழக நகரங்களில் வாழும் மாணவர்கள் அனைவரும் ஐஐடி நோக்கி சென்றுவிடுவார்கள். இதனால் வரும் காலங்களில் சென்னை ஐஐடி ல் 12,500 மாணவர்கள் என்பது பல லட்சங்கள் ஆக மாணவர் சேர்க்கை மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது, இதனால் கல்லூரிக்கு சென்று பாடங்களை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைய வாய்ப்பு உள்ளது.

இதனைப் போன்று இணையவழி பட்டப்படிப்புகளால் வரும் காலங்களில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் எதிர்காலம் தொழில் நுட்ப கல்லூரிகளை போன்று கேள்விக்குறியாகும். மாணவர்களுக்கோ அல்லது மாணவர்களின் பெற்றோர்களுக்கோ பட்டப் படிப்புயினை இணையவழி கல்வியினால் பட்டங்களை பெறுவது பற்றி மாணவர்களுக்கு கவலையில்லை, அவர்களுக்கு வேண்டிய பட்டப்படிப்பை சென்னை ஐஐடி மூலமாக கிடைத்தால் அவர்களுக்கு பெருமிதம்.

தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் சென்னை ஐஐடி போன்று தன்னாட்சிக் கல்லூரிகளும் பல்கலைக்கழகத்தின் எந்தவித அனுமதி பெறாமலும் பட்டப்படிப்புகளை இணையவழி மூலம் அளிக்கலாம் என்ற அறிவிப்பை கடந்த 2 மாதங்களுக்கு முன்பு பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்தது. சென்னை ஐஐடி எப்படி தற்பொழுது இணையவழி பாடங்களை நடத்துகின்றார்களோ அதேபோல், தன்னாட்சிக் கல்லூரிகளும் இணையவழி பட்டப்படிப்பை அறிமுகப்படுத்தினால், தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவை கடந்து உலக நாடுகளுக்கு இந்திய கல்வி நிறுவனங்கள், கல்வி கொடை அளிக்க முடியும். இத்திட்டமானது இந்திய மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், உலக மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பாடத்திட்டம் என நாம் புரிந்து கொள்ள வேண்டும் எனக் தோன்றுகின்றது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு தற்போது மூன்று வருடங்களாக இருந்து வருகிறது. அதில் ஆறு பருவ தேர்வுகள் நடைபெறும், ஒவ்வொரு பருவத்திற்கும் 6 பாடங்கள் குறைந்தது இருக்கும், ஒவ்வொரு பாடத்திற்கும் 5 அலகுகள் என பாடங்கள் அமைந்திருக்கும். ஒரு பருவத்திற்கு 90 நாட்கள் வகுப்புகள் இருக்க வேண்டும். மாணவர்கள் 75 சதவிகித வருகை பதிவேடு கட்டாயம் இருக்க வேண்டும். 75 சதவிகிதத்துக்கும் குறைவான வருகை பதிவு கொண்ட மாணவர்கள் தேர்விற்கு அனுமதி கிடையாது என்ற முறையில் மாணவர்கள் தற்போது பட்ட படிப்பை படித்து வருகின்றனர். ஆனால் இணைய வழிக் கல்வியில் எந்தவிதக் கட்டுப்பாடுகளும் கிடையாது, வருகைப்பதிவேடு எப்படி இருக்கும் என்று தெரியாது அதேபோல் மாணவர்களை படிக்கிறார்களா அல்லது படிக்கவில்லையா என்று எவ்விதத்திலும் ஆசிரியர்கள் அறிய முடியாது.

ஆக மாணவர்கள் தாங்கள் எந்த நேரத்தில் விரும்புகின்றனர் அல்லது எந்த நேரத்தில் தங்களுக்கு நேரம் கிடைக்கின்றதோ அந்த நேரத்தில் பாடத்திட்டங்களை தரவிறக்கம் செய்து படித்துக்கொள்ளலாம். 90 நாட்கள் நேரடி வகுப்பில் ஆசிரியர்களுடன் நேரடி தொடர்புள்ள மாணவர்களில் சில மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைகின்றனர். ஆனால் இணையவழியில் கட்டணத்தை செலுத்திவிட்டு பாடங்களை இணையவழியில் தரவிறக்கம் செய்து படிக்கின்ற மாணவர்கள் தங்களால் இணையவழி தேர்வின் மூலமாக தேர்வு அடைவார்களா என்கின்ற சந்தேகம் நமக்குள் எழுகின்றது. இருந்தாலும் அப்படியே அவர்கள் தேர்வில் வெற்றி பெற்றாலும் நேரடியாக வகுப்பறையில் படித்த கல்விக்கும் இணைய வழியில் படித்த கல்விக்கும் பெரியதொரு இடைவெளி இருக்கும் என்று கல்வியாளர்கள் கருதுகின்றனர்

**இதுபோன்ற இணைய வழி பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தினால், ஏழை, கிராமப்புற ஒடுக்கப்பட்ட மற்றும் பட்டியலின பழங்குடியின மாணவர்களும் மற்றும் பொருளாதாரத்தில் முன்னேறிய மாணவர்களுக்கும் அதிகமான இடைவெளி ஏற்பட வாய்ப்பு உள்ளது.**

அதாவது பொருளாதாரத்தில் வசதி படைத்த மாணவர்கள் தாங்கள் விருப்பப்பட்ட கல்வியை இணையவழி மூலம் கட்டணம் செலுத்தி கல்வியை பெறக்கூடும், அதேநேரத்தில் இணைய வழி என்பதால் பகல் நேரங்களில் தங்களின் குடும்ப வணிகத்தில் அல்லது வேலைக்கு சென்று பொருளாதாரத்தை ஈட்ட முடியும். ஆனால் கிராமப்புற மற்றும் ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அரசின் கல்லூரிகள் மட்டுமே புகலிடம், ஏனென்றால் அரசு கல்லூரிகளில் கட்டணம் மிகவும் குறைவாக இருந்து வருகின்றது. இதனால் மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு அதிகமாக ஏற்பட வாய்ப்பு உள்ளது.

மறுபுறம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறைவதற்கான வாய்ப்பு உள்ளது. அதுபோன்று மாணவர் சேர்க்கையே இல்லை என்ற சூழ்நிலை அரசு கல்லூரிகளுக்கும் மற்றும் கிராமப்புற பள்ளிகளுக்கும் ஏற்படக்கூடும். இதனால் கிராமப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகள், மிகுந்த பொருளாதார நெருக்கடியை சந்திக்கின்ற சூழ்நிலை ஏற்படும். இதன் காரணமாக பெரும்பாலான கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் வலுக்கட்டாயமாக இதன் மூலம் பாதிக்கபடுகின்ற சூழல் ஏற்படும்.

எப்படி தனியார் பொறியியல் கல்லூரிகள் தற்பொழுது மூடுவிழா கண்டுகொண்டு இருக்கின்றதோ, அது போல் கலை அறிவியல் கல்லூரிகளும் வருங்காலத்தில் மூடுவதற்கான சூழ்நிலை ஏற்படவும் கூடும், ஆகையால் வரும் காலங்களில் மாணவர்கள் கல்வியை மறந்து இணைய வழிக் கல்வியை நோக்கி செல்லுகின்ற பொழுது மாணவர்களின் மனதிலும் மற்றும் உடலில் ஏற்பட போகின்ற மாற்றங்கள் என்பது ஆய்வுக்கு உட்பட்டவை ஆகும். ஏற்கனவே நாம் கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா என்ற பேரிடரால் நமது மாணவர்கள் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லமுடியாத தருணத்தில் மாணவர்கள் உடல்நிலை மற்றும் மனதில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டன. தொடர்ந்து இணையத்தின் மூலமாக கைபேசி மற்றும் மடிக்கணினி வழியாக பாடங்களை படித்துக் கொண்டிருக்கின்ற மாணவர்களின் கண்பார்வை மற்றும் உடல்ரீதியான உபாதைகள் அதிகமாக ஏற்பட்டுள்ளன.

இணையவழி கல்வியினால் நமக்கு ஏற்படப்போகும் பொருளாதாரம் மற்றும் மனோதத்துவ சிக்கல்களை ஆராய்ந்து தெளிவு பெற்ற பின் இது போன்ற படிப்புகளை தமிழகத்தில் அறிமுகப்படுத்த வேண்டும். தமிழக முதல்வரால் அமைக்கப்பெற்ற தமிழகத்திற்கான கல்விக்குழு இதனை நன்கு ஆராய்ந்து இது போன்ற பட்ட படிப்புகளை நாம் நம் தமிழகத்தில் ஏற்க வேண்டுமா அல்லது ஏற்க வேண்டாமா என்று முடிவு எடுத்தபின் இதுபோன்ற இணையவழி பாடங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதே சாலச்சிறந்ததாகும்.

தொடர்புக்கு: **8667338638**

## ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில்

# தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்






மத்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஓராண்டாக தில்லியில் நடைபெற்ற போராட்டத்தை ஒருங்கிணைத்த தலைவர்களில் முக்கியமானவர் பாரதிய கிஷான் யூனியன் அமைப்பின் தலைவர் ராகேஷ் சிங் திகாயத்.

பெங்களூரு காந்தி பவனில் கர்நாடக விவசாய சங்கம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் ராகேஷ் சிங் திகாயத் பங்கேற்றார். அப்போது, மேடை அருகே வந்த ஒருவர் ராகேஷ் சிங் திகாயத்தை அங்கிருந்த மைக்கை எடுத்து தாக்கினார். தொடர்ந்து மற்றொரு இளைஞர் ராகேஷ் மீது கருப்பு மையை வீசினார். இதையடுத்து, அங்கிருந்த ராகேஷ் ஆதரவாளர்கள், தாக்குதல் நடத்திய மர்ம நபர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தியதால் அசாதாரண சூழல் நிலவியது. இந்த சம்பவத்தில் 3 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இந்த சம்பத்தை கண்டித்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**சென்னை :** சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு எஸ்.கே.எம். ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, விவசாயிகள் சங்க திருவள்ளூர் மாவட்ட செயலாளர் அருள், காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் ஏ.மூர்த்தி, சிபிஐ தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து. உத்திராபதி, சி.பி.எம். தென்சென்னை சந்திரன், மக்கள் அதிகாரம் உள்ளிட்ட எஸ்.கே.எம். கூட்டமைப்பு தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். சென்னை பொறுப்பாளர் லில்லி பாய் நிறைவுரை ஆற்றினார்.

**திருமங்கலம்:** திருமங்கலம் பகுதியில் உள்ள தாலுகா அலுவலகம் முன், தமிழ்நாடு விவசாய சங்கம் மாவட்டச் செயலாளர் மதுரை எஸ்.கே.எம் ஒருங்கிணைப்பாளர் ஜி.சந்தானம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் விவசாய சங்க மாவட்டத் தலைவர்கள் இளங்கோவன், இரவிவர்மா, விவசாய நிர்வாகிகள் மற்றும் பல இயக்கத்தினர் இதில் கலந்து கொண்டு கண்டன உரை ஆற்றினர்.

காஞ்சிபுரம்: காஞ்சிபுரத்தில் எஸ்.கே.எம். விவசாயிகள் சங்க கூட்டமைப்பு சார்பில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (சிபிஐ), தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (சிபிஎம்) சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ விவசாயிகள் சங்கம் சார்பில் ஏ.மூர்த்தி, ஆர்.கோபி, ஆறுமுகம், சிபிஎம் விவசாயிகள் சங்கம் சார்பில் சாரங்கன், கே.நேரு மற்றும் பழங்குடி மக்கள் சங்கம் தோழர்கள் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

## அஞ்சல் துறையை தனியார்மயமாக்கும் முயற்சியை எதிர்க்க வேண்டும்!

### ஆர்.எம்.எஸ். அகில இந்திய மாநாட்டில் அமர்ஜித் கவுர் முழக்கம்

தபால்துறையின் முதுகெலும்பாக செயல்படும் ஆர்.எம்.எஸ். ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மாநாடு சென்னை தி நகரில் தியாகராயர் அரங்கில் நடைபெற்றது.

20க்கும் மேற்பட்ட மாநிலங்களில் இருந்து 700 சார்பாளர்கள் கலந்துக்கொண்டனர். இதில் கலந்து கொண்டு ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் பேசுகையில், ஏ.ஐ.டி.யு.சி சங்கத்தின் அகில இந்திய பொதுச்செயலாளராக மாநாட்டை வாழ்த்துவதாகவும் தபால் துறை ஊழியர்கள் கொரோனா காலத்தில் தன்னலமற்று உழைத்தாலும், மோடி அரசு கொரோனாவால் இறந்துப்போன ஊழியர்களின் குடும்பத்திற்கு முழுநிவாரணம் வழங்கவில்லை என்றும் சாடினார்.

பொதுத்துறை பங்குகளை விற்பது, அவுட் சோர்சிங் முறையை ஊக்குவிப்பது, காண்ட்ராக்ட் முறையை புகுத்துவது இவை எல்லாம் மோடிஅரசின் தொழிளாலர் கொள்கையாக உள்ளது. ஏழை எளிய மக்களின் சேவையில் தபால்துறை முக்கிய பணியாற்றுகிறது. நவீனதொழில்நுட்ப மாற்றத்திற்கு ஏற்றவாறு தபால்துறையை சீரமைத்து ஆட்குறைப்பு செய்யமால் சிறந்த மக்கள் சேவை நிறுவனமாக தபால்துறை செயல்பட அரசு முயற்சிக்க வேண்டும் என்றார்.




## வத்திராயிருப்பில் பாதயாத்திரையை இரா.முத்தரசன் தொடங்கி வைக்கிறார்

இராஜபாளையம் பிஎம்ஆர் மண்டபத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு கூட்டம் நடைபெற்றது. வி.இரவி, இராமச்சந்திரன் ஆகியோர் தலைமை வகித்தார்கள். தி.இராமசாமி தலைமையில் வத்திராயிருப்பு பாதயாத்திரையை மாநில செயலாளர் இரா.முத்தரசன் தொடங்கி வைப்பது, பி.லிங்கம் தலைமையில் சொக்கநாதன் புத்தூர் பாதயாத்திரையை தேசிய நிர்வாககுழு உறுப்பினர் சி.மகேந்திரன் தொடங்கி வைப்பது, எஸ்.செந்தில்குமார் தலைமையில் பரளச்சி பாதயாத்திரையை மாநில நிர்வாககுழு உறுப்பினர் குணசேகரன் எக்ஸ் எம்எல்ஏ தொடங்கி வைப்பது எனவும், தொண்டர்படை பயிற்சி முகாமை 8 இடங்களில் நடத்துவது உள்பட பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டது.

# குறுவை சாகுபடிக்கு காலத்தில் பயிர்க் கடன் வழங்க வேண்டும்

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரிடம் அளித்துள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

ஜூன் 12ல் தண்ணீர் திறந்து குறுவை சாகுபடி மேற்கொள்ளும் போது, தென்மேற்கு பருவமழை முடிவடையும் காலம் மற்றும் வடகிழக்கு பருவமழை தொடங்கும் காலமான அக்டோபர் மாதத்தில் குறுவை அறுவடை வருவதால் ஒவ்வொரு ஆண்டும் மகசூல் பாதிப்புக்குள்ளாகிறது என்பதால் எங்கள் சங்கம் சார்பில் மே முதல் நாளே மேட்டூர் அணையை திறந்துவிட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நான் கோரிக்கை மனு அனுப்பி இருந்த நிலையில், மே மாதம் 24ஆம் நாளன்றே மேட்டூர் அணை திறந்தது என்பது பாராட்டத்தக்கது. தமிழக முதல்வரின் கூற்றுப்படி வழக்கமான நிலையை விட 20 சதம் கூடுதலாக குறுவை சாகுபடி செய்ய வாய்ப்புள்ள நிலையில் அதற்கேற்ப குறுவை சாகுபடிக்கான கீழ்காணும் சிறப்பு திட்டங்களை விவசாயிகள் தமிழக அரசிடம் எதிர்பார்க்கிறார்கள்.

விவசாயிகளின் அச்சத்தை போக்கிட குறுவை அறுவடை நெல் முழுவதையும் தமிழக அரசே முழுமையாக கொள்முதல் செய்திடும் என்ற நம்பிக்கையை விவசாயிகளுக்கு அறிவித்திட வேண்டும். விவசாயிகள் விரும்பும் தரமான விதைகளை காலத்தில் மானியத்தில் கொடுத்திட வேண்டும்.

குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்கும் காலத்தில் தொழில்நுட்பகுழு பரிந்துரைப்படி பயிர்க் கடன் கிடைக்க செய்திட வேண்டும். தேவையான இரசாயன உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் காலத்தில் கிடைத்திட நடவடிக்கை வேண்டும். ஒவ்வொரு பாசன ஆறுகளிலும் கடைமடை வாய்க்கால்கள் வரை தண்ணீர் செல்வதை உறுதிப்படுத்திட வேண்டும். மேலும் தமிழ்நாடுஅரசை ஆராதிக்கும் முறையில் குறுவை சாகுபடிக்கு சிறப்புத் தொகுப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்திட வேண்டுகிறோம்.

பலவயல்களில் இயந்திர நடவுசெய்திட வாய்ப்பில்லாததால் கை நடவுக்கும் 50 சத மானியம் அளித்திட வேண்டும். உழவு மானியம் 50 சதம் தொகை வழங்கிட வேண்டும். குறுவை சாகுபடி இல்லாத வெளி மாவட்டங்களிலிருந்து கூடுதல் பெல்ட் வகை அறுவடை இயந்திரங்களை அறுவடைகாலத்தின் போது எடுத்து வந்து அரசுநிர்ணய வாடகைக்கு விவசாயிகளுக்கு கொடுத்திட வேண்டும். பெரும்பகுதி விவசாயிகள் 5 குதிரை மின்சக்தி மோட்டார்களை பயன்படுத்துவதால் மூன்று அங்குல விட்ட தரமான குழாய்களை 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும். குறுவை சாகுபடி மற்றும் தோட்டக்கலை பயிர்களை பாதுகாக்க 50 சத மானியத்தில் இரும்பு கம்பி வேலிகள் வழங்கிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 74. மக்கள்

**நம்மினும் நம்மக்கள் நாஅட்டம் நீட்டமே**
**நம்மேல் இருப்ப தவர்.**

தலைமுறைக்குத் தலைமுறை அறிவு வளர்ச்சி பெற்று வருகின்றனர். அதற்கு காரணம் அவர்கள் தமது முன் தலைமுறையினரின் தோள்மேல் நிற்பதுதான். (தம் முன்னவர்களின் அறிவுடன் தம் அறிவை இணைத்து வளர்த்துக் கொள்வதால்தான்! தம்மில் தம்மக்கள் அறிவுடைமை – திருவள்ளுவர்)

**மகப்பேறு மாபெரிய பேறு மிகப்பேறு**
**மேதினிக்கு மேவூஉம் பேறு.**

மக்களைப் பெறுதல் என்பது கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். அம்மக்கள் உலகுக்கு உழைப்பவரானால் மிகப்பெரிய நற்பேராகும்.(இனப் பெருக்கம் இல்லையேல் உலகம் இல்லை என்க).

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

மத்தியில் ஆளக்கூடிய மோடி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து தமிழகம் முழுவதும் இடதுசாரி கட்சிகளும், விடுதலை சிறுத்தை கட்சியும் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்ட செய்தி முழுவதும் ஜனசக்தியில் வெளிவந்துள்ளது சிறப்பு.

– **கே.ஹரிராஜன்,** மாங்காடு

**ஆசிரியர் ஜனசக்தி,**

நீண்ட காலத்திற்கு முன்பே ஒரு பிரசுரத்தில் தன்னை ஒரு சோஷலிஸ்ட் என்று இந்தியாவில் தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டவர் சுவாமி விவேகானந்தர் என்கிற செய்தி ஆர்.எஸ்.யாதவ் கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது. இப்படிப்பட்ட ஆளுமைகளைத் தான் தனக்குரியவர்கள் என ஆர்.எஸ்.எஸ். அபகரிக்க முயலுகிறது என்பதை தெளிவாக விளக்கியுள்ளார்.

– **எஸ்.கணேசன்,** செங்கம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

நாடு விடுதலை அடைந்த உடனேயே இரத்தாகியிருக்க வேண்டிய தேசத்துரோக சட்டம் 124–ஏ இன்னும் நடைமுறையில் இருப்பதுதான் தேசத் துரோகம் ஆகும். கீ.சு.குமார் கட்டுரை அருமையாக விளக்கி இருக்கிறது.

– **சி.ஜெயவேல்,** மாதவரம், சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

மோடிபேசுவதுஉண்மைதானா? என்ற கட்சிக் கடிதத்தில், பொய் சொல்லக்கூடாது பாப்பா என்ற பாரதி வரியின் மூலம் பொய்யையே மூலதனமாக்கி பவனி வரும் பிரதமர் மோடிக்கு தோழர் இரா.முத்தரசன் சாட்டை அடி கொடுத்துள்ளார்.

– **ராஜேந்திரன்,** ஒரத்தநாடு




## யாதும் ஊரே யாவரும் கேளீர் நூல் வெளியீடு

திருச்சி வாசிப்போர் களம் ஒருங்கிணைத்த ஆணவ படுகொலைகளும் இந்துத்துவ கோட்பாடும் என்ற கருத்தரங்கு நிகழ்வில் கவிஞர் துரை சண்முகம் அவர்கள் எழுதிய யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கவிதை நூல் வெளியிடப்பட்டது. ஆணவக்கொலைகெதிராக வழக்காடி வென்ற சமத்துவ வழக்கறிஞர் ப.பா. மோகன் வெளியிட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின், மாநில குழு உறுப்பினர் ஸ்ரீதர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் எம். செல்வராஜ், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற தொகுதி செயலாளர் தமிழ் ஆதன், மதுரை அமைப்பாளர் கருப்பையா ஆகியோர் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டனர்.

பெரியார் பல்கலைக்கழக சுற்றறிக்கை ரத்து:

## மாணவர் பெருமன்றம் வாழ்த்துகள்

"பல்கலைக்கழக துறைகள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளில் மாணவர்கள் அரசியல் அமைப்புகளின் பெயரில் பரப்புரைகள் மேற்கொள்வதை தடைசெய்யப்படுகிறது" என்று பெரியார் பல்கலைக்கழகம் சுற்றறிக்கை அனுப்பியிருந்தது. இதற்கு அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் உள்ளிட்ட மாணவர் அமைப்புகள், அரசியல் கட்சிகள், ஜனநாயக அமைப்புகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து ஜனநாயக விரோத சுற்றறிக்கையை பெரியார் பல்கலைக்கழக நிர்வாகம் திரும்பப் பெற்றுக் கொண்டது.

கல்வி வளாகங்களில் மாணவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க குரல் கொடுத்த அனைவருக்கும், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், தலைவர் மௌ.குணசேகர் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

## கோவில்பட்டி எஸ். வேலுசாமி மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முத்த உறுப்பினரும், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரில் கட்சி அமைப்பை நிறுவிய தோழர்களில் ஒருவருமான தோழர் எஸ். வேலுசாமி (82) ஜூன் 04 அன்று சங்கரலிங்கத்தில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையடையந்தோம்.

சங்கலிங்கபுரம் மில் தொழிலாளி சண்முகத் தேவர் சீதையம்மாள் தம்பதிகளின் மகன் வேலுசாமி, அண்மையில் காலமான தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் எஸ்.அழகுமுத்துப்பாண்டியனின் மூத்த சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. தோழர் எஸ். வேலுசாமி கோவில்பட்டி நகர் மன்ற உறுப்பினராக செயல்பட்டு, மக்களின் நன்மதிப்பை பெற்றவர். இவரது மனைவி திருமதி கோமதியம்மாள், நான்கு மகன்கள், நான்கு மகள்கள் இருக்கின்றனர்.

தோழர் எஸ்.வேலுசாமி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

விவசாயத் தொழிலாளர்களின்

கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி

## பிரச்சார இயக்கம்



தருமபுரி மாவட்ட விவசாய தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினைகளான பதினாறு அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் ஜீன்01 முதல் 15 வரை நடைபெறும் பிரசார இயக்க துண்டு அறிக்கை பொதுமக்களுக்கு தருமபுரி வட்டம் வத்தல்மலை, காரிமங்கலம் ஆகிய இடங்களில் துவங்கியது. தருமபுரி வட்டம் வத்தல்மலை கொட்டலாங்காட்டில் ஒன்றிய தலைவர் ஜி ராஜகோபால் தலைமையில், ஒன்றிய செயலாளர் ஜி பச்சாகவுன்டர் முன்னிலையில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ பிரதாபன் அவர்கள் துவக்கி வைத்தார். இதில் சங்க மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை. மாதையன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் லட்சுமணன், ராஜமாணிக்கம் மற்றும் சங்க நிர்வாகிகள் பொதுமக்களை சந்தித்து துண்டறிக்கை வினியோகம் செய்தனர். காரிமங்கலத்தில் நடைபெற்ற நிகழ்சிக்கு சங்க ஒன்றிய பொருளாளர் பி.முருகன் தலைமையிலும் மாவட்ட தலைவர் ஜி.மாதையன் துவக்கி வைத்தார்

பொய் வழக்கில் இளைஞர்கள் மீது தாக்குதல்:

# திருப்போரூர் காவல் நிலைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திடுக!

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் க.பாரதி, மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், குன்னப்பட்டு ஊராட்சி பஞ்சாயத்துக்குட்பட்ட ஜெகதீஷ் நகரில் 60க்கும் மேற்பட்ட இருளர் குடும்பங்கள் கடந்த 10ஆண்டுகளுக்கு மேலாக குடிசை வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதிக்கு அருகில் பல்வேறு கார்ப்பரேட் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் இருளர் மக்களை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தும் நோக்கத்தோடு ஊராட்சி தலைவர் மூலமாகவும், வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாகவும் பல்வேறு தொல்லைகளைக் கொடுத்து வருகின்றனர். மேலும், அம்மக்களையும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க போராடி வருகிற க.ஜெகதீசன், எம்.பார்த்திபன் ஆகியோர் மீது காவல்துறை தொடர்ந்து பொய் வழக்குகள் பதிவு செய்து வருகின்றனர்.

ஜூன் 02 அன்று குன்னப்பட்டு ஊராட்சியில் உள்ள எஸ்.எம்.சி.சி. என்ற கம்பெனியில் அதே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு அடிப்படையில் பெயின்டிங் வேலை, கார்டன் வேலை உள்ளிட்ட வேலை கேட்டனர். அதற்கு அந்த கம்பெனி வேலை தருவதாக ஒப்புக்கொண்ட நிலையில், திமுக பிரமுகர் பையனூர் சேகரின் தம்பி பாபு, குன்னப்பட்டு தலைவரின் கணவர் மோகன் இருவரும் கம்பெனி நிர்வாகத்தை மிரட்டி தோழர்கள் ஜெகதீசன், எம்.பார்த்திபன், மோ. வெங்கடேசன், கி.முனுசாமி, கே.தட்சணாமூர்த்தி, ஜெ. அஜித்குமார், பி.பிரதாபன் ஆகிய ஏழு பேர் கம்பெனி நிர்வாகத்தை மிரட்டி வேலை கேட்டதாக பொய் வழக்கு போட்டுள்ளனர்.

திருப்போரூரில் வருகிற 12ஆம் தேதி இளைஞர் மன்ற ஒன்றியப் பேரவைக்காக கடைவீதியில் வசூல் செய்து கொண்டிருந்த மோ.வெங்கடேசன், கே.தட்சணாமூர்த்தி, பி.விக்கி, கௌரி, கார்த்தி ஆகியோரை திடீரென்று திருப்போரூர் ஆய்வாளர் லில்லி, உதவி ஆய்வாளர் பன்னீர் செல்வம் ஆகியோர் ஜீப்பில் வந்து தீவிரவாதிகளைப் பிடிப்பது போன்று மேற்கண்ட ஐந்து தோழர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று கடுமையாக தாக்கியுள்ளனர். அதைக் கேட்க சென்ற பார்த்திபன், முனுசாமி ஆகியோரையும் காவல்நிலையத்தின் உள்ளே வைத்து கதவை சாத்தியுள்ளனர்.

அதன் பிறகு இரவு 8 மணிக்கு கௌரி, கார்த்தி ஆகியோரை விடுவித்து உள்ளனர். மற்ற ஐந்து தோழர்களை இரவு முழுவதும் காவல் நிலையத்திலேயே வைத்துள்ளனர். மறுநாள் காலை செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். அப்போது நீதிபதி காவல்துறையை கடுமையாக எச்சரித்து, இவர்கள் 5 பேர் அப்படி என்ன குற்றம் செய்தார்கள்? இவ்வளவு அவசரமாக ரிமாண்ட் செய்ய வேண்டும் என்று நீங்கள் சொன்னால் நாங்கள் ரிமாண்ட் செய்ய வேண்டுமா? என்று நானே என் சொந்த ஜாமினில் விடுவிக்கிறேன் என்று தோழர்களை விடுவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல் எந்த முகாந்திரமும் இல்லாமல் வெங்கடேசனின் காரை காவல் நிலையத்தில் வைத்துள்ளனர்.

ஆகவே திருப்போரூர் காவல் நிலைய அதிகாரிகளின் அட்டூழியங்களுக்கு முடிவுகட்டி கார்ப்ரேட் நிறுவனத்துக்கு ஆதரவாக செயல்பட்டு, பழங்குடி மக்களை வெளியேற்ற நினைக்கும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு எங்கள் தோழர்கள் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.



பணி நிரந்தரம் செய்யக் கோரி ஊரக வளர்ச்சி துறை

## கணினி உதவியாளர்கள் உண்ணாவிரதம்

### ஏஐடியூசி ஆதரவு

ஊரக வளர்ச்சி துறையின் கணினி உதவியாளர்கள் கடந்த நான்கு நாட்களாக சென்னை ஊரக வளர்ச்சி துறை இயக்குனரகம் (பனகல் மாளிகை) முன்பு இரவு பகலாக பணி நிரந்தரம் செய்வதற்கு அரசாணை 37,2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டும் இன்று வரை பணி நிரந்தரம் செய்யவில்லை. அரசாணைப்படி பணி நிரந்தரம் கோரி காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராடும் தொழிலாளர்களை சந் தித்து தமிழ்நாடு ஏஐடியூசி துணைப் பொதுச்செயலாளர் கே. இரவி, தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனம் ஏஐடியூசி பொதுச்செயலாளர் ம.இராதா கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்தியும், ஏஐடியூசியின் ஆதரவையும் தெரிவித்துப் பேசினர்.

தஞ்சாவூர் ஆம்னி பேருந்து நிலையத்தை

# கும்பகோணம் அரசு போக்குவரத்து கழக பயன்பாட்டிற்கு அளிக்க வேண்டும்!

### ஏஐடியூசி மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை!

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் செயல்பட்டு வரும் ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர், மாநகர மேயர், துணை மேயர் ஆகியவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கோரிக்கை மனுவிபரம் வருமாறு:

தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்தின் பின்புறம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வரும் ஆம்னி பேருந்து நிலையத்தை கும்பகோணம் அரசு போக்குவரத்து கழகம் மற்றும் தஞ்சாவூர் அரசு விரைவு போக்குவரத்து கழக பயன்பாட்டிற்கு முழுமையாக அளிக்க வேண்டும், தினந்தோறும் மருத்துவ சிகிச்சைக்காக மற்றும் சிகிச்சை பெற்று வரும் உறவினர்களை பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்து செல்கின்றனர். தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவக் கல்லூரிக்கு பேருந்து வசதி உள்ளது. ஆனால் புதிய பேருந்து நிலையத்திலிருந்து செல்பவர்கள் மணிக்கணக்கில் காத்திருந்து வருகின்ற பஸ்ஸில் ஏற வேண்டியுள்ளது. இந்த நிலைமைகளை போக்கிட தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள காம்பவுண்ட் சுவரில் வழி ஏற்படுத்தி மருத்துவக் கல்லூரிக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தி தர வேண்டும், இதனால் புதிய பேருந்து நிலையம் வழியாக ஆம்புலன்சில் வரும் அவசர நோயாளிகள் சில நிமிடங்களில் மருத்துவ கல்லூரிக்கு சென்று ஆபத்தான நிலைமை உள்ளவர்களின் உயிர்களை காப்பாற்ற முடியும். மேலும் மருத்துவக் கல்லூரிக்கு வரும் பேருந்துகள் புதிய பேருந்து நிலையமும், புதிய பேருந்து நிலையம் வரும் பேருந்துகள், மருத்துவக் கல்லூரிக்கும் சென்று வர தாராளமான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தி தர முடியும் என்ற அடிப்படையில்புதியபேருந்துநிலையம் பின்புறம் மருத்துவக்கல்லூரிக்கு வழி ஏற்படுத்தித் தர கேட்டுக் கொள்கிறோம் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை மனுவினை சங்க தலைவர் டி.தங்கராசு தலைமையில் பொதுச் செயலாளர் டி.கஸ்தூரி, மாநில துணை தலைவர் துரை. மதிவாணன், கௌரவத் தலைவர் கே.சுந்தரபாண்டியன் , பொருளாளர் எஸ்.தாமரைச்செல்வன் உள்ளிட்டோர் நேரில் அளித்தனர்.




மழலையர் வகுப்புகளை மீண்டும் தொடங்க வேண்டும்;

# மாணவர் சேர்க்கையை துரிதப்படுத்த வேண்டும்!

## அரசு பள்ளி பாதுகாப்பு கூட்டியக்கம் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு முழுவதும் அரசு துவக்கப் பள்ளிகள் பலவற்றில் மழலையர் வகுப்புகள் துவக்கப்பட்டு கடந்தசில ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாக அரசு பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாடு அரசு அரசு தொடக்கப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் செயல்படுவதை நிறுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை காரணமாக தனியார் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் சேர்க்கை எண்ணிக்கை அதிகமாகி வருவது தெரிய வருகிறது.

தமிழகம் முழுவதும் தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை முன்கூட்டியே நடத்தியுள்ள நிலையில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கைக்கு தமிழக அரசு இதுவரை அனுமதி அளிக்கா தது கண்டிக்கத்தக்கது. இந்த நடவடிக்கைகள் தனியார் பள்ளிகளுக்கு சாதகமாகவும் அரசுப் பள்ளிகளுக்கு பாதகமாகவும் உள்ளது. பொதுமக்கள் மத்தியில் தமிழக அரசு, தனியார் பள்ளிகளுக்கு ஆதரவாக அரசு பள்ளிகளை புறக்கணிக்கும் நிலையை உருவாக்கியுள்ளதோ என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. இந்த நிலைமைகளை போக்கிட தமிழ்நாடு அரசு முன்வரவேண்டும்.

இந்தக் கல்வி ஆண்டிலேயே அரசு தொடக்கப் பள்ளிகளில் எல்.கே.ஜி, யு.கே.ஜி. உள்ளிட்ட மழலையர் வகுப்புகள் துவக்கப்பட வேண்டும், தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை துவக்கி முடிவடைந்துள்ள நிலையில், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உடனடியாக துவக்கப்பட வேண்டும், தமிழ்நாடு முழு வதும் அரசுப் பள்ளிகள் திறக்கும் நாளிலேயே, தனியார் பள்ளிகளும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அரசு அனுமதி பெறாமலும், விதிமுறைகளை மீறியும் செயல்படுகின்ற தனியார் பள்ளிகளை உடனடியாக மூட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு பள்ளி பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் தஞ்சாவூர் பனகல் கட்டிடத்தில் செயல்படுகின்ற மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் முன்பு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அரசுப்பள்ளி பாது காப்பு கூட்டியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் அ.வெங்கடேசன், இரா. பிரசன்னா, கோ.சக்திவேல் ஆகியோர் தலைமை தாங்கினர். கனிமொழி, சரண்யா, கவிதா, ஜான்சி ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கருக்காடிப்பட்டி பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளருமான முத்து உத்திராபதி கோரிக்கை ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். அரசு பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பின் முன்னாள் செயலாளர் என்.குருசாமி, இந்திய மாணவர் சங்கத்தின் மாநில நிர்வாகி ஜி.அரவிந்தசாமி, இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, துணை தலைவர் ஆர்.பி.முத்துக்குமரன் மற்றும் அரசு பள்ளி பாதுகாப்பு கூட்டியக்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்ட

# அட்டை பெற்றவர்களுக்கான உதவித் தொகையை உயர்த்திடுக!

முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்ட அட்டை பெற்றவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கும் உதவித்தொகை கடந்த பதினோறு ஆண்டுகளாக உயர்த்தவில்லை. இதனை உயர்த்த வேண்டி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் தருமபுரி வருவாய் கோட்ட அளவில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழ்நாடு அரசுக்கு பரிந்துரை செய்ய மனு அளித்துள்ளார்.

இந்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு அரசின் வருவாய் துறையின் கீழ் இருக்கும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (நிலை) எண்: 265 வருவாய் (நி.சீ.(2) துறை நாள்: 10.09.2011 படி உழவர் அட்டை பெற்ற குடும்ப மாணவ, மாணவியர்களுக்கு தொழில் பயிற்சி, பட்டயப் படிப்பு, கலை மற்றும் அறிவியல் படிப்பு, இளங்கலை, முதுகலை, கல்வியியல், சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை, வேளாண்மை, செவிலியர் போன்ற படிப்புகளுக்கு ஆண்டு உதவி தொகை குறைந்தபட்சம் ரூ.1,250 முதல் அதிகபட்சம் ரூ.6,750 வரை வழங்கப்படுகிறது. திருமணம், ஈமசடங்கு, விபத்து, கொடுங்காயம், கை, கால் இழப்பு, ஆகியவைகளுக்கும் குறைந்த தொகைதான்,

காசநோய், புற்றுநோய், இதயநோய், நரம்பியல்நோய், கை மற்றும் கால் எலும்பு முறிவு ஆகியவைகளுக்கும் மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பு கடந்த 10.09.2011 அன்று அறிவித்து பதினோறு ஆண்டுகள் முடிந்துள்ளன.

பதினோறு ஆண்டுகளாக கல்வி கட்டணம் பலமுறை உயர்ந்துவிட்டது. விலைவாசி உயர்வு பல நூறு மடங்கு உயர்ந்துவிட்டது. ஆனால், உழவர் பாதுகாப்பு அட்டையின் உதவித்தொகை மட்டும் உயர்வு செய்யவில்லை. மேலும் இந்த திட்டத்தின் கீழ் 60 வயது அடைந்த ஆண் பெண் விவசாய தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள் ஆகியவர்களுக்கு ஒய்வூதியம் கிடையாது.

எனவேதான், முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கும் உதவி தொகைகளை இன்றைய விலைவாசி உயர்வு அடிப்படையில் உயர்த்த வேண்டும் என்றும், 60 வயது கடந்த ஆண் பெண் விவசாய தொழிலாளர்கள், சிறு குறு விவசாயிகள் ஆகியவர்களுக்கு மாதம் ரூ.3000 ஒய்வூதியம் வழங்க வேண்டும் என்றும் தமிழ் நாடு அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு ஜெ.பிரதாபன் தனது கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார்.

# கோவில்மனையில் குடியிப்போர் சங்க மாநாட்டு களப் பணிகள்



தமிழ்நாடு கோவில்மனை குடியிருப்போர் சங்க மாநில தலைவர் வி.அ. பாலசுப்பிரமணியன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை, திருவல்லீஸ்வரர் நகர் நல கழக துணைத்தலைவர் சசிகுமார், ஜகதாம்பிகை நகர் வெல்பர் அசோசியேஷன் செயலாளர் பிரபாகரன் ஆகியோர் கோவில் மனை குடியிருப்போர்கள் சங்கங்களின் நிர்வாகிகளை சந்தித்து ஜூன் 19 அன்று நடைபெற உள்ள வாழ்வுரிமை கோரிக்கை மாநாடு பற்றி விரிவாக எடுத்துரைத்து, அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர்.

சென்னை மேல் அயனம்பாக்கம், அ.மி.கரிவரதராஜ பெருமாள் கோவில் மனை குடியிருப்போர் சங்க பிரிதிநிதிகள் தலைவர் பிரதானம் தலைமையில் சந்தித்துப் பேசினர்.

காலடிப்பேட்டை மார்க்கட்லைன் குடியிருப்போர் நலசங்கம் பொருளாளர் கலைச்செல்வன், செக்கடித்தோட்டம் குடியிருப்போர் நலசங்கம் அப்துல், காலடிப்பேட்டை மார்க்கட்லேன் வீட்டு உரிமையாளர்கள் சங்கம் துணைத் தலைவர் டி.ஏ.செந்தில்குமார் ஆகியோரை அவர்களுடைய இல்லத்தில் தமிழ்நாடு கோவில்மனை குடியிருப்போர் சங்க பிரிதிநிதிகள் சந்தித்து கோரிக்கை மாநாடு பற்றி கலந்துரையாடினர்.

கீழ்அயனம்பாக்கம் அ.மி.பொன்னியம்மன் கோவில்மனை குடியிருப்போர் சங்கம் தலைவர் எம்.கே.செந்தில்குமார், திருவொற்றியூர் மேற்குமாடவீதி குடியிருப்போர் நல சங்கம் சார்பாக உதய குமார், திருவொற்றியூர் பால கிருஷ்ணாநகர் குடியிருப்போர் நல சங்கம் சார்பாக பென்ஜமின், திருவொற்றியூர், நகர கோயில்மனை குடியிருப்போருக்கு பக்கபலமாகவும், சட்ட ஆலோசகராகவும் செயல்படும் பஞ்சாட்சரம் ஆகியோரை சந்தித்து பேசினர்.

திருவொற்றியூர், சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினரும், கோவில் மனை குடியிருப்போரின் பாதுகாவலருமான ஜெயராமனை தொடர்பு கொண்டு பேசி, கோரிக்கை மாநாடு பத்திரிகை அவருடைய இல்லத்தில் அளிக்கப்பட்டது.

திருவொற்றியூர் ஔவைநகர் குடிவாழ்வோர் சங்கம், சார்பாக கோ ஜோதியிடம் பேசி உதயகுமாரிடம் மாநாட்டு அழைப்பிதழ் அளிக்கப்பட்டது.

ஆண்டிபட்டியில் நூல் விலை உயர்வை கண்டித்து

# ஏஐடியூசி - சிஐடியூ சார்பில் ஆர்ப்பாட்டம்

நூல் விலையை நாளுக்கு நாள் உயர்த்தி வரும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து, ஏஐடியூசி – சிஐடியூ சார்பில் ஆண்டிப்பட்டியில் ஒரு நாள் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி நெசவாளர் சங்க மாவட்ட தலைவர் பிச்சைமணி, சிஐடியூ ராமர் தலைமை தாங்கினார். சிபிஐ நகர செயலாளர் முனீஸ்வரன், சிஐடியூ சார்பில் தங்கராசு, ராமர், கணேசன் கண்டன உரை யாற்றினர். சிபிஐ மாவட்ட செயற்குழு உறுப்பினர் பரமேஸ்வரன் நிறைவுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் 100 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

வத்திராயிருப்பு பகுதியில் புறவழிச்சாலை அமைக்க

# அமைச்சர் எ.வ.வேலுவிடம் சிபிஐ மனு

சென்னையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாநில குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ ஆகியோர் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களிடம் கொடுத்த மனுவில் கூறி இருப்பதாவது.

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு தாலுகாவில் வத்திராயிருப்பு பேரூராட்சி வெகு காலமாக செயல்பட்டு வருகிறது. நகர் விரிவாக்கம் பெற்றுள்ளது. பிளவக்கல் அணை மற்றும் பிரபல மகாலிங்கம் சதுரகிரி மலைக்கு செல்வதற்கு வத்திராயிருப்பு வந்து தான் செல்ல வேண்டியது உள்ளது. இதனால் வத்திராயிருப்பு பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்றப்பட்டு மக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி வத்திராயிருப்பு பகுதியில் புறவழிச்சாலை மற்றும் சுற்றுச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது . மனுவை படித்து ஆவன செய்வதாக அமைச்சர் உறுதி கூறினார்.

# விருதுநகரில் மாதர்சங்க அமைப்பு தினம்

விருதுநகரில் இந்திய தேசிய மாதர் சம்மேளனத்தின் அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது . நகர தலைவர் சித்ரா தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் மாரீஸ்வரி மாதர் சங்க கொடியை ஏற்றி வைத்தார் . சிபிஐ மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், நகர செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் பேசினார்கள்.

# ஏஐடியூசி கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் சங்க நிர்வாகக்குழு கூட்டம்

தருமபுரி மாவட்ட ஏஐடியூசி கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட பொருளாளர் சின்னப்பையன் தலைமை வகித்தார். ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் கே.மணி, ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் ஆர்.சுதர்சனன் ஆகியோர் கோரிக்கைகள் குறித்து பேசினர். கூட்டத்தில் அனைத்து கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கு நிரந்தர பணி வழங்க வேண்டும். மாத ஊதியம் ரூ.18 ஆயிரம் வழங்க வேண்டும். பணி நிரந்தரம் செய்ய வேண்டும். கொரோனா கால சிறப்பு ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் உள்ளாட்சி பணியாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் என்.மனோகரன் மற்றும் நிர்வாகி செவ்வந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மலேசியாவில் நடைபெற்ற

# கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வரவேற்பு

மலேசியாவில் நடைபெற்ற கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்று தங்கம், வெள்ளி, வெண்கலம் பதக்கங்களுடன் ஜூன் 01 அன்று வந்த நம் இஸ்கஃப் மாணவ, மாணவியர்கள் மற்றும் கோச் இஸ்கஃப் சீனிவாசன், சீனியர் மாணவர் சீனிவாசன் ஆகியோரை சென்னை விமான நிலையத்திலேயே ஆரவாரத்துடன் வரவேற்று கோச் இஸ்கஃப் சீனிவாசனுக்கு மாநில துணை தலைவர் மூத்த வழக்கறிஞர் க. தேசிங், மாணவிகளுக்கு மாவட்ட பொது செயலாளர் பா.செந்தில்குமார், மாணவர்களுக்கு வழக்கறிஞர் பிரதாப் ஆகியோர் பொன்னாடை போர்த்தி வரவேற்பளித்தனர். இந்நிகழ்வில் பெற்றோர்களும் கலந்துகொண்டு மகிழ்ச்சியுற்றனர்.



# மேகலா பிறந்தாள்

மேகலா பிறந்தாள் என்ற முதல் கதை தொகுப்பின் மூலம் விளிம்பு நிலை மக்களின் திருமணச் சடங்கு தொடங்கி,குழந்தைப்பிறப்பு குறித்த பதிவுகளைத் தந்து, இறப்பின் ஊடே என்ற இறுதி கதை மூலம் மனித இழப்பு தொடர்பான பதிவுகளை முன் வைத்து சொல்லும் வை .ரா. என்ற வை.ராமகிருஷ்ணன். கதைகள் மூலம் மனித வாழ்வின் மீதான ஒரு நெட்டோட்டமான அணுகுமுறையுடன் பலவற்றையும் சொல்லி செல்கிறார்.

இவற்றுள் பங்கீடு, கூட்டாஞ்சோறு, நட்பு உயிர் போன்ற கதைகள் சிறப்பு கவனத்துக்குரியன. அதிலும், குறிப்பாக பங்கீடு என்ற சிறுகதை நம் சங்க மரபின் தொடர்ச்சியை விளக்குவதை காணமுடிகிறது. இக்கதையின் உள் விவகாரங்கள் எப்படி இருப்பினும் தாம் ஈட்டிய வற்றைத் தம்மனோர்க்கும், தம்மோடு இருந்த நாய்க்கும் , சேர்த்து பங்கிட்டுக் கொடுக்கிற மரபின் எச்சத்தை இக்கதை வழியாய் பார்க்க முடிகிறது. அதிலும் குறிப்பாக இதன் வழி வெளிப்படும் விழுமியங்கள் கவனிக்கத்தக்கன.



பாரதியைத் தொடக்கமாகக் கொண்டு வளர்ந்த சிறுகதை வரலாற்றில், ஒரு நவீன திருப்பத்தை புதுமைப்பித்தன் ஏற்படுத்தினார். அவருடன் இணைந்து பலரும் அந்தத் திருப்பத்தில் பயணித்தனர். அந்த பரந்த விரிந்த தளத்தில் தாம் எழுதிய ஒன்பது கதைகளோடு கம்பீரமாக வந்து நிற்கிறார் வை.ராமகிருஷ்ணன்.

சமூக தளத்தில் மட்டுமின்றிப் பொருளாதாரத் திலும் அடிமை நிலையில் இருந்தாலும், அன்றாட வாழ்க்கையை மிகத் துணிவுடன் கேலியும், கிண்டலும் நிறைந்ததாக மகிழ்ச்சிகள் நிறைந்ததாகவும் மாற்றிக் கொண்டு வாழும் வாழ்க்கை போக்கை இவர்கள் கொண்டிருக்கும் பாங்கை வெகு இயல்பாக சித்தரித்துள்ளார். தவிரவும் இன்பத் துன்பங்களை இயல்பாக எடுத்துக்கொள்ளும் பண்புகளையும் தம் இயல்பான மொழியின் துணைகொண்டு இக்கதையின் ஊடே முன் வைத்திருப்பதன் மூலம் இவருடைய படைப்புகள் குறித்தும் அறிய முடிகிறது .

வாழ்க்கை ஒவ்வொரு மனிதனுக்கும் பல்வேறு அனுபவங்களை புலக் காட்சிகளைத் தந்து கொண்டே இருக்கிறது. என்றாலும் சிறார்பருவம் தொடங்கி இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு உட்பட்ட கால எல்லைக்குள் ஆன மனப்பதிவுகள் ஒருவரை படைப்பு சார்ந்து நகர்த்துகின்றன. வை. ரா.வின் கதைக்குள் இருந்தும் இத்தகைய தன்மையைக் காணலாம். எனவே மேகலா பிறந்தநாள் என்னும் நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

**– சமரன்**


**நூலாசிரியர் : வை.ராமகிருஷ்ணன்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்,**
**16, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–14**
**பக்கங்கள் : 112 விலை: ரூ.90**

## நூல் நயம்

# முத்திரைப் பதித்த பொறியாளர்கள்

ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைகளில் ஈடுபடுகிறார்கள். ஒரு துறையில் மிகுந்த ஈடுபாட்டோடு பணி செய்பவர்கள் அந்தத்துறையில் பிரகாசிப்பார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டில் முத்திரை பதித்த பொறியாளர் குறித்த நூல் இது.

தமிழ்நாட்டில் பொதுப்பணித்துறை ஆங்கில ஆட்சியின்போது 1858ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அன்று பெரும்பாலான பொறியாளர்கள் ஆங்கிலோராக தான் இருப்பார்கள். இன்றுபோல் அப்போது பொறியியல் படிப்பதற்கு இந்தியர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படவில்லை , அதையும் மீறி இங்கிலாந்து சென்று பொறியியல் படிக்கும் இந்திய மாணவர்களை ஆங்கிலேயர்கள் பாடாய் படுத்திய கதை இதில் உள்ளது.



இங்கிலாந்தைச் சார்ந்த எட்வர்ட் சகோதரர்கள் வீடு கட்டுவதில் மெயின் ஹால், பெட்ரூம், டைனிங் ஹால், பூஜை ரூம் போன்றவர்களை உருவாக்கியதாக சொல்வார்கள். ஆனால், அவர்களுடைய தாத்தா பிறப்பதற்கு முன்பே, இதுபோன்ற கட்டிடங்களை இந்தியர்கள் கட்டியுள்ளார்கள். வைகை அணையில் நீரைத் தேக்கி பிரிக்கும் மதகு உள்ளது. வைகை அணையில் இருந்து இங்கு வந்து சேரும் தண்ணீரை மூன்று பிரிவுகளாக பிரிந்து செல்கிறது. ஒரு பிரிவு பெரியாற்று கால், மற்றொன்று வைகை ஆறு பகுதிக்கு, மூன்றாவது திருமங்கலம் கால்வாய். மனிதனுக்கு சாலையில் ஒரு வழிகாட்டி. வைகை நீருக்கு பேரணை. காலத்தில் பழமைவாய்ந்த இந்த அமைப்பு மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலம் முதலே ஏற்பட்டதாக பல ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. இதே போன்றது தான் பழமையான கல்லணையை கரிகால் பெருவளத்தான் கட்டி வைத்துள்ளார். 4700 ஆண்டுகளுக்கு முன்பு நாகரிகத்தில் சிறந்த எகிப்து நாட்டில் கட்டப்பட்ட ‘சட்எல்காப்பா‘ அணை கட்டப்பட்ட முதல் வெள்ளத்திலே போய்விட்டது. ஆனால், கரிகாலன் கட்டிய கல்லணை 2000 ஆண்டுகளை தாண்டியும் கம்பீரமாக நிற்கிறது. பெரியாறு அணை கட்டுவதற்கு மூலகாரணமாக இருந்த இருளப்ப பிள்ளை, தண்ணீரை சேர்க்கவும் அதை திறந்து விடவும் செட்டர் கண்டுபிடித்த விஸ்வேஸ்வரய்யா, எஸ்.என்.போஸ் போன்ற பொறியியலில் சாதனை படைத்தவர்களையும் நாம் நினைவு கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டுகிறார். கட்டுமானங்கள் அதன் பிரமாண்டங்களை மட்டுமல்ல,இவை அமைவதற்கு அடித்தளமாக இருந்தவர்களையும் இந்நூலில் நினைவு கூறுகிறார் நூலாசிரியர். தமிழக பொறியாளர்களின் பெருமைகளை இந்நூலில் நாம் அறிந்து கொள்ள முடியும். எனவே இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறேன்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : எஸ். கணேசன்**
**வெளியீடு : சண்முகம் பதிப்பகம் அண்ட் பிரின்டர்ஸ்,**
**136, சத்தியமூர்த்தி மெயின் ரோடு, மீனாம்பாள்புரம், மதுரை 625002**
**பக்கங்கள் : 192 விலை: ரூ.150**

**வாரம் தோறும் வெளிவரும்**

**ஜனசக்தி - நூல் நயம்**

புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## மக்களுக்கான சுகாதாரம்:

# உலக வர்த்தக அமைப்பில் ஊமையாக இந்திய அரசாங்கம்



உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மட்டத் திலான 12 ஆவது மாநாடு இந்த மாதம் 12 முதல் 15 வரை ஜெனிவாவில் நடைபெற உள்ளது. இந்த அமைப்பில் இந்தியா ஒரு முக்கிய உறுப்பு நாடு என்பதோடு ஜி – 77, பிரிக்ஸ் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் அங்கம் வகித்து வருகிறது. எனவே, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், தடுப்பூசிகள் மற்றும் மருத்துவக் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தி, இருப்பு, வழங்கல் மற்றும் அவை தொடர்பான அறிவுசார் சொத்துரிமை போன்ற பல்வேறு பிரச்சினைகளில் இந்தியாவின் கருத்துகள் மற்றும் நிலைப்பாடு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

அத்தியாவசிய மருந்துகள், தடுப்பூசிகள் ஆகியவற்றின் இருப்பு, வழங்கல் மீதான ஏகபோக சக்திகளின் தாக்கம் குறித்த எந்த ஒரு ஆலோசனைக் கூட்டமும் இந்தியாவின் பங்கேற்பில்லாமல் நடைபெறுவதற்கான சாத்தியம் மிகவும் குறைவாகும். மருந்து உற்பத்தியில் மிக முக்கிய நாடான இந்தியா சர்வதேச அளவிலான பேச்சுவார்த்தைகளில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக திகழ்ந்து வருகிறது. ஆனால், இந்திய அரசாங்கத்தின் தற்போதைய நிலை பெரும் விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் உள்ளாகி வருகிறது.

பெருந்தொற்று காலத்தில் காப்புரிமைகள் மீதான ஏகபோகம், மருந்து பரிசோதனை தரவுகள் மீதான கட்டுப்பாடு, தடுப்பூசி மருந்துகள், பரிசோதனைகள் குறித்த தொழில் ரகசியங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்கு பெறுவதற்கான ஒரு திட்ட முன்வடிவை தென்னாப் பிரிக்காவுடன் இணைந்து இந்தியா உலக வர்த்தக அமைப்பில் சமர்ப்பித்தது. அந்த முன்மொழிவு வெய்வர் (**WAIVER**) எனும் பெயரில் அறியப்படுகிறது. டிரிப்ஸ் ஒப்பந்தத்தின் சில குறிப்பிட்ட சரத்துகளிலிருந்து உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகளிடம் இருந்து தற்காலிகமாக விலக்குபெற இந்த முன்மொழிவு வழிவகை செய்கிறது.

மக்களுக்குச் சாதகமான பயன்களை அளிக்காத அறிவு சார் சொத்துரிமை கட்டமைப்பை ஸ்வீகரிக்கும் காலனிய வரலாற்றையே இந்தியாவும் தென்னாப்பிரிக்காவும் இன்றுவரை கொண்டுள்ளன.

தற்போதைய பெருந்தொற்று காலத்திலும் நடைமுறைப் படுத்தக்கூடிய ஒரு தொலை நோக்குப் பார்வையை இந்தியா 1980 களிலேயே கொண்டிருந்தது. அரசாங்க நிதியை முதலீடு செய்து மருத்து உற்பத்தி துறையின் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது, உரிய சட்ட சீர் திருத்தங்களை மேற்கொள்வது ஆகியவற்றின் மூலமாக மருத்துவக் கண்டுபிடிப்புகளைக் காப்புரிமைகளிலிருந்து விடுவித்து, மருந்து மற்றும் தடுப்பூசி உற்பத்தியில் ஒரு மாபெரும் சக்தியாக இந்தியா வளர்ச்சி அடைந்தது. தற்போதைய பெருந்தொற்று சூழலில் கடந்த நூற்றாண்டின் ‘சிறப்பு நிலை கோட்பாட்டை’ நீக்குவதன் மூலம் அறிவு சார் சொத்துகள் கட்டமைப்பில் உரிய சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பதன் மூலம் பல நல்ல பலன்களை இந்தியா உள்ளிட்ட உறுப்பு நாடுகள் பெறக்கூடும்.

வளர்ச்சி அடைந்த நாடுகள் புதிய மருத்துவக் கருவிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி பணிகளுக்கு மிகப் பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. எனினும் வளரும் நாடுகளில் உள்ள லட்சக்கணக்கான மக்களின் தேவைகளும், வாழ்வும் மருந்துப் பொருட்களின் இறக்குமதியைச் சார்ந்தே உள்ளன. பின்தங்கிய மற்றும் வளரும் நாடுகளிடம் தொழில்நுட்ப வசதிகள் இல்லாதது ஒரு தொடர் பிரச்சினையாக இருக்கிறது. ஆராய்ச்சித் துறையில் இந்த நாடுகளின் பங்களிப்பு பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன அல்லது குறைந்த அளவிலேயே பொதுமக்களின் கவனத்தை பெறுகின்றன. அதே சமயத்தில் அறிவுசார் சொத்துரிமை கட்டமைப்பு உருவாக்கியுள்ள ஏகபோக சிக்கல்கள் அந்தந்த நாடுகள் அளவிலான உற்பத்தி மற்றும் மருந்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு இடையிலான பொதுவான போட்டிக்கு தடையாக உள்ளன.

ஒரு சில நாடுகள் மற்றும் நிறுவனங்கள் மட்டுமே மருந்துகள் மற்றும் மருத்துவக் கருவிகள் உற்பத்தியில் தற்போது ஈடுபட்டு வருகின்றன. இதற்கு மாறாக, அறிவுசார் சொத்துரிமை இடையூறுகள் இன்றி, அத்தியாவசிய மருந்துகள், தடுப்பூசிகள், பரிசோதனை முறை மற்றும் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதிலும் அதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்குவதிலும் அதிகப்படியான நாடுகள் முதலீடு செய்வதற்கு ஏற்றவொரு பொதுவான அணுகுமுறையை இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் முன்வைத்தன.

இந்த முன்மொழிவு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பொதுமக்களின் வரவேற்பை பெற்றது என்ற போதிலும் ஒரு சில வல்லரசு நாடுகள் மற்றும் மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சிலவும் இதற்கு கடு மையான எதிர்ப்பை முன்வைத்தன. இது குறித்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு பேச்சுவார்த்தை நீண்டது. இந்தக் காலகட்டத்தில் கோவிட் 19 தடுப்பூசி மற்றும் இதர தீநுண்மிகளுக்கு எதிரான மருந்துகள் விற்பனையின் மூலம் பைசர் எனும் அமெரிக்க மருந்து உற்பத்தி நிறுவனத்தின் வருவாய் நூறு பில்லியன் டாலர் அளவிற்கு உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலக வர்த்தக அமைப்பின் தலைமை பொறுப்பில் உள்ள ஆங்கோசி அகோன்ஜோ ஐவெய்லா கடந்த மாதம் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்ட திட்டத்தை வெளியிட்டார். நோபல் பரிசு பெற்ற பொருளியல் அறிஞர் ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் உள்ளிட்ட பலரும் வரம்பிற்கு உட்பட்ட இந்த திட்டத்தின் பல அம்சங்களை விமர்சித்துள்ளனர். இந்தத் திட்டம் உரிய அதிகாரங்களை கொண்டிருக்கவில்லை என்பதோடு தடுப்பூசிகளுக்கு மட்டுமே பொருந்துவதாக இருக்கிறது.

இப்போதுள்ள வடிவம் மற்றும் உள்ளடக்கத்திலேயே இந்தத் திட்டம் ஏற்கப்படுமானால் நிகழ்காலத்திலும் இனிவரும் காலங்களிலும் மருந்துகள், தடுப்பூசிகள் அதிக அளவில் கிடைத்திட மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு எதிரானதொரு எதிர்மறைப் போக்கினை உருவாக்கி விடும். இதுபோன்றதொரு சூழலில் இந்தியா உறுதியான நிலைப்பாடின்றி தள்ளாட்டத்தில் இருக்கிறது. நடைபெற உள்ள உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டிற்கு முன்னதாக நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் இந்திய அரசாங்கம் ஊமையாக இருப்பது மக்கள் நலனுக்கு எதிரானதாகும்.

## அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகளை அச்சுறுத்தும்

# ஸ்டேக்ஃபிளேசன் [Stagflation]




அமெரிக்க மத்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் தலைவர் பென் பெர்னான்கே நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அண்மையில் அளித்த பேட்டியில் அமெரிக்காவை ஸ்டாக்ஃபிளேசன் எனும் அபாயம் சூழும் என்று கூறியுள்ளார்.

உலகம் முழுவதும் உள்ள மத்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நிதிக் கொள்கைகளை வகுத்திட தீவிரமாக முயன்று வருகிறார்கள். பணவீக்கம் என்பது பண்டங்கள் மற்றும் சேவைகள் விலை உயர்வின் விகிதமாகும். பணவீக்கம் அதிகமாக இருக்கும் சூழலில் சமுதாயத்தில் வேலையின்மையும் அதிகரிக்கும் பட்சத்தில், அத்தகைய நெருக்கடியான பொருளாதார நிலையை ஸ்டாக்ஃபிளேசன் என்று பொருளியல் அறிஞர்கள் எடுத்துரைக்கிறார்கள்.

தப்போது அமெரிக்க உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகள் பல பத்தாண்டுகளாக சத்தித்திராத பணவீக்க அதிகரிப்பை எதிர்கொண்டு வருகின்றன. முதலாளித்துவப் பொருளாதார கொள்கைகளின் விளைவாக பொருளாதார நடவடிக்கைகளில் மந்தநிலை ஏற்பட்டு, தொழில்கள் நசிவுற்று பெருமளவு வேலையிழப்புகளும் உருவாகியுள்ளது. பொருட்கள் பற்றாக்குறை மற்றும் அதீத லாப நோக்கும் இணைந்து விலையேற்றத்திற்கு வழிவகுக்கின்றன. எனவே, பணவீக்கமும் அதிகரிக்கிறது. இவ்வாறு பணவீக்கமும் வேலையின்மையும் ஒரே கால கட்டத்தில் அதிகரிக்கும்போது, ஸ்டேக்ஃபிளேசன் எனும் சூழல் ஏற்படுகிறது.

கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் தீநுண்மி பரவலை தடுத்திட பெரும்பாலான நாடுகளில் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக, உலக அளவில் பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவில் முடங்கிப் போனது. இந்த மந்தநிலையைச் சீர்படுத்திட நிதி மற்றும் வரி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கப்பட்டது. அதன் விளைவாக பணவீக்கம் உயர்ந்தது. உண்மையான பொருளாதார மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் வேலை வாய்ப்பு இன்மையும் அதிகரித்து வருகிறது. எனவே, உயர் பணவீக்கம் மற்றும் வேலை வாய்ப்பின்மை காரணமாக ஸ்டேக்ஃபிளேசன் எனும் அபாயம் அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகளை அச்சுறுத்தி வருகிறது.

தமிழ் இந்து கட்டுரைக்கு பதில்...

# என்றந்தப் பேதை உரைத்தான்!

**‘அரசியல் கலை பெருமன்றம்’ என்றொரு கட்டுரை தமிழ் இந்துவில் வந்திருந்தது. அந்தத் தலைப்பு என்ன சொல்கிறது என்பது, அதை எழுதியவருக்குத்தான் வெளிச்சம்.**

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தை, கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் கெடுத்து விடக்கூடாது என்று உருகோ உருகு என்று உருகுகிறார், பாவம் அந்தத் தமிழ் இந்துக் கட்டுரையாளர். கலை இலக்கியப் பெருமன்ற மாநாட்டிற்கும், கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டிற்கும் ஒரு மூன்றாவது முடிச்சு போட்டு விடவும் முயன்றிருக்கிறார்.

‘கலை கலைக்காகவே’ என்று கருத்து நிலவிய காலத்தில், மேட்டுக்குடியினர் மட்டுமே எழுதுவார்கள், படிப்பார்கள், நடிப்பார்கள், பேசுவார்கள், பார்ப்பார்கள், சாமானிய மக்களுக்கும் கலைக்கும் சம்பந்தம் இல்லை என்று இருந்தது.

கலையும் இலக்கியமும் உழைக்கும் மக்களுக்காகத் தான் என்ற இயக்கத்தை தமிழ்நாட்டில் தோற்றுவித்தது கம்யூனிஸ்டுகள்தான். ஆன்மீக கவி, பண்டிதக் கவி என்றெல்லாம் சொல்லப்பட்ட பாரதியை ஒரு மக்கள் கவிஞனாக தமிழகம் முழுமையும் எடுத்துச் சென்று பரப்பியது கம்யூனிஸ்டுகள் தான். கம்பராமாயணம் போன்ற இதிகாசத்திலும், எல்லாரும் எல்லாமும் பெற்று வாழும் சமதர்ம சமுதாயம் குறித்து கம்பன் கண்ட கனவை எடுத்துச் சென்றது கம்யூனிஸ்ட்டான பேராசான் ஜீவா தான்.

மக்களுக்காகத்தான் கலையும் இலக்கியமும் என்பதை நிலைநிறுத்த ஒரு இலக்கிய அமைப்பு வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்து, தோழர் ஜீவா அவர்களிடம் அப்பொறுப்பை ஒப்படைத்தது. 1961இல் கலை இலக்கிய பெருமன்றம் தோற்றுவிக்கப்பட்ட போது அதன் முதலாவது செயலாளராக தோழர் தா.பாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக காரைக்குடியில் தான் பார்த்த ஆங்கிலப் பேராசிரியர் பணியிலிருந்து விலகி சென்னையில் குடியேறினார். அதன் பின்பு பல ஜாம்பவான்கள் அந்த பொறுப்பில் நின்று தொண்டாற்றியுள்ளனர்.

60 ஆண்டுகளைத் தாண்டி, கலை இலக்கிய பெருமன்றம் ஆயிரக்கணக்கான கலைச் செல்வர்களை ஈன்று கொடுத்துள்ளது. தமிழ்நாட்டுக் கலை இலக்கியத்திற்கு காத்திரமான பங்களிப்புகளைத் தந்திருக்கிறது. இந்துக் கட்டுரையாளர் ஏனோ அதை அரை நூற்றாண்டாகச் சுருக்கிவிட்டார்.



இந்தக் கம்யூனிஸ்ட் கட்சியை பார்த்து, ‘கலை இலக்கியப் பெருமன்றம், சித்தாந்தத்தை மீறிப் போனாலும் கம்யூனிஸ்ட் கட்சி அதைக் கண்டு கொள்ளக் கூடாது’ என்று போதிக்க இந்துக் கட்டுரையாளர் முயற்சிப்பதுதான் வேடிக்கை.

“கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநாடு நடந்த மூன்று நாட்களிலும் கட்சி நிர்வாகிகள் சாத்தூரிலேயே முகாமிட்டுள்ளனர்” என்று ஏதோ மாபாதகக் குற்றம் செய்தது போல் இவர் ஏன் கதைக்கிறார்? துவக்க உரையாற்றுவதற்கும், நிறைவுரை ஆற்றுவதற்கும் அவர்களை கலை இலக்கியப் பெருமன்றம் தானே அழைத்திருந்தது. கட்டுரையாளர் செல்வ புவியரசன் அந்த அழைப்பிதழைக் கூடவா பார்க்கவில்லை!

‘இதற்கு முன்பெல்லாம் எழுத்தாளர்கள் சந்திப்பு, விவாதங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பதாகவே இந்த மாநாடுகள் நடந்து முடியும்“என்று கட்டுரை சொல்கிறது. அப்படியானால் இந்த மாநாட்டில் எழுத்தாளர் சந்திப்பு, விவாதங்கள், கலை நிகழ்ச்சிகள் எதுவும் நடக்கவில்லையா? மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் எழுத்தாளர்களே இல்லையா? சாத்தூர் அதிர அருமையான கலைநிகழ்வுகள் நாள்தோறும் நள்ளிரவையும் தாண்டி நடந்துகொண்டிருந்ததை செல்வ புவியரசனுக்கு யாரும் தகவல் சொல்லவில்லை போலிருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சியை மட்டம் தட்டுவதாக எண்ணிக் கொண்டு, அந்த அருமையான மாநாட்டையே கொச்சைப்படுத்தியிருக்கிறார். கலை இலக்கியப் பெருமன்ற பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் மருத்துவர் த.அறம், கலை இலக்கியத்துடன் அவ்வளவாக நெருக்கமில்லாதவராம். எந்தத் தெர்மா மீட்டர் கொண்டு இதை புவியரசன் சோதித்துப் பார்த்தார் எனத் தெரியவில்லை.

அறம், கலை இலக்கியப் பெருமன்றத்தின் விருதுநகர் மாவட்ட செயலாளராக நீண்ட காலம் பணிபுரிந்து கொண்டிருக்கிறார். கலை இலக்கியத்திற்கு அவர் பரிச்சயமே இல்லாதவர் என்றால், எப்படி இவ்வளவு பெரிய மாநில மாநாடு நடத்தும் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது. காலமெல்லாம் மறக்க முடியாத அளவுக்கு, களைகட்டிய மாநாட்டை நடத்திய திறமை ஒன்று போதுமே மருத்துவர் அறம் அவர்களின் திறமையைப் பறைசாற்ற!

தமிழ்நாடு முழுக்க ஆய்வு நடத்தி, விருதுநகர் மாவட்டத்தில் மக்களால் கொண்டாடப்படும் மருத்துவராக த.அறம் அவர்களைக் கண்டறிந்து, “மக்கள் மருத்துவர்” என பட்டம் தந்ததே, தமிழ் இந்து பத்திரிக்கை தான். மக்களோடு இருக்கிறார். மனிதநேயம் ததும்பப் பணிபுரிகிறார். புகழ்பெற்ற எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி அவர்களின் புதல்வராக, பிறந்ததிலிருந்து இலக்கியத் தொடர்போடு இருக்கிறார். சாய்வு நாற்காலிகளில் சஞ்சாரம் செய்து கொண்டிராமல், மக்களோடு களத்தில் இருக்கும் த.அறம், கலை இலக்கியப் பெருமன்ற செயலாளர் பொறுப்புக்குப் பொருத்தமானவர் என்பதாலேயே மாநாடு அவரைத் தேர்ந்தெடுத்து இருக்கிறது. இதில் புவியரசனுக்கு என்ன பொறாமை?

கலை இலக்கியப் பெருமன்றத்தினை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிடம் இருந்து காப்பாற்றி வாழ வைப்பதற்கு, பாவம் இந்தத் தமிழ் இந்து புவியரசன் போராடுகிறாராம்! கேப்பையில் நெய் வடிகிறது என்கிறார்கள்.

கலை இலக்கியப் பெருமன்றம் போன்ற ஒரு அமைப்பை, கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் செலுத்தப்படும் ஒரு வாக்குக்காக, கட்சி சிதைத்துக் கொண்டிருக்கிறது என்று ஒரு கம்யூனிஸ்டு எதிர்ப்பு கற்பனைக் கதையை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு புவியரசன் தந்திருக்கிறார்.

யாரைத் திருப்திப்படுத்துவதற்காக இது செய்யப்படுகிறது, இதன் பின்னே யார் யார் இருக்கிறார்கள், அந்தச் செய்திக் குழுமத்தின் பிரச்சனைகள் என்னென்ன என்பது பற்றி நமக்கும் தெரியும் என்றாலும், அதைப்பற்றி ஆராய்ச்சியில் இறங்கி ஜனசக்தியின் தரத்தை நம்மால் தாழ்த்த முடியாது.

யமுனா ராஜேந்திரன் தனது முகநூலில் குறிப்பிட்டுள்ளவாறு “கஇபெம இலக்கியம் உள் அரசியலை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். வெட்டிப்பயல் வேலையை விட்டுவிட்டு இந்துக் குழுமம் பற்றி ஆராய்ச்சி செய்கிற வேலையைப் பாரு அன்பே..”

- ஆதவன்

பரமக்குடியில் கலைஇலக்கியப் பெருமன்றம் சார்பில்

## மாணவர் ஆளுமைத் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சாத்தூர் மாநில மாநாட்டு தீர்மானங்கள் விளக்க சிறப்புக் கூட்டமும் மாணவர் ஆளுமைத் திறன் போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசளிப்பு நிகழ்ச்சியும், பரமக்குடி ஆயிர வைசிய மெட்ரிக் பள்ளியில் பள்ளி முதல்வர் ஆர்.ஜெயபிரமிளா தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது. முன்னிலை வகித்த ஆயிர வைசிய மெட்ரிக் பள்ளியின் தலைவரும் பரமக்குடி நகர்மன்ற முன்னாள் தலைவருமான ராசி என். போஸ் வாழ்த்துரை வழங்கினார். மாநில மாநாட்டு தீர்மானங்களை விளக்கி, மாவட்டச் செயலாளர் ந.சேகரன் பேசினார். மண்ணின் படைப்பாளி உரப்புளி நா.ஜெயராமன் ஜவஹர்லால் நேரு பற்றி சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நிர்வாகிகள், பெ. ராமசாமி, அரவிந்தன., எம்.ஆர்.கங்காதரன், வே. ராஜேந்திரன், வே.சேதுராஜன், ஆதிரெத்தினம், செல்வராஜ், (ஏஐடியூசி) சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகள் சங்கத் தலைவர் ஹாரிஸ் உள்பட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

## மாநில மாநாட்டு சுவர் விளம்பரம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது மாநில மாநாடு ஆகஸ்ட் மாதம் 6, 7, 8, 9 தேதிகளில் திருப்பூர் மாநகரில் நடைபெற உள்ளதை ஒட்டி திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுகா குழு சார்பில் உடுமலை நகரில் சுவர் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.












JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 11.06.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




**டி. ராஜா**
@ComradeDRaja

# வெட்கக் கேடு, பிரதமரே

**‘எட்டு ஆண்டு கால ஆட்சியில் தனது அரசு மக்கள் வெட்கப்படும் எதனையும் செய்யவில்லை’ என மோடி பெருமிதம் தெரிவித்தது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா பின்வரும் டிவிட்டர் செய்தி வெளியிட்டுள்ளார்:**

அன்புள்ள பிரதமர் மோடிஜி,

வெட்கமில்லாமல் இருப்பது காற்றில் கோட்டை கட்டும் வார்த்தை ஜம்பப்பேர்வழிகளின் குணாம்சம்; அது மக்கள் மீது பரிவுடைய முதிர்ச்சி பெற்ற அரசியல் தலைவர்களிடம் காணப்படுவதல்ல. அது உங்களைத் தந்திரக்கார விற்பனையாளர் ஆக்குகிறதே தவிர கருணையுடைய தலைவராக்கவில்லை.

உங்கள் பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் மக்கள் தங்களிடமிருந்த அனைத்தையும் இழந்து, வங்கிகள் முன் நீண்ட வரிசையில் காத்திருந்து, கடும் இன்னல்களுக்கு ஆளாகி, துன்பப்பட்டனர், பட்டினியில் தள்ளப்பட்டனர். பாடுபட்டுத் தாங்கள் சம்பாதித்தப் பணத்தை மாற்றுவதற்காகக் காத்திருக்கையில் சிலர் தங்கள் உயிரையும் விட்டனர். அதன் பிறகும் வெட்கமில்லையா?

வெறும் நான்கு மணிநேர அறிவிப்பில் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கால் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், பெண்கள் குழந்தைகளோடு குடும்பம் குடும்பமாக நாடெங்கும் சுட்டெரிக்கும் வெயிலில் ஆயிரக்கணக்கான மைல் தொலைவு சாலைகளில் நடையாய் நடந்தனர். மக்கள் எண்ணிப் பார்க்க முடியாத துயர்கள், வலிகள், வேதனை, வாழ்வாதார இழப்பு அனைத்தையும் சந்தித்தனர். அதன் பிறகும் வெட்கமில்லையா?

மகாராஷ்ட்டிராவின் அவுரங்காபாத்தில் நடந்த துயர் மிகுந்த நிகழ்வை நினைக்கலாமா? தங்கள் கிராமங்களை நோக்கி இரயில்வே தண்டவாளப் பாதையில் நடந்து சென்ற பதினைந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். வேலை தேடி பல மைல் தொலைவு பசியோடும். நம்பிக்கை இழந்தும் நடந்து பயணித்தவர்கள் இறுதியில் மரணத்தைச் சந்தித்தனர். அதன் பிறகும் வெட்கமில்லையா?

கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் தவறான நிர்வாக முறை கிரிமினல் குற்றத்தின் காரணமாக ஆயிரமாயிரமாக நமது மக்கள் மூச்சுத் திணறி செத்தார்கள். தொற்று பீடித்தாலும் நம்பிக்கையுடன் மருத்துவ மனை சென்றனர். அங்கே அவர்கள் சந்தித்தது, உயிர் வளியாம் ஆக்ஸிஜன் பற்றாக்குறை, மருத்துவமனைகளில் படுக்கைகள், உயிர் காக்கும் முக்கிய மருந்துகள் பற்றாக்குறை. அதன் பிறகும் வெட்கமில்லையா?

கங்கை ஆற்றில் செத்த மனித உடல்கள் மிதப்பதைக் கண்டு தேசமே கல்லாக உறைந்து போனது. மக்களுக்குத் தாங்கள் நேசித்த உறவுகளின் இறந்த உடல்களுக்குக்கூட இறுதிச் சடங்கு நடத்த முடியாது போனது. அப்படியும், அதன் பிறகும் வெட்கமில்லையா?

வேலையில்லா திண்டாட்டம் நமது இளைஞர்கள், மாணவர்களின் எதிர்காலத்தைப் பெரும் நோயாகப் பீடித்துள்ளது. இரண்டு கோடி பேர்களுக்கு வேலை அளிப்பதாகத் தேர்தலில் நீங்கள் உறுதி மொழி தந்தீர்கள். அதற்கு மாறாக நமது இளைஞர்களும் மாணவர்களும் பாதுகாப்பின்மை, நிச்சயமற்ற தன்மை மற்றும் போலீஸ் தடியடி இவற்றைத்தான் சந்தித்தனர். அதன் பிறகும் வெட்கமில்லையா?

நமது மக்களிடம் மிச்சம் மீதியாக இருப்பதையும் பணவீக்கம் தின்று தீர்க்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு வானைத் தொடுகிறது. ஆனால் உங்கள் நண்பர்களோ தங்கள் கஜானாக்களை நிரப்புகிறார்கள். இரண்டு வேளை உணவுக்கு வழி இன்றி மக்களோ அல்லல் படுகிறார்கள். அதன் பிறகும் வெட்கமில்லையா?

இதற்கு முன் வரலாறு காணாத சமத்துவமின்மையை நமது நாடு சந்திக்கின்றது. ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையே இடைவெளி அதளபாதாளமாகப் பிளவுபட்டிருக்கிறது. மேல்மட்டத்தில் செல்வக் குவிப்பு அச்சுறுத்தும் மட்டத்தில் உள்ளது. உங்கள் நண்பர் உலகின் ஆறாவது பெரும் பணக்காரர் ஆகியுள்ளார். ஆனால் உலகப் பட்டினி குறியீட்டுப் பட்டியலில் நாடு 101 இடத்தில். அப்படியும், அதன் பிறகும் வெட்கமில்லையா?

**க்ரோனி முதலாளிகளால் பொதுச் சொத்துகள் கொள்ளை அடிக்கப்படுகின்றன. நமது பொருளாதார அடிப்படைகள் திட்டமிட்ட முறையில் சீர்குலைத்துப் பிய்த்து எறியப்படுகின்றன. நீங்களோ ஐந்து லட்சம் கோடி அமெரிக்க டாலர் பொருளாதாரத்திற்கு உறுதி அளித்தீர்கள். ஆனால் நமது தேசம் பொருளாதார இறையாண்மையை இழந்து விட்டது, அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்புச் சரிகிறது; மற்றும் வேலை இழப்புகள், கட்டுப்பாடற்ற வகையில் பொதுத்துறை நிறுவனங்கள் விற்பனை இவற்றைத்தான் நமது தேசம் சந்திக்கிறது. அப்படியும், அதன் பிறகும் வெட்கமில்லையா?**

கடந்த எட்டு ஆண்டுகள் நமது தேசத்தின் மதிப்புறு விழுமியங்களான மதச்சார்பின்மை மற்றும் மக்கள் நலவாழ்வு கோட்பாடுடைய அரசு முறை போன்றவற்றின் மீது மிகப்பெரும் சேதாரத்தை ஏற்படுத்தி விட்டது. கடந்த எட்டு ஆண்டுகள் நமது சமூகக் கட்டமைப்பைக் குலைத்து விட்டது. தலித்கள் மற்றும் பெண்கள் மீது தாக்குதல்கள் அதிகரித்துவிட்டன. கடந்த எட்டு ஆண்டுகள் உறுதிமொழிகளை உடைத்தெறிந்த முடிவற்ற வரறாற்றின் காலமாகத் தொடர்கிறது. அப்படியும், அதன் பிறகும் வெட்கமில்லையா?

வெட்கக் கேடு உங்களுக்கு!

நன்றி: நியூஏஜ், தமிழில்: **நீலகண்டன்**

---

### ஜூன் 19-ல் கோவில் மனைகளில் குடியிருப்போர், கடைகள் வைத்திருப்போரின்

# வாழ்வுரிமை கோரிக்கை மாநாடு

**19.06.2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணி முதல் இரவு 07.00 மணி வரை சென்னை சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் உள்ள பொதிகை தொலைக்காட்சி நிலையம் அருகில் அண்ணா கலையரங்கில் கோவில் மனைகளில் குடியிருப்போர், கடைகள் வைத்திருப்போரின் வாழ்வுரிமை கோரிக்கை மாநாடு நடைபெற உள்ளது.**

தாய் தமிழ்நாட்டில் மக்கள்தொகை பெருக்கம் காரணமாகவும், தம் வாழ்வாதாரத் திற்காகவும் வேலைவாய்ப்பினைத் தேடியும், குடிபெயர்ந்து, தாய் திருநாட்டில் தலை வைத்துச் சாய்ந்து கொள்ள மனை நிலம் இல்லாத மக்கள், பராமரிப்பும், பாதுகாப்பும் இல்லாமல் காலி மனையாக, மேடுபள்ளமாகவும், புதர் மண்டியும், கல், மண் குவியலாகவும் இருந்த கிராம நத்தம், நத்தம் புறம்போக்கு, சர்க்கார் புறம்போக்கு மற்றும் கோயிலுக்கு சொந்தமான இடங்களில், அதிகாரிகள் மற்றும் கோயில் நிர்வாகத்தின் அனுமதியோடும், தங்கள் கடுமையான உழைப்பாலும், கடன் வாங்கி பணச்செலவு செய்தும் மனை நிலமாக்கி அதில் வீடு, கடை கட்டி குடும்பங்களாக வாழ்ந்து, அடிமனை நிலத்திற்காக கோவில் நிர்வாகத்திற்கு முறை தவறாது `பகுதி’ முறையில் பணம் செலுத்தி வந்துள்ளார்கள். இதில் மற்ற இடங்களில் குடிபெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் பட்டா பெற்று நிம்மதியாக வாழ்ந்து வரும் நிலையில், கோவில் மனைகளில் குடிபெயர்ந்தவர்கள் மட்டும் இன்றளவும் தொடர்ந்து இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

அன்றாட உழைப்பில் கிடைத்த, அற்ப சொற்ப வருமானத்தில் வாழ்ந்து வந்த இவர்களுக்கு 1998ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை, மனைநிலத்தை சதுர அடி கணக்கில், அதன் சந்தை விலை மதிப்பில் கணக்கிட்டு வாடகை வசூலிக்க உத்தரவிட்டது. இதனால் தமிழ்நாடு முழுவதும் லட்சக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டதை, சங்க பொதுச் செயலாளரும், அப்போதைய சட்டமன்ற உறுப்பினருமான வை.சிவபுண்ணியம் சட்டமன்றத்தில், அப்போதைய முதல்வர், கலைஞர் மு. கருணாநிதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அந்த உத்தரவு 27.4.2000ல் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், 2003ல் சட்டப்பிரிவுகள் 34, ஏ, பி, சி, டி புகுத்தப்பட்டு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சந்தை மதிப்பில் வாடகை வசூலிக்க வகை செய்யப்பட்டது. சொல்லொணா துயரத்தில் ஆழ்ந்த கோவில்மனை குடியிருப்போருக்கும், கடை வைத்திருப்போருக்கும் ஆறுதல் அளிக்கும் விதமாக 2007ல் அப்போதைய முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி 456 மற்றும் 2010ல் 298 அரசாணைகளை அறிவித்து காலம் காலமாக கோயில் மனைகளில் குடியிருந்து / கடை வைத்து வாழ்ந்து வருபவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தார்.

2016ல் மேற்கண்ட அரசாணைகளைப் புறந்தள்ளி மறுபடியும் சட்டப்பிரிவு 34–ஏ ன் படி சந்தை மதிப்பில் அறநிலையத்துறையால் வாடகை முன் தேதியிட்டு அறிவிக்கப்பட்டு, அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது பலமுறை முறையிட்டும் அறநிலையத்துறை கண்டு கொள்ளவில்லை.

தமிழ்நாடு கோவில்மனை குடியிருப்போர் சங்கத்தின் கோரிக்கைகளை காது கொடுத்து கேட்ட தற்போதைய அரசு, தீர்வு காண, மூத்த அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக்குழுவை 9.12.2021ல் அமைத்து பரிசீலித்து வருகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து அறநிலையத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் 4.5.2022 அன்று பங்கு கொண்டு மிகச் சிறப்பாக நமது கோரிக்கைகளை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார். அதற்கு அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு பி.கே. சேகர்பாபு, கோவில் மனைகளில் குடியிருப்போர் கோரிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு நல்ல தீர்வு காணும் என்றும், அதுவரை கோவில் மனைகளில் வாழ்பவர்களை வெளியேற்ற இந்த அரசு அழுத்தம் தராது என்றும் உறுதியளித்ததை நன்றியோடு நினைவு கூறுகிறோம்.

கோயில் மனைகளில் குடியிருப்போர் கோரிக்கைகள்:

கோயில்மனைகளில்குடியிருப்பவர்களையும், கடை வைத்திருப்பவர்களையும் ஒட்டு மொத்தமாக ஆக்கிரமிப்பாளர்கள் என்று கூறி அவமதிப்பதை தடுக்க வேண்டும்.



மனை நிலத்திற்கு 1998க்கு முன்பிருந்தபடி பகுதி முறையில் வசூலிக்கும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சதுர அடி கணக்கில் சந்தை மதிப்பில் வாடகை கணக்கிடும் அரசு உத்தரவு 34–ஏ ரத்து செய்யப்பட வேண்டும்.

தானமாகப் பெறப்படாத, கோயிலுக்கு சொத்துரிமை இல்லாத, இடங்களில் வசிப்போர் அறியாமையால் கோயிலுக்கு வாடகை செலுத்தியதாலேயே உரிமை கொண்டாடுவதை நிறுத்தி அங்கு வாழ்பவருக்கே மனைப் பட்டா வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

இனாம் ஒழிப்பு சட்டப்படி ரயத்துவாரி முறையில் கோயில் பெயர் வருவாய்த் துறையில் தவறுதலாகப் பதியப்பட்டுள்ள, குடியிருப்போருக்கே சொந்தமான, கிராம நத்தம், குடிக்காணி, பட்டின நத்தம், பட்டினமனை, அரசு புறம்போக்கு போன்ற வகையான மனைகளில் வசிப்போருக்கு மனையை சொந்தமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோயில் மனைகளின் நில மதிப்பிற்கு மேலேயே வாடகையாகப் பணம் செலுத்தியுள்ள கோயில் மனைகளில் வாழ்வோருக்கு கருணை அடிப்படையில் பட்டா வழங்க வேண்டும்.

நிபந்தனையின்றி பெயர் மாற்றம் செய்ய வேண்டும். அத்தியாவசிய தேவைகளான மின்சாரம், கழிவு நீர், குடிநீர் இணைப்பு பெற தடைவிதிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மனை நிலத்தை கோயில் உரிமையாக்கி, மேல் கட்டுமானத்தை விற்கவும், வாங்கவும் வங்கிக் கடன் பெறவும் ஏற்ற வகையில் உரிமைப்பட்டா வழங்கக் வேண்டும்.

முறையாக பட்டா, இணைப்பட்டா வைத்துள்ளவர்களையும் அச்சுறுத்தி, அதிரடி நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அறநிலையத்துறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீதிமன்றங்களை பொது நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும்.

மேலும், கலைஞர் மு கருணாநிதி முதல்வராக வும், தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அப்போது துணை முதல்வராகவும் இருந்தபோது கோயில் மனைகளில் வாழ்வோரின் வாழ் வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வழிவகைகள் செய்யப்பட வேண்டும். கருணை உள்ளத்துடன் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி வரும் தமிழ்நாடு அரசு மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, சங்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த கோரிக்கை மாநாட்டில் அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சி தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

சரிந்து வரும் தங்கள் வாழ்வாதாரத்தினை நிலைநிறுத்திக் கொள்ள, ஏற்பட்டுள்ள இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, குடும்பம், குடும்பமாக கலந்து கொண்டு நம் பலத்தை நிரூபிக்கும் விதமாக இம்மாநாடு அமைய கோயில் மனைகளில் குடியிருப்போரும் / கடைகள் வைத்திருப்போரும் பெருமளவு கலந்து கொண்டு ஆதரவளிக்க வேண்டுமாய் மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு, தமிழக இந்து சமய திருக்கோவில்களின் வீட்டுமனை வாடகை தாரர்கள் சங்கம், தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்கம், தமிழ் நாடு திருக்கோவில் கடைகள் கட்டிட வாடகை தாரர்கள் நல சங்கங்களின் பேரமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.